# மேதை வேதநாயகம்

PUBLIC LIBRARY
APR 1968
MADRAS
672
4 84

ஆக்கியோன் :

**வித்துவான் வீ. ப. நடராஜன்,**

தமிழாசிரியர்,

பசுமலை உயர்நிலைப்பள்ளி,

பசுமலை.

REGISTRAR OF BOOKS
16 DEC 1954
MADRAS

**மணிப் பதிப்பகம்,**

புதுமண்டபம்,

மதுரை.

பதிப்புரிமை : : விலை அணா 15

# மேதை வேதநாயகம்

ஆக்கியோன் :

**வித்துவான் வீ. ப. நடராஜன்,**

தமிழாசிரியர்,

பசுமலை உயர்நிலைப்பள்ளி,

பசுமலை.

**மணிப்பதிப்பகம்,**

புதுமண்டபம்,

மதுரை.

பதிப்புரிமை

விலை அணா 15

# முன்னுரை

தமிழகம் இன்று பலதுறைகளில் வளர்ந்து வருகிறது. தமிழ் மொழியின் உயர்வுக்குப் பலர் பலவழிகளில் பாடுபடுகின்றனர். தமிழ்ப் பற்று பொதுமக்களிடை பெரிதும் வளர்ந்து வருவது மிக்க நலம் பயப்பதாகும். இளைஞர் தனித் தமிழில் இனிது சொற்பொழிவாற்றுகின்றனர். அரசினர் தமிழ்க் கலைச் சொல் வளத்தைப் பெருக்க முனைகின்றனர். பதிப்பகத்தார் புதிய பல தமிழ் நூற்களை வெளியிடுகின்றனர். தமிழ்த் துறை ஆராய்ச்சிகள் விரிவாகி வருகின்றன.

இத்தகைய விறுவிறுப்பான, விழிப்பான காலத்திலே, விரும்பி ஏற்றுக் கொள்வர் என்ற நன்னம்பிக்கையுடன் இந்த நூலைத் தமிழகத்திற்கு அளிக்கின்றோம்.

வேதநாயகர் சென்ற நூற்றாண்டில் வாழ்ந்தவர். இலக்கியத்திற்கும், இசைக்கும், உரை நடைக்கும் இப்பேரறிஞர் செய்த தொண்டு மிகச் சீரியது. என்றென்றும் மறக்கற்பாலதன்று. சங்க காலத்திற்குப்பின் எழுதப்பட்ட சிறந்த ஒரு அறநூல் 'நீதி நூலா'கும். இவர் எழுதிய நூற்களை மாணவர் படிக்கத்தக்க பற்றுதலை ஊட்டும் நோக்கொடும், ஒழுக்கப் பயிற்சி தரும் நோக்கொடும் இவ்வரலாறு வெளி வருகிறது.

இந்நூல் எழுதுதற்குத் துணை புரிந்த தமிழாசிரியர்கட்கு நன்றி. நல்ல முறையில், குறித்த காலத்தில் நூற்களை அச்சிட்டுதவும் மதுரை **தே நொபிலி அச்சகத்தாரு**க்கும் இந்நூலை வெளியிட்டுத் தமிழ்த் தொண்டாற்றும் மதுரை **மணிப் பதிப்பகத்தாரு**க்கும் கடமை கலந்த நன்றி.

இங்ஙனம்

பசுமலை
15—9—1954

**வீ. ப. நடராஜன்**
தமிழாசிரியர்

# உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | தோற்றுவாய் | 1 |
| 2. | இளமை வாழ்வு | 4 |
| 3. | அரசாங்க அலுவல் | 13 |
| 4. | அறிஞர் தொடர்பு | 23 |
| 5. | வேதநாயகர் நல்ல நீதிநாயகர் | 35 |
| 6. | நீதி நூல் | 43 |
| 7. | மாயூரத் தொண்டு | 66 |
| 8. | முதுமை வாழ்வு | 99 |



மேதை வேதநாயகர்
1826 — 1889

# மேதை வேதநாயகம்

## தோற்றுவாய்

தமிழ் மொழி தனிச் சிறப்பு வாய்ந்த மொழி, இனிய மொழி, இயற்கை மொழி, என எவரும் ஒப்பும் மொழி. செம் மொழி, சீரிய மொழி யெனச் சிறந்தோர் கொள்ளும் மொழி. வடக்கே வேங்கட மலையையும் தெற்கே குமரி முனையையும் மேற்கிலும் கிழக்கிலும் இரு பெருங் கடலையும் எல்லையாகக் கொண்டு விளங்கும் மொழி. எக்காலத்துத் தோன்றியது என எவராலும் வரையறுத்துக் கூறமுடியாத தொன்மை மொழி அன்பைக் காட்டும் மொழி, அருளை வளர்க்கும் மொழி, ஆன்றோர்கள் தோற்றுவித்து வளர்த்த மொழி. அம்மொழி யையே தமிழ்த் தாயெனப் போற்றுகின்றோம். தமிழ்த்தாய் என்றென்றும் இளமையும் அழகும் தன்னிடத்தே கொண்டுள் ளாள். அவள் அழகும், இளமையும் மாறாது இருக்குமாறு அருங்கலைவாணர்கள் அழகுபடுத்தியுள்ளனர். அஃதெவ்வா றென ஆராய்தல் நலம்.

வரலாற்றுக் குறிப்புகள் கிடைக்கின்ற அளவுக்குச் சரிவர ஆழ்ந்து கவனிப்போருக்கு, நூற்றாண்டு தோறும் தமிழ் நூல்கள் செய்து தமிழ்த் தாயின் திருவடிகளில் சேர்த்

# இளமை வாழ்வு

## கவிஞர் பிறப்பு

தமிழ் நாடானது சோழ, சேர, பாண்டிய நாடு என முப் பெரும் பிரிவுகளைக் கொண்டது. சோழ நாடு சோறுடைத்து, பாண்டி நாடு முத்துடைத்து, சேர நாடு வேழமுடைத்து எனச் சிறப்பிக்கப்பட்டன. வற்றாத வளங் கொழிக்கும் காவிரி நதி பாய்ந்து வளப்படுத்துகின்றமையால் 'சோழ நாடு சோறு டைத்து' எனச் சிறப்பிக்கப்பட்டது.

காவிரி நதியானது சோழ நாட்டில் வளம் பெருக்குமாறு செய்த பெருமை சோழ அரசர்களைச் சாரும். குறிப்பாக கரிகாற் பெருவளத்தான் காவிரிக்குக் கால் வெட்டி அணை கட்டி அதை ஆயிரமாயிரம் ஆண்டுகட்கு முன்னே, "தென் னாட்டுக் கங்கையாக" ஓடும்படி செய்தானெனில் அவ்வரசர் பெருந்தகையை அறிஞர் மறக்க இயலாது. இந்த வளம் பொருந்திய நாட்டிலே திரிசிராப்பள்ளியென்பது சிறந்தவோர் பேரூர்.

திருச்சியினின்றும் மதுரைக்குப் போகும் தென்புறச் சாலையிலே கிட்டத்தட்டப் பத்துக்கல் தொலைவிலே குளத்தூர் எனப் பெயர்கொண்டு விளங்குகின்றது ஓர் சிற்றூர். இவ்வூர் ஓர் புகைவண்டி நிலையமாக இன்று விளங்குகின்றது. ஆனால் அந்நிலையத்தில் 'கொளத்தூர்' என்ற எழுத்துக்கள் காணப் படுகின்றன. பண்டைய நாளில் இவ்வூரையடுத்து உள்ள

வோர் குளம் காரணமாக குளத்தூர் என்ற பெயரால் இவ்வூர் அழைக்கப்பட்டுவந்ததாகத் தெரிகின்றது. இவ்வூர்க்கு அண்மையில் உள்ள மலைக்குச் சிரகிரி எனப் பெயர். நம் கவிஞர் பெருமான் வேதநாயகம் பிள்ளையவர்கள் இவ்வூரில் பிறந்தமையால் இவ்வூர் சிறப்புப் பெற்றது.

குளத்தூரிலே வேளாளக் குடும்பங்கள் பல உள்ளன. அவ்வேளாண் குடியிலே மதுரநாயகம் பிள்ளை யென மாண்புடையார் ஒருவர் வாழ்ந்தார். அதிகமான நிலபுலன்கள் அவருக்குண்டு. மதுரநாயகம் பிள்ளை யென்பவர் மாசற்ற அறநெறியில் நின்றவர், நல்ல கொடையாளி என இன்றும் அவ்வூர் மக்களால் நன்கு பேசப்படுகின்றவர். மதுரநாயகம் பிள்ளையினுடைய முன்னோர்கள் குளத்தூரிலேயே குடியேறித் தொன்றுதொட்டு வாழ்ந்தவர்கள், முதன்மையான பாரம்பரையைச் சேர்ந்தவர்கள். சேர, சோழ பாண்டியர்களாகிய மூவேந்தர்கட்கும் முடிசூட்டும் விழாவை நடத்த உரிமை பெற்றவர்கள். எனவே இவர்கள் குலத்திற்குக் **கொங்குராயர் கோத்திரம்** என்ற பட்டப் பெயர் கிடைத்தது. மதுரநாயகம் பிள்ளை தோன்றிய இக்குலம் இவ்வளவு அரசியல் சிறப்பு வாய்ந்தது. இற்றைக்குச் சுமார் இருநூறு ஆண்டுகட்கு முன்னர் அதாவது 18-ஆம் நூற்றுண்டின் மத்திய காலத்தில் மதுரநாயகம் பிள்ளை வாழ்ந்தார். மதுரநாயகம் பிள்ளையும் அவருடைய முன்னோர்களும் சைவ நெறியைப் பின்பற்றி வாழ்ந்தவர்கள்.

பதினேழாம் நூற்றுண்டின் தொடக்கத்திலிருந்தே தமிழ் நாட்டுக்குப் பிறநாடுகளிலிருந்து கிருத்தவப் போதகர்கள் வந்து தங்கள் மதம் பரவும் வகையில் தொண்டாற்ற முனைந்தனர். சமூக சேவைகள் பல செய்தனர். கத்தோலிக்கக் குருமார்

மதுரையைத் தெரிந்தெடுத்து பதினேழாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே பலவிதங்களில் உழைத்துத் தமது மதத்தைப் பரப்பினர். அவர்களின் முயற்சி பலனளித்து வந்தது. சாதிப்பிணக்கு, சமயப்பிணக்கு, இவற்றில் சிக்குண்டு இன்னலடைந்தோர் இந்து மதம் விட்டு இக் குருமார் காட்டிய கிருத்துவ நெறியைப் பின் பற்றினர். மதுரையைத் தமக்கு மத்திய இடமாக வைத்துத் தம் பணி தொடக்கினர். பின்னர் திருச்சி மாவட்டத்தைச் சுற்றிப் பலவிடங்களில் பணியாற்றத் தொடங்கி பலவூர்களில் கிருத்துவ சபைகள் நிறுவினர். அவ்வாறு சபை நிறுவிய ஊர்களில் **ஆவூர்** என்பதொன்று. இவ்வூர் புதுக்கோட்டை மன்னரின் ஆளுகைக்கு அந்நாளில் உட்பட்டிருந்தது. மதகுருக்களின் நிலைகண்ட மன்னவன் தம் ஆட்சிப் பகுதியில் இவர்கள் தங்கவும் நல்வழி காட்டி மக்களைப் பண்படுத்தவும் இடந்தந்தான். இந்துக்கள் இப் புதுவழியைக் கண்டு தம் சைவ வைணவ நெறிக்கு இடையூறு நேரிடுமென்றஞ்சி இக்குருமாருக்குப் பலவித இன்னல்கள் விளைத்தனர். ஆண்டவன் பெயரால் இடுக்கண்கள் அனைத்தையும் பொறுத்துவந்த கத்தோலிக்கக் குருமார் தங்கள் பணியிலே வெற்றி கண்டார்கள். ஆவூர் கிருத்தவர்கள் பலர் வாழுகின்ற பட்டணம் ஆயிற்று. துன்பமடைந்த பலருக்கு இன்பங்காட்டும் இடமாய் விளங்கியது.

மதுர நாயகம்பிள்ளை ஐம்பது வயது நடைபெறும் போது மாருத சூலை நோய் ஒன்றுக்கு ஆளானார். கண்ட கண்ட மருந்தெல்லாம் அருந்தியும் உண்டான பலன் ஒன்றுமில்லை. கோவிலுக்குப் போனார். குல தெய்வங்களை வேண்டினார். உற்ற நோய் நீங்கும் வகை ஒன்றும் தெரியவில்லை. அளவுக்கு மிஞ்சி அவதியுற்றார். உயிர் உடலினின்று நீங்குவதை விரும்பினார். இறைவன்பால் இவ்விண்ணப்பம் ஏறெடுத்தார். இவ்

வாறுக இன்னலுறும் ஓர் நாள் இரவில் கனவொன்று கண்டார். ஆவூருக்குச் சென்றால் அப்பிணி நீங்கும் வழி அவருக்குக் கிட்டும் என்பதே அக்கனு. மறுநாட் காலை அவ்வூர் போய் கத்தோலிக்கக் குருமாரைக் கண்டார். பெருநிலக்கிழாரான மதுர நாயகம் பிள்ளை தம்மைப் பேணிவந்த நிலை கண்ட கத்தோலிக்கக் குருமார், இயேசு பெருமானின் அன்பைக் கூறி, இறைவனை வணங்கும் நிலையை எடுத்துக் காட்டி, சிலுவையொன்றையும் கொடுத்து, சிறிது மருந்தும் தந்தனர். உலகில் இயேசுபரன் வந்தபோது ஊர்தோறும் சென்று நோயாளிகளைக் குணமாக்கிய உயரிய நிகழ்ச்சிகளைக் கேட்ட மதுரநாயகம் மன நிலை மாறியது. சிலுவை அன்பும், சேர்ந்த மருந்தும் மதுர நாயகத்தின் சூலை நோயை மாற்றியது. மட்டற்ற மகிழ்ச்சி எய்தினர். அக்குருமார் பின்பற்றும் அன்பு நெறியிலே தாமும் ஈடுபட்டு இயேசுபெருமானைத் தம் தெய்வமாக ஏற்றார். குடும்பத்தார் அனைவரையும் கூட்டி வந்து கத்தோலிக்க மதத்தைத் தழுவினர். எனவே இவர் குடும்பச் சந்ததியார் இயேசுபெருமான் வழியிலேயே இன்றும் நின்று இலங்குகின்றனர். இவர் பேரனே **சவரிமுத்துப் பிள்ளை** யாவர்.

மதுரநாயகம் பிள்ளையின் ஊரான குளத்தூருக்கு மருத்துவ வல்லுநர் ஒருவர் வந்தார். அவரும் கத்தோலிக்க மதத்தைப் பின்பற்றியவரேயாவர். நல்ல கல்விமான். அரசியல் அலுவலாளராக ஆங்கு வந்து சேர்ந்தார். அவர் பெயர் மரிய சவரியாபிள்ளை. அன்னாரின் அரும் புதல்வி **ஆரோக்கியமரியம்மாள்** என்பவரையே சவரிமுத்துப் பிள்ளைக்கு மண ஏற்பாடு செய்து மணமும் சிறப்புற நடைபெற்றது. இல்லற வாழ்வு இனிது நடந்தேறியது. இவ்விருவருக்கும் இயேசுபரன் திருவருளால் 1826-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 11-ஆம் நாளில் பிறந்த குழந்தையே நம் வேதநாயகர்.

## ஆரம்பக் கல்வி

செல்வர்கள் வீட்டிலே பிறந்த செல்வக் குழந்தை சீரும் சிறப்புமாக வளர்க்கப்பட்டது. நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்த வேதநாயகர் சின்னஞ்சிறு பருவத்திலிருந்தே, வேதக் கதைகள், பாட்டுக்கள், விளையாட்டுக்கள் தாய் தந்தையரிடமே கற்றுவந்தார். கூரிய மதியும் சீரிய ஆற்றலும் சிறு குழந்தையாக இருக்கும்போதே அவரிடம் அரும்பியது. இக்காலத்தில் எந்தச் சிற்றூர்களிலும் ஆரம்பக் கல்விப் பள்ளிகள் நிறைந்து இருப்பதுபோல அக்காலத்தில் இல்லை. ஆனால், எங்கு பார்க்கினும் ஏட்டுப் பள்ளிகள் சிற்றூர்களில் சிறந்து விளங்கின. தமிழ் மொழி தமிழ் நாட்டு ஆசிரியர்களால் தமிழ் முறைப்படி கற்பிக்கப்பட்டு வந்தன. குருகுலக் கல்விமுறை என இன்று பேசப்படுகின்ற கல்வி அன்று ஆட்சியில் இருந்தது. குழந்தை வேதநாயகமும் தமது முதல் எழுத்துப்படிப்பைக் குளத்தூரிலேயே கற்றுக்கொண்டார். தந்தையாகிய சவரிமுத்துப் பிள்ளை தகுந்த கல்விமானாகவும் செல்வவானாகவும் இருந்தமையால் தனது தனயனின் கல்வியில் பெரிதும் அக்கறை காட்டினார். சின்னஞ்சிறு வயதினிலே அவரிடம் கண்ட கல்வி ஆர்வம், பின்னருறும் பெருநிலையைக் காட்டியது. பத்து வயது முடியும் வரையில் குளத்தூரிலிருந்த திண்ணைப்பள்ளியிலேயே தமிழ்க் கல்வி செவ்வனே கற்றுத் தேர்ந்தார்.

## ஆங்கிலக் கல்வி

மேலும் படிக்க வைக்கப் பெற்றோர் விரும்பினர். உயர்நிலைப்பள்ளிகள் இன்றுள்ள அளவுக்கு அன்று இல்லை. திரிசிரபுரம் போன்ற பெரிய பட்டணங்களில்கூட மிகமிக அருகி இருந்தன. திரிசிரபுரத்திலே தியாகப்பிள்ளை என்ற

பெரியார் ஒருவர், ஆங்கிலத்திலும் தமிழிலும் அறிஞராகத் திகழ்ந்தார். அயல் நாட்டினின்று வணிகத்தின் பொருட்டு நம் நாடு வந்த ஆங்கிலேயர் வஞ்சகமாக அரசாளும் பொறுப்பைக் கைக்கொண்டார்கள். அரசியல் மொழி ஆங்கிலேயமாக அன்று ஆகியது, இன்றுவரை இந்நாட்டில் நிலவுகிறது. ஆங்கிலம் படித்தவருக்கு அரசியலில் அலுவல் கிட்டும். ஆங்கிலம் படித்தவருக்கு அன்றைய நாளில் அள வுக்கு மிஞ்சிய மதிப்பும் கிடைத்தது. வெள்ளையருடன் பழகும் வாய்ப்பும், அவர்கள் விள்ளுகின்றதைத் தமிழ் மக்க ளுக்குச் சொல்லுகின்ற நிலையும் ஆங்கிலேயம் கற்றோருக்கு அமைந்தது. ஆக, தியாகப் பிள்ளையைத் திரிசிரபுரத்தில் தெரியாதவரில்லை.

ஆங்கிலேய ஆட்சி ஈண்டு தொடங்கிய காலத்தில் இம் மாநிலம் இருபிரிவாகப் பிரிக்கப்பட்டது. திரிசிரபுரத்தில் தெற்கு மாநில நீதிமன்றம் (Southern Provincial Court) ஒன்று அமைக்கப்பட்டு அதில் பல மாவட்டங்களின் வழக்கு கள் விசாரிக்கப்பட்டன. ஆதலின் அத்திரிசிரபுரத்தில் நீதிமன்றத்தை யொட்டிய அலுவலகம் ஒன்றியங்கியது. அவ்வலுவலகத்தில் தியாகப்பிள்ளை என்பவருக்கு அலுவல் கிடைத்து அப்பணியியற்றி வந்தார். பத்து வயது கடந்த பைய னாகிய வேதநாயத்தைப் படிக்க வைக்கக் குளத்தூரினின்றும் கொண்டு வந்த தந்தை சவரிமுத்துப் பிள்ளை தியாகப்பிள்ளை யவர்களைத் தெரிந்தவர்கள் மூலம் அணுகித் தம் விருப்பத்தை யறிவித்தார். குழந்தை வேதநாயகத்தின் முகப் பொலிவைக் கண்ட தியாகப்பிள்ளை யவர்கள் அன்புடன் அவருக்குக் கல்வி புகட்டுவதாக ஒப்புக்கொண்டார். குருகுலக் கல்வி போன்று கல்வி புகட்டிய அக்காலத்தில், ஆசிரியரும் மாணவ ரும், தந்தையும் மகனுமாக விளங்கினார்களே யன்றி இந்

நாளில் உள்ளது போன்ற நிலை இல்லை. எனவே தியாகப் பிள்ளை யவர்களின் திறந்த உள்ளத்தினின்றும் கற்பித்த ஆங்கிலம் தமிழ் ஆகிய இரண்டும் வேதநாயகரின் உள்ளத்தில் பதிந்து பண்படுத்திற்று. இயற்கையிலேயே எதையும் ஆழ்ந்து கவனித்து எளிதில் பற்றிக்கொள்ளும் வேதநாயகர் சிறந்த அறிவுத் திறமையால் நாளுக்கு நாள் வளர் பிறை போல் கல்வியில் விளங்கினர். ஆங்கிலத்தில் அழகாகப் பேச, எடுத்ததெல்லாம் இனிமையாகப் படிக்க வேதநாயகர் கற்ருர். இளமையிலேயே தமிழ் மொழியில் பற்றுக் கொண்ட இவர் திரிசிரபுரத்தில் படித்துத் திரிகையில் பாட்டுக் களும் பாடத்தொடங்கினர். இலக்கண இலக்கியங்களை ஐயந்திரிபறக் கற்ற இவருக்குக் கவி இயற்றும் வன்மை இயல்பாகவே உண்டாயது. அதையறிந்து தியாகப்பிள்ளை அளவில்லா மகிழ்ச்சி கொண்டு மாணவரை வாழ்த்தினர்; வாயாரப் புகழ்ந்தார். இருபதாம் வயதுவரை திருச்சியிலே இருந்து கல்வி பயின்று வந்தார். தாய் மொழியில் வன்மையும் ஆங்கிலத்தில் சிறந்த அறிவும் பெற்ருர்.

**இளமைக் கவி**

குளத்தூரில் வேதநாயகரின் பெரிய தாயாரை முத்து வேற்பிள்ளை என்பவர் மணந்திருந்தார். முத்துவேற் பிள்ளைக்கு அடைக்கலசாமிப் பிள்ளை யென்ருெரு குமார ருண்டு. வேத நாயகரைக் காட்டிலும் வயதில் மூத்தவர். அவரை அண்ணு வென்றழைப்பர் வேதநாயகர். திருச்சி யிலே இவர் கல்வி கற்றுக் கொண்டிருந்த காலை அண்ணனை அடைக்கலசாமி அங்கு அலுவலொன்றின் காரணமாய் வந்தார். வந்தவரைத் தெருவிலேயே கண்டு வரவேற்கத் தொடங்கிவிட்டார். அருமையான கவி பாடி அண்ணனை வரவேற்ருர்.

" சீர்பெருகு குளத்தூர்வாழ் அடைக்கலவண்
ணகருணைத் தியாகா வா நீ
ஏர்பெருகு நின்சுமுகங் கண்டுவந்தேன்
இன்பமிகு நீயு நானும்
ஓர்திறமே உடன்பிறவாத் தோடமொன்றே
மாமணியும் ஒளியும் போல
நேர்உறவே நிலைநிற்கும் எந்நாளும்
நம்மிருவர் நேசந்தானே

"சிறப்பு மிக்க குளத்தூரில் வாழுகின்ற அடைக்கலமென்ற பெயருள்ள அண்ணு, கருணையும், தன்னலமற்ற சேவையும் கொண்டவனே, வருக. உன் இனிய முகத்தைக் கண்டு ஓடோடியும் வந்தேன். நானும் நீயும் உடன் பிறவாத ஒரே குற்றந்தவிர, இருவரும் ஒரேவித தகுதியுடையவர். நேர்மையான உறவும் நேசமும் நம்மிடை என்றென்றும் நிலைத்து நிற்கும்' இவ்வாறு பொருள்பட எளிய முறையில் கவி ஒன்றினை அவ்விடத்திலேயே இயற்றிப் பாடி வரவேற்றார். வயது இருபதுக்குள் ஊரினின்று வந்த ஓர் உறவினரை வரவேற்கக் கவி பாடினார். இத்திறன் அனைவருக்கும் அமையாதது. இயற்கையாகவே உள்ளத்தில் ஊற்றெடுத்துப்பொங்கி வரும் தமிழ்ச் சுனைதான் இவ்வாறு கவி வடிவில் இலங்கும்.

தவிர திருமண காலங்களிலே இவர் செல்லுகின்ற இடங்களிலே வேடிக்கையாகப் பாடி மகிழ்வித்து வந்தார். மைத்துனர் ஒருவருக்கு மணம் நடைபெற்றது. அங்கு சென்றிருந்த வேதநாயகர் வேடிக்கையாக ஓர் பாடல் பாடினார்.

உழவுத் தொழில் செய்துமக்கு உடம்பெல்லாம் சேறு
ஊத்தை கழுவப் பற்றுமோ ஒன்பதாறு
பழங்கூழ் உண்ட உமக்கு பாலுடன் சோறு
பயப்படாதிரும் உமக்கு ஆயுசு நூறு (மைத்துனரே)

நல்ல உழவுத் தொழில் செய்பவர். தானே செய்தலால் அவர் உடம்பு சேறுகியுள்ளது எனக் காட்டி அத்தொழிலை ஒருவர் செய்கின்ற பெருமையைச் சுட்டிக் காட்டி, மைத்து னரை நையாண்டி செய்ய ஒன்பது ஆற்றில் குளித்தாலும் உடம்பின் சேற்றழுக்குப் போகாதெனவும் காட்டி அன்னுரின் கடின உழைப்பையும் அதிலே குறிப்பாகக் காட்டினுர். மண வாழ்வுக்கு முன்பு பழைய சோறு கிடைத்த மைத்துன ருக்குப் பாலும் சோறும் கொடுக்க மனைவி வந்து விட்டா ளெனக் குறிப்பால் காட்டி, அவரை நீடு வாழ்த்த வேண்டு மென்று நூறுண்டு வாழ்க வெனவும் வாழ்த்துகின்றுர். இக்கவித்திறன் இருபதாண்டுக்குள் அவரிடம் காணப்பட்ட தென்றுல், தமிழ் மொழியையும், நாட்டு வழக்க பழக்கங் களையும் எவ்வளவாய் ஆழ்ந்து ஆராய்ந்து கற்றிருப்பார் என எவரும் அறியலாகும்.

# அரசாங்க அலுவல்

## முதல் அலுவல்

அந்நியர்கள் இந்நாட்டை ஆண்டு வந்த அந்நாளில் ஆங்கிலேயர்கள் மட்டும் ஆட்சியின் உயர்ந்த பதவிகளில் அமர்த்தப் பட்டார்கள். அத்தகைய ஆங்கிலேயர்கள் தமக்குக்கீழ் ஆங்கிலமும் தமிழும் தெரிந்தவர்களை வேலைக் கமர்த்தினர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்திய காலத்தில் திருச்சியில் இருந்து வந்த தென் மாநில நீதிமன்றத்தில் கார்டன் துரை (Mr. Gorden) நீதிபதியாக இருந்தார். முன்னமே மொழி பெயர்ப்பாளராக இருந்தவரும், வேதநாயகத்தின் ஆதி குருவானவரும்ஆன தியாகப்பிள்ளையின் முயற்சியால் வேதநாயகரை கார்டன் துரை வரவழைத்தார். நேரிற் கண்டபோது சீரிய குணங்கள் உள்ளதைத் தெரிந்தும், ஆங்கில மொழியும் தமிழ் மொழியும் ஆக இரண்டிலும் உள்ள அறிவின் திறத்தை யறிந்தும், வேதநாயரைத் தம் அலுவலகப் பத்திரங்கள், கணக்குப் புத்தகங்கள் இவற்றின் காவலராக (Record keeper) இருக்குமாறு வேலை கொடுத்தார். ஆங்கிலங் கற்ற வேதநாயகர் அரசாங்க அலுவலை ஏற்றார். "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்று மனிதப் பிறவியின் கடமையினை மற்றோர்க்குக் காட்டிய தமிழ் நாட்டிலே, பணி யேற்றுக் கொண்ட நம் இளைஞர் கடமையை உணர்ந்து கடிதே தம் பணியைத் தொடங்கினர். பத்திரங்கள் அனைத்தும் பதிவு செய்யப்பட்டு கணக்கிடப்பட்டன. பின்னர் அப்பத்திரங்கள் அனைத்தும் வகைவகையாகப்

பிரித்து இருக்கவேண்டிய இடங்களில் சேர்க்கப்பட்டன. இளமை வயதை உடையதால் சோம்ப லென்பது கொஞ்சமும் இன்றி சுறு சுறுப்புடன் தம் வேலையைக் கவனிக்கலானார். இவ்வலுவலகத்திலிருந்த இவர் பத்திரங்களிற் கண்டவைக ளனைத்தும் செவ்வனே படித்தறிந்து அரசாங்க அலுவல், ஆட்சிமுறை, இத்தகையது என அறிந்து கொண்டார். இரண்டாண்டுக் காலம் இவ்வாறு இனிதே கழிந்தது. உயர்தர அலுவலாளர்கள் அனைவரும் வேதநாயகரின் உண்மை உழைப்பைக் கண்டனர். இவரது உண்மை உழைப்பு மேலதிகாரிகளின் நல்லெண்ணத்தைத் தூண்டியது.

மாவட்ட நீதிமன்றத்திலே (District Court) 1850-ம் ஆண்டில் மொழி பெயர்ப்பாளர் வேலை ஒன்று காலியாயிருந்தது. ஆங்கிலமும் தமிழும் ஒருங்கே கற்றிருந்தவரும் உண்மை உழைப்பாளியும், கடமையை மேலெனக் கருதுபவருமான நம் வேதநாயகர் பெயர் அவ்வேலைக்காக எடுத்துச் சொல்லப்பட்டது. வேறு பலரும் இதே வேலைக்கு மனுச் செய்திருந்தனர். மேஸ்தர் பாய்லோ துரை மாவட்ட அறமன்ற நீதிபதி. அறவழியில் எப்போதும் நின்றவர். அனைவருள்ளத்திலும் அவர் உயர்ந்து மதிக்கப்பட்டார். மனுச் செய்திருந்த அனைவரையும் அழைத்து ஆங்கிலத்தைத் தமிழிலும், தமிழை ஆங்கிலத்திலும் மொழி பெயர்த்து அமைக்குமாறு செய்து சோதித்துப் பார்த்தார். வேதநாயகரின் விளக்கமுற்ற நடைக்கு ஈடாக எதுவுமில்லாத காரணத்தால் அம்மொழி பெயர்ப்பு வேலை அவருக்கே கிடைத்தது. இவ்வாறாக அரசாங்க ஊழியம் அவருக்கு வாய்த்தது.

ஒரு நாட்டை அரசியல் இல்லாமல் ஆளமுடியாது. அரசியலை நடத்திச் செல்ல நல்ல அறிஞர்கள் வேண்டும். நாட்டுப்

பற்றும், மக்கட் பற்றும் மிக்குக் கொண்டு மக்களுக்குத் தொண்டு புரிய நல்லதோர் வாய்ப்பு எனக்கொண்டு அரசியல் அலுவலர்கள் வேலே பார்த்தல் வேண்டும். தன் குடும்பம், தன் சுற்றத்தார், தன் நண்பர்கள் ஆகியோர் வாழவேண்டும் என்ற ஒரே நோக்குக் கொண்டு பணியாற்றுதல் அன்னவருக்கு அழகாகாது. வேறுபாடின்றிப் பணியாற்ற விழைந்தால், தொழிலாளி முதலாளி, ஏழை பணக்காரர், படித்தவர் படியாதவர், சுற்றத்தார் மற்றவர், என்ற பாகுபாடு மாறிவிடும். அனைவருக்கும் ஒரே விதமாக, சட்டம் காட்டுகின்ற அளவில் பணி புரிய இயலும். ஏழைகள் துன்பநிலே எவ்வளவோ மாறும். காசு கொடுத்துக் காரியங்கள் கைகூடச் செய்யும் நிலே போகும். மறைமுகக் கைக்கூலி பெறும் வழக்கம் மறையும். அண்ணனுக்கோர் நீதி அடுத்தவனுக்கோர் நீதி இல்லாமல் ஒழியும். சமன் செய்து சீர்தூக்குங் கோல்போல அலுவலகங்கள், நீதிமன்றங்கள் நின்றிலங்கும். நாடு உயரும். நல்வழி மிகும். மக்கள் வாழ்க்கைத்தரம் மலர்ந்து விளங்கும். ஆக அரசியல் அலுவல் என்ருல் பிறருக்குத் தொண்டாற்ற ஓர் வாய்ப்பு என்ற பெருநோக்கு வெண்டும். அதன்மூலம் கிடைக்கின்ற மாதவருவாய் அதற்கடுத்த இரண்டாம் நிலேயே யெனக் கொள்ளல் வேண்டும்.

இளமையிலே நல்ல பண்பாட்டில் பயிற்றுவிக்கப்பட்ட நம் வேதநாயகர் இத்தகைய உயர் நோக்குக் கொண்டவர். ஆதலின் மக்களுக்குச் சேவையாற்றும் வாய்ப்பை மலர்ந்த உள்ளத்துடன் ஏற்ருர். பத்தொன்பதாம் நூற்ருண்டில் இந்நாடு ஆங்கிலேயரால் ஆளப்பட்டு வந்ததால் அன்னவரின் தாய் மொழியிலேயே நீதிமன்றங்கள் இயங்கின. சட்டங்களும், அரசியலார் ஆணைகளும் ஆங்கிலத்தினின்றும் தமிழுக்கும், குடிகளின் குறைபாடுகளும், வழக்கு மனுக்களும், இன்னே

ரன்ன பிற கருத்துக்கள் தமிழினின்று ஆங்கிலத்திற்குமாக மொழி பெயர்க்க வேண்டியிருந்தது. அளவற்ற கடிதங்கள் கணக்குகள், பத்திரங்கள், பதிவுத்தாட்கள் அனைத்தையும் அன்றன்று கவனித்து மொழிபெயர்த்தார்.

வேதநாயகர் வேலை பார்த்து வந்தது மாவட்ட நீதிமன்றத்திலே யாகும். இம்மன்றத்திற்கு மேலாக நீதி வழங்கும் மன்றம் சதர் கோர்ட்டு (Suddar Court) என அக்காலை வழங்கப்பெற்றது. இன்று அதையே சுப்ரீம் கோர்ட் (Supreme Court) என்கின்றனர். உயர் நீதிமன்றங்களில் முடிவு செய்யப்பட்ட வழக்குகளின் தீர்ப்புக்கள் மாவட்ட நீதிமன்றங்களில் எடுத்துக் காட்டாகக் கையாளப்பட்டன. இன்றைக்கும் அம்முறை இருந்தே வருகிறது. இத்தீர்ப்புக்கள் அனைத்தும் ஆங்கிலத்தில் இருந்தன. வழக்குகளை வாதிக்கும் வழக்குரைஞர்களில் பலருக்கு ஆங்கிலத்தில் போதிய புலமை இல்லை. எனவே அவை தமிழாக்கம் பெறுமானால் அறிஞர் பலருக்கு உதவும். அப்பணியைத் தொடங்கிக் கொஞ்சங் கொஞ்சமாகச் செய்து வந்தார். தாம் மாயூரம் மாவட்ட நீதிபதியாக இருந்த காலத்தில் வெளியிட்ட அவ்வெளியீடு திருச்சியில் மொழி பெயர்ப்பாளராக இருந்த காலத்தே தொடங்கிய பணியாகும்.

இவ்வாறு தம் அலுவலைச் செவ்வையுறச் செய்துவந்த போதிலும் காரியாலயக் கருமங்கள் முடிந்து வீடு சென்றபின் தமிழ் நூற்கள் படிப்பதும் தமிழ்ப் பாட்டுக்கள் இயற்றுவது மாக இருந்தார்.

## தமிழிசைத் தொண்டு

தமிழ் நாடானது விஜய நகர மன்னர்களால் ஆளப்பட்ட காலந்தொடங்கி நாயக்க மன்னர்கள் ஆண்டது வரை தெலுங்கு

மொழி தமிழ் நாட்டில் பெரும்பாலும் நிலவியது. அக்காலத்தில் தமிழில் இசைப்பாட்டுக்கள் பாடும் வழக்கம் இன்றிக் கைவிடப்பட்டது. தெலுங்குக் கீர்த்தனங்களின் தந்தையான தியாகராஜ அய்யர், முத்துச்சாமி தீட்சதர் முதலானோர் எண்ணிலாத தெலுங்குப் பாடல்கள் இயற்றினர். தஞ்சாவூர், திருச்சி, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய தமிழ் மாவட்டங்களில் இசையரங்குகளில் இசைவாணர்கள் முழுதும் தெலுங்குக் கீர்த்தனைகளையே பாடி வந்தனர். தெலுங்கு மொழியானது தமிழ் மொழியின்பால் பிறந்ததென அறிஞர் இன்று பேசிடினும், தமிழ் மொழியில் பாடும் பாட்டுக்கள் இல்லாமல் போனது வியப்புக்குரியதே யாகும்.

இனி, தேவாரம், திருவாசகம் போன்ற இசைப்பண்கள் மட்டும் தமிழில் இயற்ற முடியும் எனவும் கீர்த்தனை மெட்டுக்களில் இயற்ற தமிழ் மொழி இடந் தராதெனவும் நாட்டு மக்களின் உள்ளத்தில் எண்ணம் உதித்தது. தமிழ் மாவட்டங்களிலே தஞ்சை மாவட்டம் இணையற்ற இசைவாணர்களைக் கொண்டது. வேதநாயகர் இசை நிகழ்ச்சிகளை இடைவிடாது கவனித்து வந்தவர். தெலுங்கு மொழி ‘களி தெலுங்கு’ என அறிஞரால் பாராட்டப்பட்ட மொழி எனினும், தாம் அம்மொழியை வெறுக்காவிடினும், இசையரங்குகளில் தமிழின் இன்னோசை கேட்க இடமில்லையே யெனத் தவித்தார். தாமே தமிழில் இசைப்பாட்டுக்கள் இயற்றுவதென முடிவு செய்தார். இசைப்பாடல்களை எவர் நன்கு தாமே பாட முடியுமோ அவர்தாம் உயர்ந்த முறையில் இசைப்பாட்டுக்களை எழுதவும் இயலும். மற்றோரும் எழுதினாலும் அத்துணைச் சிறப்புக்கள் அவற்றில் காண இயலா. இவ்வுண்மையை நன்குணர்ந்த வேதநாயகர் இசைப்பாட்டுப் பாடுகின்ற இரண்டு வித்துவான்களின் நட்பைக் கொண்டார். அரும்

பாடுபட்டு அவர்களிடம் மாணவராக அமர்ந்து இசை கற்றார். தாமே நன்கு பாடும் வல்லமை பெற்றார்.

அக்காலத்திலிருந்தே தமிழில் இசைப்பாட்டுக்கள் எழுதி இசையரங்குகளில் பாடும்படி செய்வித்தார். தமிழில் பாட்டுக்கள் தெலுங்குக் கீர்த்தனைகள் போல் பாட இயலாதென்ற எண்ணத்தைத் தகர்த்தார். ஆக இரண்டு மூன்று நூற்றாண்டுகளாக இசையரங்குகளில் கையாடி வந்த வழக்கம் இன்னாரின் துணிவான முயற்சியால் புரட்சி அடைந்தது. தமிழிலும் பாடலாம் என்ற நிலை தலை யெடுத்தது. இசை யுலகில் எவரும் எப்படியும் பாடிப் போகட்டும் என்று சற்றும் கவலையின்றி உறங்கிக் கிடந்த தமிழ் நாட்டைத் தட்டி எழுப்பிய பெருமை வேதநாயகர் ஒருவரையே சாரும். தெலுங்குக் கீர்த்தனைகளைக் கேட்டுத் தலையாட்டி, இசைகளிலே ரசித்து விட்ட இசையன்பர்கள் தமிழ்ப் பாட்டுக்களை முதலில் எதிர்த்தனர். வீரனுக்கு அழகு வெற்றியில் களி கொள்வதல்ல. தோல்வியைக் கண்டு அஞ்சாமல் மேலும் மேலும் துணிந்து செயலில் இறங்குவதே யாகும். அவ்வாறே தமிழ் மொழியின் முன்னேற்றம் ஒன்றிலே தம்மை முழுதும் ஈடுபடுத்திய அறிஞர் வேதநாயகர் இவ்வெதிர்ப்புக்களைக் கண்டு அஞ்சினாரில்லை. இகழ்ச்சி, வெறுப்பு, எள்ளி நகையாடல், முதலியன கண்டபோது இவை தமக்கல்ல வென்றும் தமிழ்த் தாய்க்கே எனவும் உணர்ந்து கலங்கா உள்ளத்துடன் தம் முயற்சியிலே இறங்கி, படிப்படியாக அதில் பெரும் வெற்றியும் கண்டு, இன்று இவ்விருபதாம் நூற்றாண்டில் வானொலி நிலையங்களிலே வேதநாயகர் பாட்டு இல்லாத நாளே இல்லை யென்னும் நிலைக்கு உயர்த்திய பெருமையால் வேதநாயகரைத் **தமிழிசை வள்ளல்** என்றே இயம்புவது பொருந்தும். திரிசிரபுரத்தில் தொடங்கிய அத்திருப்பணி அவரது இறுதிக் காலம் வரையிலும் மலர்ந்து விளங்கியது.

இனி, அவரின் பாடல்களில் சொல்லழகு, ஓசை நயம், ஈடு காட்ட முடியாத எதுகை அழகு, மோனைப் பொருத்தம் இவை சிறக்கக் காணலாம். இலக்கணம் அறிந்தவரும், இசையன்பர்களும் இவற்றை நன்கறிவர். ஒன்றிரண்டு சான்றுகள் ஈண்டு அறிதல் இவ்வுண்மையினை விளக்கும்.

கடவுளைத் துதிப்பது போல் வாய் பாடும்
கண்ணும் கருத்தும் கண்ட இடமெல்லாம் ஓடும்
திடமாகக் கோயிலுக்குள் தேகம் போய்க் கூடும்
சிந்தனை வெளியிலே திரிந்து திண்டாடும்
புண்ணியம் போல் பாவம் — மனமே
புரிந்தோம் நாம் தினமே

தேகம் மட்டும் கோவிலுக்குள் செல்லும். வாயானது பாடும், உள்ளமோ உணர்வோ இறைவன்பால் இல்லாமல் ஓடும். இவ்வாறு புண்ணியச் செயல் செய்வது போல பாவத்தையே நாம் நாள் தோறும் புரிகிறோம். இக்கருத்துக்கள் எவரும் எளிதில் அறியும் வண்ணம் எளிய தமிழ்ச் சொற்களால் எடுத்துப் பாட்டு வடிவத்தில் காட்டப் பெற்றிருப்பது காணலாகும்.

உன்னை எனக்குக் காட்டையா — காட்டாமல் சும்மா
ஒளித்தென்ன விளையாட்டையா

கறவைதனைப் பிரிந்துகன்று கதறல் போலும்
கணவன்தனைப் பிரிந்து கலங்கும் உத்தமி போலும்
இறகுகள் பறிகொடுத்து ஏங்கும் பறவை போலும்
இருகண்ணும் தெரியாத ஈனக் குருடர் போலும்
ஏங்கினேன் — சுகம்
நீங்கினேன் — துயர்
தாங்கினேன் — மனம்
வீங்கினேன் — ( )

இறைவனை நோக்கி, தனக்கு அவரையே காட்ட வேண்டு மென்று வேண்டுதல் செய்யும்போது, தாயைப் பிரிந்த கன்று கணவனைப் பிரிந்த கற்பரசி, இறகில்லாப் பறவை, கண் ணில்லாக் குருடன் எனத் தன்னைச் சொல்லி இவை போன்று இருக்கும் தன் குறைகளை நீக்குமாறு வெளிப்பட வேண்டு மென விரும்பியிருத்தல் எத்துணை அழகுபடச் சித்தரிக்கப் பட்டுள்ளது. எளிய சான்றுகள் நயம்பட எடுத்தாளப்பெற்றி ருத்தல் எல்லோரும் போற்றுதற்குரியது. எளிய சொற்க ளில் எவரும் பொருள் விளங்கிக் கொள்ளுமாறும், எம்மதத் தோருக்கும் பொதுவான இறைவனைக் குறிக்கும் சொற்களைக் கையாண்டும் எழுதினர். பலவிடங்களில் இவரின் பாடல்கள் பரவின. வேதநாயகர் கவிதை உள்ளம் படைத்தவர் என்ற செய்தியைத் தமிழறிஞர் பலர் அறிந்தனர்.

**மகாவித்துவான் நட்பு**

பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்து, தமிழ்த் தொண்டு புரிந்து, தமிழன்னையை எழில் செய்த அறிஞருள் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களும் ஒருவர் என முன்னமே கூறியுள்ளோம்.

மதுரையில் தமிழறிவுமிக்கார் ஒருவர் பழங்குடியைச் சேர்ந் தவர் ; பண்பாடுகள் மிக்கவர் ; பள்ளிக்கூடம் ஒன்று வைத்து மற்றவருக்குத் தமிழ்ப் பாடம் கற்பிக்கும் கணக்காயராக வாழ்க்கை நடத்தி வந்தார். அவர் பெயர் **சிதம்பரம் பிள்ளை.** தமிழ் உறைவிடம் மதுரை. தமிழை வளர்த்த இடம் மதுரை. தமிழ்ச் சங்கம் தோன்றியது மதுரை. புலவர்கள் போற்று வது மதுரை. புலவர் பெருமக்களைத் தோற்றுவித்த இடம் மதுரை. தமிழ் நாட்டில் தனிச்சிறப்புக் கொண்டது மதுரை. தமிழ் மொழியால் மதுரை சிறப்புற்றது. மதுரையால் தமிழ் சிறப்புற்றது என்னலாம். இம் மதுரையம்பதியிலே எல்லாக்

காலங்களிலும் தமிழ் வல்லுநர் வாழ்ந்து தமிழை மற்றோருக்குக் கற்பித்தே வந்துள்ளனர். வாழையடி வாழையாக வந்த தமிழ் வளர்க்கும் பணியிலே சிதம்பரம் பிள்ளையவர்களும் ஈடுபட்டாரெனில் அதில் எத்தகைய வியப்புமில்லை.

எக்காரணம் பற்றியோ இம்மதுரையை விட்டகன்று, திரிசிரபுரம் சென்று அருகிலுள்ள அதவத்தூர் என்ற சிற்றாரொன்றில் தம் மனைவியார் அன்னத்தாச்சி என்பாருடன் இல்லறம் நடத்தி, ஆங்கும் பள்ளி ஒன்று அமைத்துப் பலருக்குத் தமிழ்க் கல்வி அளித்து வந்தார். 1815ஆம் ஆண்டு அன்பர் சிதம்பரம் பிள்ளையவர்களுக்கு அதவத்தூரில் பிறந்தவரே மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள். எனினும், மகாவித்துவானை **மதுரைக்காரர்** என்றே சொல்வர். தந்தையாரிடமே தமிழ்க் கல்வியை இளமையிலே கற்று வந்தார். சிதம்பரம் பிள்ளையோ செந்தமிழ்ச் சொற்களைச் சீரிய முறையில் கோத்துச் செய்யுள் இயற்றும் வன்மை பெற்றவர். ஆதலின் தம் மைந்தர் மீனாட்சிசுந்தரத்தையும் இளமையிலேயே செய்யுட்கள் பாடச்செய்தார். தந்தையார் மறைவுக்குப்பின், தாமே பல பெரும் புலவர்களை யணுகி இலக்கண இலக்கியங்களைக் கற்று ஈடு எடுப்புமற்றவரானார். அதவத்தூரில் இருந்துகொண்டு அடிக்கடி வந்து போவதில் அல்லலேற்பட்டுத் திரிசிராப்பள்ளிக்கே குடிவந்து குடிக் கூலி கொடுத்தொரு வீடமர்த்தி அதில் வசித்தார்.

தமிழ்ப் புலவர்கள் தம்மை அணுகுவதும், அவர்களுடன் நட்புப்பூண்டு அளவளாவுதலும், இலக்கிய நயங்களை எடுத்துக் காட்டி இன்புறுவதும், செய்யுட்கள் பல எழுதிச் செல்வர்களைக் கண்டு தமிழ் பரப்புவதும், ஏழை எளியவர்களைத் தம்பாலிருத்தித் தமிழ் இலக்கண இலக்கிய நூல்கள் கற்றுக் கொடுப்பதும் தம் வாழ்நாளின் குறிக்கோளாகக் கொண்டு

வாழ்ந்தார். ஆழ்ந்த சைவப் பற்றுக் கொண்டவர். ஆலயத்திற்குத் தவறாது சென்று வருவார். இவரிடம் இணையற்ற தமிழ்ப் புலமை கண்ட பெரும் புலவர்கள் இன்னாருக்கு "**மகாவித்துவான்**" என்ற பட்டஞ் சூட்டிப் பாராட்டினர். திரிசிரபுரத்தில் மாவட்ட நீதி மன்றத்தில் மொழி பெயர்ப்பாளரும் கிருத்துவ நெறியினருமான வேதநாயகரின் தமிழ்த் தொண்டுபற்றி மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனார் கேள்விப்பட்டார். தாமே சென்று பார்க்கவேண்டுமென விரும்பினார். தம்மைக் காட்டிலும் பதினொரு ஆண்டுகள் இளையவராக வேதநாயகர் இருந்தும், தாமே காணச் செல்ல வேண்டுமென எண்ணிய பெருமை மகாவித்துவானவர்களின் அடக்க நிலையை உலகுக்கு உணர்த்துகின்றது.

" செறிவறிந்து சீர்மைபயக்கும் அறிவறிந்து
ஆற்றின் அடங்கப் பெறின் "

என்ற வள்ளுவர் வாக்கில் சொல்லப்பட்டுள்ள அடக்கத்தின் சிறப்பினை மகாவித்துவான் உணர்ந்தவரன்றோ !

அவ்வாறே வேதநாயகரும் மகாவித்துவானவர்களைப் பற்றிக் கேள்விப்பட்டு அவரைக் காணும் நன்னாளுக்காகக் காத்திருந்தார். 'கற்றாரைக் கற்றாரே காமுறுவர்' என்பது உண்மையன்றோ ! மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனார், வேதநாயகர் வீட்டுக்கு ஓர் நாள் சென்றார். வேதநாயகரோ இருக்கை விட்டெழுந்து, இன்முகங் காட்டி, இருகைகூப்பி, உள்ளத்தினின்றும் உவகை ஊற்றெடுக்க மகாவித்துவானவர்களை வரவேற்றார். இருவருடைய உள்ளக் கிடக்கை அன்று இனிது நிறைவேறியது.

" ஒருநாட் பழகினும் பெரியோர் கேண்மை
இருநிலம் பிளக்க வேர் வீழ்க்குமே "

என்ற மூதுரைக்கிணங்க அன்றிலிருந்து இன்னாரிருவரின் நட்பு வளர்பிறையென வளர்ந்தது.

# அறிஞர் தொடர்பு

**உண்மை நட்பு**

திரிசிரபுரத்தில் நடுநாயகமாக விளங்குவது தாயுமானவர் கோவில்; தருமபுர ஆதீனத்தைச் சேர்ந்தது. சைவத்தை வளர்ப்பதற்கெனப் பல ஆதீனங்கள் தமிழ் நாட்டில் உண்டு. ஒவ்வொரு ஆதீனத்திற்கும் சிறந்த சைவப்பற்றும் தூயநெறி செல்லும் துறவு வாழ்வும் கொண்ட பெரியார்கள் தலைவர்களாக இருந்து தொண்டாற்றுவர். அவர்களை ஆதீனத் தலைவர்கள் என அழைப்பதுண்டு. அன்னாரில் பலர் தமிழுக்கும் அரிய தொண்டு புரிந்துள்ளனர்.

திருச்சி மடத்திலே தருமபுர ஆதீனத்தின்கீழ், தொண்டு செய்த ஒருவர் ஆதீனத் தலைவர்கள் விடுத்த ஆணைக்கு அடங்காமல் மாறுபட்ட செயலில் ஈடுபட்டார். எனவே, அவர் மீது நீதிமன்றத்திலே வழக்குத் தொடுக்க வேண்டியிருந்தது. ஆதலின் தமிழில் எழுதப்பெற்ற மனு ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கவேண்டியிருந்தது. அநேகர் வேதநாயகரை அண்டி, அத்தகைய மொழி பெயர்ப்புச் செய்து கொடுக்குமாறு வேண்டி அவ்வாறே பெற்றும் வந்தனர்.

தருமபுர ஆதீனத் தலைவர் திரிசிரபுரத்திலே தங்கியிருந்த மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனாரை நன்கு அறிவார். எனவே அவரே இவ்வழக்கை எடுத்து நடத்த அருகதையுடையவர் எனக் கருதி, அன்னாரை அழைப்பித்து அவரிடம் இச்

செயலைச் செய்து முடிக்குமாறு வேண்டினார். மகாவித்துவா னவர்களும் மனமுவந்து ஏற்றார். தாம் மேற்கொண்ட பணியை விரைவில் முடிக்க விரும்பினார். எழுதி வைத் திருந்த மனுவை எடுத்துக்கொண்டு, வேதநாயகரின் இல்லத் திற்கு விரைந்தார். ஆனால் அங்கு எதிரிகளுடன் எழுத்தாளர் வேதநாயகரிடம் ஏற்கனவே வந்து உரையாடிக்கொண்டிருப் பதைக் கண்டார்.

செய்வது யாதென விளங்காமல் திடீரென ஏற்பட்ட இந்நிலைகண்டு சற்றுநேரம் திகைத்தார். "சிற்றுயிர்க்கு உற்றதுணை கல்வியின் ஊங்கில்லை" என்ற சிவப்பிரகாச சுவாமி களின் நீதிநெறி விளக்கம் நினைவிற்கு வந்தது. கல்வியைக் காட்டிலும் மேலான துணை மனிதனுக்கு இல்லையென்பது பலர் வாழ்வில் கைகண்ட உண்மை. இடுப்பில் சொருகி யிருந்த எழுத்தாணியும் ஓலையும் எடுத்து தாம் வந்த நோக் கத்தை ஓர் கவியாக எழுதி அவ்வோலையை வேதநாயகர் பால் விடுத்தார். அக்கவியிலே சிவபெருமான் திருப்பணிக்காகத் தாம் வந்துள்ள நிலையையும், தாயுமானவர் கோயிற்றிருப்பணி தகாத ஒருவனிடம் சிக்கித்தவிப்பதையும் தருமபுரம் ஆதீனம் தம்மை யனுப்பியுள்ளதையும், வேதநாயகர் மொழி பெயர்க் கும் கைத்திறமை கண்டு அங்குப் போந்துள்ளமையும் விளக்கி யிருந்தார்.

"மையேறுங்கண்ணி யொருபாகன் காரியம் மற்றிதுதான்
பொய்யேயல; முகிற்கேது கைம்மாறு; பொறையினொடு
மெய்யே யுருக்கொள் புகழ்வேதநாயக வித்தகன்தன்
கையே! உனைப்புகழ்வேன்; புகல் வேறிலை கண்டுகொள்ளே",

ஓலை கண்ட வேதநாயகர் உண்மைநிலையறிந்தார். உள்ளத்தில் கள்ளங் கொண்டு, உதட்டினிலே இனிமைச் சொல் விண்டு,

தம்மெதிரே உட்கார்ந்திருந்த எதிரிகளை உடனே வெருட்டி வெளியேற்றினர். மகாவித்துவானவர்களை மரியாதையோடு வரவேற்று, வழக்கு விவரங்களனைத்தும் விளக்கமாக அறிந்து, அழகிய ஆங்கில நடையில் அமைத்து மனுவொன்றை எழுதி மகாவித்துவானவர்களிடம் அன்புடன் அளித்தார்.

சிவபிரான் கோயில் திருப்பணி என்றாலும் தாம் அதை மேலான தெய்வப்பணி என ஏற்று எழுதிக்கொடுத்த கிருத்துவ அன்பரின் அன்பை எண்ணி எண்ணி மகாவித்துவான் மகிழ்ந்தார். அன்றே வேதநாயகர் மீது ஒரு கோவை பாடவேண்டுமென உள்ளத்தில் முடிவுசெய்தார். உண்மை நட்புக்கு என்றும் ஊறு கிடையாதன்றோ !

"நீரவர் கேண்மை பிறைமதி நிறைநீர" என்றும்,
"நெஞ்சத்து அகநக நட்பது நட்பு" என்றும்,

வள்ளுவப் பெருந்தகையார் காட்டியுள்ளமைக்குச் சான்று இவ்விருவரன்றோ !

நீதிமன்றத்திலே வழக்கு எடுக்கும் குறித்த நாள் வந்த போது தாயுமானவர் கோயில் சார்பில் மகாவித்துவானவர்கள் கொடுத்த மனு நீதிபதியால் பார்வையிடப் பெற்றது. எதிரி செய்த தவறுகள் எடுத்துக் காட்டப்பெற்று ஆதீனத் தலைவர் உரிமை எதுவென அழுத்தமான முறையில் எழுதப்பட்டிருந் தது. படித்த நீதிபதியின் மனதில் உண்மை யெதுவென பசுமரத்தாணியெனப் பதிந்தது. மனு எழுதப்பட்டிருந்த வகை மனதைக் கவர்ந்தது. எதிரியின் மனுவில் இல்லாததும், பொல்லாததும் இருப்பதையும் கண்டார். தருமபுர ஆதீனத் தலைவருக்குச் சார்பாகத் தீர்ப்புக் கூறப்பட்டது. மகாவித்து வான் அடைந்த மகிழ்வுக்கு அளவில்லை. வேதநாயகர் வெளியே

வருமவரை காத்திருந்து, கட்டித்தழுவித் தம் களிப்பைத் தெரிவித்து அவரை வாழ்த்தினர். வேதநாயகர் கண்களில் அன்புப் பெருக்கால் நீர் வழிந்தோடியது.

**குளத்தூர்க் கோவை**

கோவை என்னும் நூல் தமிழ் இலக்கியத்தில் உள்ள தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தத்துள் ஒன்று. பிரபந்தம் என்பது நூல் எனப்படும். தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலினுள்ளும், பத்துப் பாட்டு, எட்டுத் தொகை முதலிய சங்க இலக்கியங்களிலும் அகம் எனவும் புறம் எனவும் இரு பொருள்கள் காணலாகும். அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கனுள். அறமும் பொருளும் புறத்தின் பால் சொல்லப்பட்டும், இன்பம் அகத்தின் பால் காட்டப்பட்டும் உள்ளன. வீடு என்பது பொதுவானது. தமிழ் மொழி ஒன்றில் மட்டும் மக்களின் இன்ப உணர்ச்சிக்குப் பொருளிலக்கணம் ஒன்று வகுத்துக் காட்டப்பெற்றுள்ளது.

இவ்வாறுள்ள அகப்பொருட்களை விளக்கும் பொருட்டுப் பிற்காலப் பெரும் புலவர்கள், கோவை யென்னும் நூல் செய்துள்ளனர். நாடக உறுப்பும் சுவையும்படக் கோவை செய்தனர். அகப்பொருள் என்பது உள்ளத்துள்ளேயே உணருகின்ற இன்பம். தலைவன், தலைவி வடிவில் பாட்டுடைத் தலைவன் விளக்கப்பட்டு உள்ள நிகழ்ச்சிகளனைத்தும் விளக்கும் நூல் கோவையாகும்.

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனார் வேதநாயகர் மீது கோவை பாடினார். வேதநாயகர் பிறந்த ஊராகிய குளத்தூரையே சேர்த்துப் பாட்டுடைத் தலைவனாக வேதநாயகரையே வைத்துக் குளத்தூர்க் கோவை பாடினார். நானூற்று முப்பத்தெட்டுப் பாட்டுக்கள் அகப்பொருட்டுறையில் அழகுபடப் பாடினார். அவற்றில் ஈண்டு ஒன்றிரண்டு காட்டப்

பட்டதினின்று வித்துவானவர்கட்கு வேதநாயகர் மீதிருந்த பற்றும் உயர் எண்ணமும் காணலாம்.

> "கோனாடன், மேழிக்கொடியாளன், மாலைக்குவளையினான்,
> வானாடனேரும் புகழ் வேதநாயகவள்ளல் வெற்பில்
> தேனாடு பூங்குழலாய், வான் பிரியினும் செங்கதிர், யான்
> ஊனாடு உயிர் நிகர் நிற்பிரியேன், என்றும் உண்மையிதே"
>
> (குளத்தூர்க் கோவை 25-ம் பாட்டு)

"கோனாடு எனப் பெயர் பெற்றது குளத்தூர். ஆதலின் அதைக்காட்ட கோனாட்டைச்சேர்ந்தவன், என்றார். வேளாண் குடியில் வந்தவராதலின் மேழிக்கொடியினை யுடையானென்றார். குவளை மாலையுடையா னென்றது குளத்தூரின் நீர்ச் சிறப்பைக் குறிக்கவாகும். வானுலகினரை நிகர்த்த புகழ் பெற்றோனான வேதநாயகர் ஓர் வள்ளல். அவ்வள்ளலின் மலையினிடத்துத் தேனை விரும்பித் திரிகின்ற அழகிய கூந்தலாய், செங்கதிர்கள் வீசுகின்ற கதிரவன் வானைப் பிரிந்தாலும் ஊன் விரும்புகின்ற உயிர் போன்ற உன்னைப் பிரியமாட்டேன் எனக் காட்டுகிறார். ஊனானது உயிரில்லாதிருக்குமானால் பிணமாகும். ஆதலின் ஊன் என்றும் உயிரை விரும்புவது இயல்பு. அதுபோல உயிரனைய உம்மை, நான் என்றும் விரும்புவேன், இஃது உண்மை" என விளக்கினார். தமக்கும் வேதநாயகத்துக்கும் !உள்ள தொடர்பு ஊனுக்கும் உயிருக்கும் உள்ளது போல எனக் காட்டியிருக்கும் உவமைஊன்றிக் கவனித்தற்குரியது.

> "திகழ்வேலை பொங்கியெழ, ஓங்கல்முற்றுஞ் சினந்து, வன்கால்
> அகழ்வேரொடு பறித்தெங்கணும் வீசிடும் அன்றும் என்றும்
> இகழ்வேயில்லாத தம்வார்த்தை பொய்யார் வஞ்சமேதுஞ் செய்யார்
> புகழ்வேதநாயக மால்குளத்தூர் வரைப் புண்ணியரே"
>
> (குளத்தூர்க் கோவை 28-ம் பாடல்)

“கடலோ பொங்கி எழும். மலையோ சினமடையும். வலிமையுள்ள காற்றோ வேரோடு மரங்களைப் பறித்து எங்கும் வீசும். இவ்வாறு இயற்கையுங்கூட தம் பொறுமை யிழந்து செயல்கள் செய்யும். ஆனால் புகழுக்கு உரிய வேதநாயகரின் பழைமையான குளத்தூரில் உள்ள மலையிடை வாழுகின்ற புண்ணியர்களோ பொய் பேசவோ, வஞ்சகச் செயல் செய்யவோ முற்படார்.” வேதநாயகரின் விழுத்தகு பண்புகளால் அம்மலையும் பண்பட்டு ஆங்கு வாழ்வோரும் அவ்வாறேயுள்ளனர் என்று அழகுபட விவரித்துள்ளார். இவை போன்ற 438 பாடல்கள் மகாவித்துவான் பாடியுள்ளாரெனில் வேதநாயகர் மீது கொண்டிருந்த நட்பின் தரத்தை எவர் நவிலல் இயலும்?

### எதிர்பாராத இன்னல்

மொழி பெயர்ப்பு வேலை பார்த்து வந்த வேதநாயகர் மேலதிகாரிக்கு மகிழ்ச்சி யுண்டாக்கும் வண்ணமே அல்லும் பகலும் உழைத்து வந்தார். அளவுக்கு மிஞ்சிய எழுத்து வேலைகள் வந்து ஒன்றாகக் குவிந்ததால், எழுத்து வேலைக்கென ஒரு ஆளை ஏற்படுத்தி, தான் மொழி பெயர்த்துச் சொல்லச் சொல்ல எழுதும்படி ஏற்பாடு செய்திருந்தார். இவ்வாறாக, எவ்வளவு அதிக வேலையும் இடையூறின்றி நடைபெற்று வந்தது.

இவர் வேலைபார்த்து வரும்போது மாவட்ட நீதிபதியாயிருந்தவர் **மேஸ்தர் டேவிட்சன்** என்பார். இவர் வேதநாயகர்பால் விருப்பமிக்குக் கொண்டவர். கடமை தவறாத நிலை கண்டு அவரை அன்பாக ஆதரித்தே வந்தார். இவ்வாறாக இனிது வாழ்நாள் நடைபெறுங்கால், இன்னல் ஒன்று இடையே குறுக்கிட்டது.

இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் பகைமை முற்றிக் கலகம் ஒன்று நேரிட்டது. மதவெறியானது மக்களை மயக்கி எதையும் செய்யுமாறு தூண்டும். மதத்தின் பேரால் மடமையான கருமங்கள் பல நடைபெறுதல் உண்டு. ஒரு மதத்தார் செய்யும் கருமங்கள் மற்றொரு மதத்தாருக்கு இசைவு இல்லையானால் பகைமை முற்றுகின்றது. மதம் என்பது இறைவனை வணங்கும் வழி. எல்லா மதங்களும் இறைவனையே காட்டுகின்றன. ஆனால் கையாளும் சடங்குகளும் முறைகளும் கொள்கைகளும் வேறுபாடுள்ளவை. எந்த மதமும் தீயவற்றைச் செய்யுமாறு சொல்லவில்லை. இவற்றைச் செவ்வனே ஆராய்ந்தறியாத மதவாதிகளே சண்டையைக் கிளப்பித் தங்கள் மதப்பற்றைக் காட்டுவது போல நடிக்கின்றனர். அன்பினால் ஒருவனை வெல்லுவதே அறவழி ; மற்ற யாவும் மறவழி.

உலகில் அடிக்கடி மதப்பூசல்கள் மக்களிடை நிகழ்ந்தே வந்துள்ளனவென வரலாறு காட்டும். தமிழ் நாட்டைப் பற்றியவரை எம்மதத்தாரும் அண்ணன் தம்பிகளாக வாழும் அன்புத் தொடரில் இணைக்கப் பெற்றவர்கள். இன்றைக்கும் என்றைக்கும் தமிழ்பேசும் சிற்றூர்களில் இதைக்காணலாகும். இதற்கெல்லாம் காரணம் 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்றது போன்ற முதுமொழிகளே யாகும்.

"எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்று அறியேன் பராபரமே"

என்றார் தாயுமானாரும். '**எல்லாரும்**' என மக்களினம் அனைத்தும் வாழவேண்டுமெனக் குறிப்பிட்டவர் தமிழ்ப் பெரியார் அல்லவா ?

இப்படி, பண்பட்ட தமிழ் நாட்டிலும் இந்து முஸ்லீம் கலகம் ஏற்பட்டே தீர்ந்தது. கலகம் எனில் அதில் முடிவு காணவேண்டுமென்று இருசாராரும் நீதிமன்றத்தில் வழக்குத்

தொடுத்தல், பணத்தை இறைத்தல், பலர் இடையில் பறித்தல் முதலியன நிகழ்வதும் இயல்பே. அவ்வாறு அளவில்லாத பொருட் செலவில் மாவட்ட நீதிமன்றத்திற்கு இவ்வழக்கு வந்தது. இருதரப்பிலும் கொடுக்கப்பட்ட விண்ணப்பங்களேயும் முதல் அரசாங்க விசாரணையின்போது சொல்லப்பட்ட கருத்துக்கள் முதலாயினவற்றையும் மொழி பெயர்க்கவேண்டியிருந்தது. இவ்வேலைகள் அனைத்தும் வேதநாயகரிடம் ஒப்படைக்கப்பட்டன.

மாவட்ட நீதிபதியினருகில் இன்றைக்கும் ஓர் குழு உள்ளது. அவர்களை ஜூரிகள் (Jury) என்ற ஆங்கிலப் பெயர் கொண்டழைப்பர். ஜூரி எனின் தீர்ப்புச்சான்ருளர் எனப் பொருள். பத்தொன்பதாம் நூற்றுண்டில் நீதிபதிகளின் அருகில் அமர்ந்து, நீதி வழங்க உதவியோருக்குக் காசியார் என்று பெயர் வழங்கியது. இந்து முஸ்லீம் கலவர வழக்கில் நீதிபதி மேஸ்தர் டேவிட்சன் என்பாருக்கும், காசியாருக்கும் கருத்து வேறுபாடு இருந்தது. கூறவேண்டிய தீர்ப்பு முரண்பட்டது. எனவே, இவ்வாறு எவ்வெப்போது கருத்து மாறுபடுகின்றதோ அவ்வப்போது, மாவட்ட மன்றத்திற்கு மேலே, மாநில நீதிமன்றத்திற்கு (சதர் கோர்ட்டு) அனுப்புவது வழக்கம். இந்த வழக்கும், மேலே அனுப்ப வேண்டிய நிலை வந்ததால் அனுப்பப்பட்டது.

தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட மனுக்கள், விசாரணைக் குறிப்புக்கள் அனைத்தையும் விளக்கமான முறையில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வேதநாயகர் தம் மேலதிபரான மேஸ்தர் டேவிட்சன் என்பாரிடம் கொடுத்தார். நீதிபதியும் அவற்றைப்பெற்றுத் தன்னுடைய கையொப்பம் செய்து அனுப்புவதற்கு வைத்திருந்தார். எதிர்பாராமல் டேவிட்சன் வேற்றூருக்கு மாற்றப்பட்டார். வேதநாயகர் போன்ற அறிஞர் தம்மிடம் வேலைபார்த்ததற்காகப் புகழ்ந்து அவரிடம் விடை

பெற்றுச் சென்றார். மேலே அனுப்பவேண்டிய கலகத் தொடர்புள்ள கடிதக் குறிப்புக்களையும் மேலதிகாரிகளுக்கு அனுப்புவதாகச் சொல்லி எடுத்துச் சென்றார். இறைவன் திருவருள் வேறாக இருந்தது. வேற்றூர் சென்ற மேஸ்தர் டேவிட்சன் நோயுற்று மாண்டார். ஆதலின் அவர் எடுத்துச் சென்ற மொழி பெயர்ப்புச் செல்லவேண்டிய மேலிடத்திற்குச் செல்லாமல் மேஸ்தர் பெட்டிக்குள் சிக்கி விட்டது.

மாநில மன்றத்தார் கலக வழக்கை விசாரிக்கத் தொடங்கியபோது மாவட்ட மன்றத்தினின்றும் மொழி பெயர்த்த கடித முதலானவை வாராதது கண்டு, அவ்வாறு ஏற்பட்ட காலதாமதத்திற்குக் காரணமானவர் எவர் என்று எழுத்து மூலம் கேட்டனர். டேவிட்சனுக்குப்பின் புதிதாகத் திரிசிரபுரம் வந்த **மேஸ்தர் கிரீன்வே** என்பார் பரந்த நோக்கும் பண்பாடும் அற்றவர். கயமைக் குணம் உடையவர். உருவத்தில் மட்டும் மனிதர்போல வாழ்ந்தாரே யன்றி உருப்படியான பண்பு அற்றவர். மேலிடத்தினின்று தம்மை வினவிக் கேட்டு வந்த விபரத்தை வேறாக வைத்துக்கொண்டு, விசாரணை ஒன்றுமில்லாமல், வேதநாயகரை வேலையினின்றும் விலக்கிவிட்டு மேலாளர்க்குப் பதில் விடுத்தார். அவர் விடுத்த பதிலில் தாமதத்திற்குக் காரணம் வேதநாயகரே எனவும், மொழி பெயர்ப்பு வேலையே செய்யப்படவில்லை எனவும், ஆதலால் அவரை வேலையினின்றும் தான் விலக்கிய செயலையும் எழுதியனுப்பினான் அக்கயவன். இத்தகைய இழிகுணம் படைத்தோரைக் கண்டே வள்ளுவனாரும் கூட

" மக்களே போல்வர் கயவர் அவரன்ன
ஒப்பாரியாங்கண் டதுஇல் "

எனப்பாடிப் போந்தார்.

## உண்மை நிலைக்கு உயர்வு

மனிதன் உடம்பு எத்துணை அளவுக்குப் பாதுகாக்கப் படினும் நோய் என்பது நொடிக்குள் வரும். உள்ளத்தில் கவலை ஏற்படுங்கால் உடலுக்கும் நோய் உண்டாகும். உண்மையான உழைப்பு ஒன்றைத்தவிர வேறொன்றிலும் ஈடுபடாத வேதநாயகருக்கு இன்னல் ஏற்பட்டது. துன்பநிலை கண்டு அஞ்சுவது பெரியோர் செயலல்ல. ஆக தாம் வேலையினின்று விலக்கப்படுவதை ஏற்றுக்கொண்டார். உண்மை நிகழ்ச்சிகள் எவை என்று மேலாளர்களுக்குக் காட்ட வாய்ப்புக் கிட்டியதாகவும் எண்ணினர்.

“ உழுது புண்செயப் புன்செயும் நன்செயாம் உயர்பொன்
முழுதுந் தீயினில் சுடச்சுட ஒளிறுமால் மொழியும்
பழுதில் மாமணி தேய்பட ஒளி மிகும் படர்கொண்டு
அழுது நொந்தவர்க் கன்றிமற் றவர்க்கறம் அரிதே ”

என்று பாடிய பெருந்தகை யல்லவா? புண்ணைக் கிளறுவது போல புன்செய் நிலத்தைக் கிளற அது நன்செய் நிலமாகும். உயர்ந்த பொன்னனது நெருப்பிலிட்டுச் சுடச்சுட ஒளி உயரும். சிறந்த மாணிக்கம் தேயத்தேய ஒளி அதிகமாகும். இவை போல துன்பம் ஏற்று அதில் அழுந்திக் கண்ணீர் சொரிந்தால் அல்லாமல் இன்பநிலை வந்துறுது என்று பாடினவரல்லவா நம் அறிஞர். இறைவனை எண்ணித் தம் உள்ள நிலையை அவரிடம் ஒப்படைத்தார். கவிஞர் உள்ளம் இன்பதுன்பங்களைக்கண்டு கலங்காது. ஆதலின் அவர் பாடிய பின்வரும் பாட்டு இந்நிலைக்கு இனிதே பொருந்தும். இந்தச் சூழ்நிலையிலே கலங்காத உள்ளத்திலிருந்து மலர்ந்த பாட்டே இது:—

“ இந்த உத்தியோகமென்ன பெரிதா – நெஞ்சே
இது போனல் நாம் பிழைப்பதரிதா.”

“ நல்ல பிரபுக்களெல்லாம் நாட்டைவிட்டே யகன்றார்
ஞானசூனியரெல்லாம் நமக்கதிபதி யென்றார்
இல்லாத தோஷம் நம்மேல் எடுத்தவர் முடிக்கின்றார்
இரவியினுங் களங்கம் இருக்குமெனப் புகன்றார் ”

டேவிட்சன் நல்லவர். அவரோ இந்நாட்டினின்றும் மேலுலகு போய்விட்டார். அறிவற்ற கிரீன்வே அதற்குப் பதில் வந்தார். இல்லாத குற்றத்தை எடுத்துக் காட்டிச் சொல்லு கின்றார். காய்கின்ற கதிரவனிடத்திலும் களங்கம் இருக் கின்றது என்கின்றாரோ? இந்த வேலை போனால் நாம் பிழைக்கமாட்டோமா? என்றெழுதினர்.

உண்மை நிலையை, உயர்தர நீதிமன்றத்தினருக்கு உரைக்க வேண்டுமென எண்ணி, நடந்ததனைத்தும் விளக்கி எழுதி மனு வொன்று அனுப்பிவைத்தார். மனு மேலே அனுப்பி, மாதங் கள் பல கழிந்தும் ஒருவித ஆணையும் உயர் நீதி மன்றத்தினின் றும் பிறக்கவில்லை. மீண்டும் ஓர் மனு எழுதி, முன்னைய மனு வையும் அதிற் காட்டி அதையும் அனுப்பினர். அம்மனு போய்ச் சேர்ந்த அதே காலத்தில் இறந்துபோன மேஸ்தர் டேவிட்சன் பெட்டியிலிருந்து வேதநாயகர் செய்த மொழி பெயர்ப்புத் தாட்களும் உயர் நீதிமன்றத்தார்க்கு அனுப்பப் பட்டன. அவற்றையும் வேதநாயகர் மனுவுடன் வைத்து ஆராய்ந்த உயர் நீதிமன்றத்தார் உடனே வேதநாயகரை வேலையில் சேர்த்துக் கொள்ளுமாறு உத்தரவு பிறப்பித்தனர்.

அவ்வமயம் நீதிபதி வேலையில் சுவிண்டன் என்ற வெள்ளையன் இருந்தான். முன்னைய நீதிபதி கிரீன்வேயைப் போன்று இவனும் ஒரு முரடன். மேலாணையைச் சற்றும் மதியாமல் இவனும் பொய்க்கூற்று எழுதினன். வேதநாயகர் நோயுள்ளவர் எனவும், தம்மால் வேலை செய்ய முடியாமல்

வேலைக்கொரு ஆள் வைத்து எழுதுவதாயும் அப்பதிவில் கண்டிருந்தது. உண்மை நிலையை அறிந்த உயர் அதிபர் ஓய்வு கொடுத்து சுவிண்டனை லண்டனுக் கனுப்பிவிட்டு, **மேஸ்தர் ஆரிஸ்** என்ற நல்லார் ஒருவரை ஈண்டு அனுப்பினர். ஆரிஸ் அன்பர் வேலை ஏற்றதும், முதல் வேலையாக வேதநாயகரை விரும்பி அழைப்பித்து வேலை ஈந்தார். ஒரு சில நல்லவர்களாலேயே உலகம் ஈண்டு நிலைத்துள்ளது. வேதநாயகர் வேலை ஒப்புக்கொண்டார். இறைவன் திருவருள் இவர்பால் இருந்தது. தம் வேலையைத் தட்டுத் தடங்கல் இன்றிச் செய்து வந்தார்.

# வேதநாயகர் நல்ல நீதிநாயகர்

சோழவள நாட்டிலே தரங்கம்பாடி ஓர் கடற்கரைப் பட்டினம். தரங்கம் எனின் அலைகள் என்றும், பாடி எனின் தங்குமிடம் என்றும் பொருள்படும். தமிழ் நாட்டில் கணக்கற்ற இடங்கள், தூய தமிழ்ச் சொல்லால் பெயரிட்டு அழைக்கப்படுகின்றன. இப்போது புதிதாக அமைக்கப்படுகின்ற பல ஊர்களுக்குத் தமிழல்லாத வேறு பெயர்கள் வைக்கப்பட்டு வழங்கி வருவதையும் காணலாம். அலைகள் மோதுகின்ற இடத்தில் அமைந்த ஊருக்குத் தரங்கம்பாடி என்று பெயர் வைத்த நம் முன்னோரின் அறிவு போற்றத்தக்கது.

இத்தரங்கம்பாடியிலே மாவட்ட நீதிபதி (District Munsif) வேலை ஒன்று காலியாயிற்று. அதற்கு அநேகம் பேர் மனுச் செய்தனர். அவர்களுள் மூவர் முக்கியமானவர். மிக்க எளிய குடும்பத்தில் பிறந்து, இயம்பவொண்ணாத இன்னல்கள் அடைந்து, கற்க வேண்டியவை கசடறக் கற்றுத் தேர்ந்த (ஜஸ்டிஸ்) முத்துச்சாமி அய்யர் ஒருவர். மற்றொருவர் திவான் பதவியிலே பிற்காலத்தில் திகழ்ந்த ரகுநாதராவ் என்பவர். மூன்றாமவரே நமது சான்றோர் வேதநாயகர். அவ்வேலைக்கு மனுச்செய்த அறுபதின்மருக்கு மேற்பட்டோரில் இம்மூவரையே அரசினர் ஆய்ந்து தேர்ந்தனர். இம்மூவரிலே தரங்கம்பாடி வேலை வேதநாயகருக்குக் கிட்டியது. மற்றைய இருவருக்கும் வேற்றூர்கள் கிடைத்தன. ஆனால் அலுவல் பார்த்து வந்த இம்மூவரிலே வேதநாயகர் நீங்கிய

இருவருக்கும் உயர்ந்த பதவிகள் கிடைத்தன. நம் நாயகரோ இறுதிவரை மாவட்ட நீதிபதியாகவே வாழ்ந்து ஓய்வுபெற்றார்.

தன்னுடைய உயர்பதவிக்கு உழைக்காமல் தண்டமிழ் மொழிக்காக, தமிழ் நாட்டிற்காக தக்க தொண்டாற்றினார். ஆங்கிலத்தில் போதிய அறிவும் தாய்மொழியில் தகுந்த ஆராய்ச்சியும் பெற்றவரானபடியால், தம் பணியைச் செம்மையாய்ச் செய்தார்.

"சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற்
கோடாமை சான்றோர்க்கணி!"

என்ற குறட்பாவைத் தியானித்து நீதி வழங்கினார். **"வேதநாயகர் நல்ல நீதிநாயகர்"** என்ற பெரும்புகழ் பெற்றார். மிகக்குறுகிய காலம் தரங்கம்பாடியில் பணியாற்றினார். பின்னர் அம்மாவட்டத்திலிருந்த சீர்காழிப்பதிக்கு மாற்றப்பட்டார். சீர்காழி என்னும் ஊர் சைவ மக்கள் சிறப்பாக எண்ணுகின்ற ஓர் இடம். சிறந்த சிவத் தலம். கவி மணம் கமிழ்கின்ற ஊர். முன்னம் அருணசலக் கவிராயர் இருந்து கவிபாடிப் பெருமைப்படுத்திய இடம் சீர்காழியே. உள்ளம் உருகப் பாடி, உயர்ந்த வேதாந்தக் கருத்துக்கள் நிறைத்து, பக்தி மணம் பரப்பிய தாயுமான சுவாமிகளின் பிறந்த ஊரும் சீர்காழியே. சைவக் குரவர்கள் நால்வரில் ஒருவரான திருஞானசம்பந்தர் பதியும் சீர்காழியே.

இத்துணைச் சிறப்பு வாய்ந்த இவ்வூரிலே நீதிபதியாக வேதநாயகர் வந்தார். தரங்கம்பாடியிலே எளியோர்க்கிரங்கி நீதிவழங்கிய நம் வேதநாயகர் சீர்காழிப் பதியிலும் சிறந்து விளங்கினார். வழக்குகளை ஆய்ந்து, தீர்ப்புக் கூறுவதில் நுண்மாண் நுழைபுலம் படைத்திருந்தார். வழக்குகளின் போக்கை ஆழ்ந்தறிய நல்ல மதி நுட்பம் வேண்டும்.

என்னில் அந்நாளிலிருந்தே வாதி, எதிரி ஆகியோருக்குச் சார்பாக (வக்கீல்) வழக்குரைஞர்கள் வாதாடித் தத்தம் ஆராய்ச்சிகளை எடுத்துரைப்பது வழக்கம்.

வழக்குரைஞர் என்ற சொல்லுக்கு வழக்குகளை எடுத்து உரைப்பவர் எனப் பொருள். வழக்கறிஞர் எனவும் இவர் களைச் சொல்வதுண்டு. வழக்குகளின் தொடர்புள்ள அனைத் தையும் ஆய்ந்து இவர் அறிவர். ஆனால் அறிஞர் என்ற சொல் நன்மை தீமைகளை ஆய்ந்து நன்மைகளையே செய்யுமாறு மக் களைத் தூண்டுபவர்களுக்கும் அனைத்துலகும் இனிது வாழச் செயல் ஆற்றுபவர்களுக்கும் பொருந்தும். மெய்யோ, பொய்யோ எதுவாயினும் தாம் தம்மிடம் வந்தவர்களின் பணத் தைப் பெற்றுக்கொண்டு, மெய் பொய்யாகவும், பொய் மெய்யா கவும் ஆகுமாறு தம் வாக்கு வன்மையால் மாற்றுகின்ற நிலையை வேதநாயகர் வெறுத்தார். ஆதலின் மக்களின் நல்வாழ்வு, அமைதியான சூழ்நிலை, அறம் வளரும் வழி இவை வளர்ப்பதற்கு இன்னாரில்பலர் உழைக்கவில்லையே எனக் கவலைப்பட்டார். சிற்றூர்களிலும், பேரூர்களிலும் நல்வழிக் குப் புறம்பான பல செயல்கள் நடைபெறுவதற்கு வழக்குரை ஞர்களிற் சிலரே காரணம் என்பது அறிஞரின் கருத்து. மக்களின் நல்வாழ்வு ஒன்றிலே மனம் வைத்து உண்மை வழக்குகளை மட்டும் ஏற்றுக்கொண்டு அதற்கு உழைப்பவர் கள் மிகச் சிலரே. பெரும்பாலோர் செயல், பணம் ஒன்றினைக் குறிக்கோளாகக் கொண்டதாகும்.

காலையிலே எழுந்து, கடவுளுக்குச் செய்யவேண்டிய கடன்கள் முடிக்கின்றனர். சிற்றுண்டி அருந்தியதும், வழக் குக் கட்டுக்களைத் தூக்கிவைத்து ஆழ்ந்து சிந்திப்பதும், சாட்சி களின் நிலையை மாற்றியமைப்பதற்கு வழிவகைகள் ஆய்

வதும், அவர்களின் காலைநேர வேலையாகிறது. உண்டிக்குப் பின் நீதிமன்றங்கட்கு அழகிய ஆடைகள் அணிந்து சென்று, தங்கள் தங்கள் வழக்குகளுக்குச் சார்பாக வாதாடி, சட்ட நுணுக்கங்களை எடுத்துக்காட்டி, கூட்டியும் குறைத்தும், மாற்றியும் தூற்றியும், தாக்கியும் நீக்கியும் கருத்துக்களை எடுத்துக் காட்டுவது நாள் முழுதும் செய்யும் வேலையாகிறது. மாலை நேரத்தில் வந்து மணிமாலை உருட்டுவதும், கடவுளைக் கருதுவதும் ஆகிய வேலை செய்கிறார்கள். இஃது ஓர் பயனற்ற, பண்பற்ற வாழ்வு. பணந்திரட்டுந் தொழிலிலே பகல் முழுதும் பதிந்து கிடந்த உள்ளத்துள், அறவடிவான இறைவன் எவ்வாறு இவர்கள் அழைப்புக்கு வந்துவிடுவாரோ அறியமுடியவில்லை. இவற்றையெல்லாம் எண்ணி எண்ணி வேதநாயகர் பின்வருமாறு பாடியுள்ளார்.

“தொண்டை கிழித்துக்கொண்டு
சண்டை செய்யும் வக்கீல்கள்
அண்டையிலிருந்து நம்
மண்டையை உடைத்தால்

நினைப்பதெப்போது நெஞ்சே
ஐயன் பதத்தை—நினைப்பது”

உழக்கில் தெற்கு வடக்கு
கிழக்கு மேற்கென்று சொல்லும்
வழக்கர் பெருஞ் சமுத்திர
முழக்கத்திலிருந்தால் (நினைப்ப)

சீர்காழிப் பதியிலே வேலை ஒப்புக்கொண்ட வேதநாயகர், நடுநிலை பிறழாமல், நீதியின் வழியிலே நின்று, உண்மை கண்டவாறு நீதி வழங்கினார். ஏழைகள் பெரும்பணம் செலவழித்து வழக்குரைஞர்களைக்கொண்டு வைத்து வாதாட முடியாத நிலைகளை நன்குணர்ந்தார். ஆதலின் வழக்கு மன்றத்தில் எழுத்து

மூலம் தம்மிடம் உள்ள விவரங்கள் நீங்கலாக வேறு வகையிலும் உண்மையைக் கண்டு தீர்ப்புக் கூறிவந்தார். இவர் புகழ் எங்கும் பரவியது. "எப்போ வருவாரோ, ஏழைக்கிரங்கிடும் எம் வேதநாயகர்" என்று அக்காலத்தில் பாட்டுக்களும் பாடினரெனில், இவரது தீர்ப்புக்களின் சிறப்பை விளக்க வேண்டியதில்லை.

பொய் வழக்குகள் தம் மன்றத்திற்கு வந்தபோது மனம் புழுங்கினார். அதைக் கண்ட வேதநாயகர் பின்வருமாறு பாடுகிறார்:

1. "ககனப்பூ வந்திமகன் கொய்தானும்—அதைக்
கண்டு குருடன் அம்பால் எய்தானும்
செகமிசை ஊமையனும் வைதானும்—அதைச்
செவிடன் கேட்டுநகை செய்தானும்

இந்த வழக்குக்கெல்லாம் நாம்தானா—கோர்ட்டில்
வந்தவன் நமக்கெஜமானா"

2. கரமிலான் வாதியைப் பிடித்தானும்—இரு
காலிலான் உதைத்துதைத்து இடித்தானும்
சிரமில்லாதவன் கடித்தடித்தானும்—பதம்
செப்பும் வேதநாயகன் படித்தானும் ( )

[ வந்தி — மலடி ; ககனம் — ஆகாயம் ; கரம் — கை ]

மலடி மகன் கொய்தல், குருடன் பார்த்தல், ஊமையன் வைதல், செவிடன் கேட்டல், கையில்லாதவன் பிடித்தல், காலில்லாதவன் உதைத்தல், தலையில்லாதவன் கடித்தல் ஆகிய செயல்கள் நடைபெற முடியாதவை. ஆயினும் இவைபோன்ற குறைகள் காட்டி மனுச்செய்து வழக்காட "கோர்ட்டுக்கு வந்தவன்" என்று குறிப்பிடுகின்றார். இவ்வாறு வழக்குரைஞர்கள்

வருகின்றார்கள் என்கிறார். வருபவன் நீதிபதிக்கு மேலான வன் போல, இன்னின்னவாறு செய்யவேண்டுமென்றும் எடுத்துக் கூறுகின்றான் எனச் சொல்லியுள்ளார்.

1

*“சுப்பையரோ அபத்த மூட்டை—அந்த*
*சுந்தரய்யர் வழக்கிலே தொளாயிரம் ஓட்டை*
*அப்பையர் கற்பிப்பார் பொய்ச்சீட்டை—அந்த*
*அனந்தய்யர் கட்டுவார் ஆகாசக் கோட்டை*

*அப்பா இதென்ன அதிகாரம்—ஐயோ*
*எப்போதும் பக்தி செய்ய இல்லையே நேரம்” —*

2

*“எப்போதும் பொய்வழக்கர் கூட்டம்—அவர்க்(கு)*
*இந்திரலோகங் கிடைத்தாலும் இன்னமுந்தான் வாட்டம்*
*தப்புச் சாட்சிகள் வாய் நீட்டம்—பொய்ச்*
*சத்தியம், ஆணையென்றால் அவர்க்குக் கொண்டாட்டம்*
*(அப்பா)*

எனப் பாடித் தன் மனத்திலே வருந்தினார். பொய் வழக்கு கள் வந்து குவிகின்ற நிலையையும், எவ்வளவு அதிகப் பணம் கிடைத்தாலும் போதுமென்ற மனமில்லாத பொறாமை வாழ் வும், சாட்சி சொல்ல வருபவர்களின் பொய்க்கூற்றும், பொய் ஆணையிட்டு சாட்சிக் கூண்டின்மேல் ஏறி நிற்பதில் உள்ள கொண்டாட்டம் முதலிய நீதி மன்ற நிகழ்ச்சிகளை நினைத்து வருந்தினார்.

வேலை முடிந்து வீட்டுக்குச் சென்றபின் பாட்டுக்கள் இயற்றுவதும், இயற்றியவற்றைப் பிறருக்கு எடுத்துப் பாடிக் காட்டி இன்பமூட்டுவதும் இவர் வழக்கம். இவ்வாறு மாதங்

கள் பல கடந்தன. சீர்காழியில் இவரின் சிறந்த பணி நடை பெறுங்கால், உள்ளத்துள் ஓர் எண்ணம் இவருக்கு உருவாகி யது. அவ்வெண்ணமே பின் ஓர் பெரும்பணியாகியது.

தமது நண்பரும் சிவனடியாருமான மகா வித்துவான் மீனாட்சிசுந்தரனாரை அடிக்கடி தம் வீட்டுக்கு விருந்தினராக அழைத்து அவருடன் தமிழ் நூல்கள்பற்றி உரையாடிவந்தார். உவப்பத் தலைக் கூடுவர்; உள்ளப் பிரிவர். பின்னர் மகா வித்துவானவர்கள் சீர்காழியிலே தங்கிவிடுமாறு ஒழுங்குகள் செய்தார். ஏனெனில் தம் உள்ளத்தில் செயலைச் செய்து முடிக்கத்தக்கதாகத் தமக்கு அறிவுரை கூறவே.

பத்துப்பாட்டு, எட்டுத்தொகை ஆகியவை சங்க காலத் தமிழ் நாட்டைக் காட்டுகின்றன. பதினெண்கீழ்க் கணக்கு கள் அறம் இன்ன தன்மைத்தென விளக்குகின்றன. அவற் றுள் தலையாயது திருக்குறள். அடுத்தாற்போல் எண்ணத்தக்க அறநூல் நாலடியார். இவைகளுக்குத் துணையாக, பழமொழி திரிகடுகம், இன்னாநாற்பது, இனியவை நாற்பது, கார் நாற் பது, களவழி நாற்பது, ஏலாதி, ஐந்திணையெழுபது, ஐந்திணை யைம்பது, திணைமாலை நூற்றைம்பது, திணைமொழி ஐம்பது, முதுமொழிக் காஞ்சி, சிறு பஞ்ச மூலம், ஆசாரக் கோவை கைந்நிலை, நான்மணிக்கடிகை முதலியவை இலங்கு கின்றன. இவ்வாறு நூற்றுக்கணக்கான ஆண்டுகட்குமுன் எழுதப்பட்ட அறநூல்கள் தவிர, அண்மையிலே ஒன்றும் எழுதப்பெறவில்லை யென்றும், ஆதலின் தாம் ஒரு அறநூல் ஆக்க விரும்புவதையும் அறிவித்துத் தாம் எழுதிக்கொண்டி ருக்கும் நூலுக்கு "**நீதி நூல்**", எனப் பெயரிட விரும்பு வதையுமறிவித்தார். மகாவித்வானவர்கள் மகிழ்ச்சி கொண்டு இரண்டொரு பாடல்களை வேதநாயகர் வாயிலாகவே இயம்பக்

கேட்டு, சீரிய கருத்துக்கள் செவ்வையான முறையில் செய்யப்பட்டுள்ளன என்று கூறி நூலை மேலும் எழுதுமாறு ஊக்குவித்தார். காலத்திற்குக் காலம் மக்கள் வழக்க பழக்கங்கள், மாறுபாடடைகின்றன. பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த மக்கட் பண்புக்கேற்றவாறு நூல் செய்யவேண்டிய நிலையைப் பலபட எண்ணினார். ஒழுக்கநூல் செய்து உலகினரைத் தீயொழுக்கத்தினின்றும் நல்லொழுக்க நெறிக்குத் திருப்ப உன்னினார். இவ்வெண்ணப்படியே எழுந்தது நீதி நூலாகும். பாடல்களை வாய்ப்புக்கிட்டியபோது மகாவித்வானவர்களிடம் காட்டியும் வந்தார். இவ்வாறாக நானூறு பாடல்கள் நயம்பட எழுதினார்.

மகாவித்வான் மீனாட்சிசுந்தரனாரவர்களே, நூலுக்கு ஓர் அழகிய சாற்றுக்கவியும் ஈந்தார். சாற்றுக்கவியுடன் நூல் வெளியாயிற்று. அவற்றிற் சில பாடல்களை ஈண்டு அறிவது நலமாகும்.

# நீதி நூல்

## நீதி நூல்

நீதி நூல் முழுமையும் ஆழ்ந்து படிக்கின்றவர்களுக்கு ஒரு உண்மைப் புலப்படும். எளிய சான்றுகள், இனிய தமிழ்ச் சொற்களால், எழில்படக் கோத்து எழுதி வந்திருப்பதை முழுவதும் காணலாகும். இன்று நடைமுறையில் காணத் தகும் பல செயல்கள், வழக்க பழக்கங்கள் நம்மைச் சுற்றி வாழ்பவர்கள், அனைத்தையும் உவமைகளாகத் தம் பாடல்களிலே எடுத்துக் காட்டி நீதியினை விளக்கியிருப்பது எவரும் போற்றாமலிருக்க இயலாது. உவமைகளைக் கையாளுவதில் மிகவும் தேர்ச்சி மிக்கவர் என்னும் உண்மையை அவர் நூல்களே உணர்த்தும். அவர் கையாண்டுள்ள தமிழ்ச் சொற்கள் எவரும் எளிதில் புரிந்து கொள்ளத்தக்கதாக உள்ளன.

முதல் அதிகாரமாக '**தெய்வ முண்டெனல்**' என்று எழுதுகின்றார். திருக்குறளிலே 'இறை வணக்கம்' எனப் பத்துப் பாட்டுக்கள் காணலாகும். இறைவன் உண்டு என வள்ளுவனார் காட்டவேண்டிய நிலை அன்று இல்லாமலிருந்தது போலும். திருக்குறள் பிறந்து ஈராயிரம் ஆண்டுகள் சென்ற பின் தெய்வம் உண்டு என விளக்கவேண்டிய நிலையை பத்தொன்பதாம் நூற்றாண்டில் உணர்ந்த நம் வேதநாயகர் இவ்வதிகாரத் தலைப்பைக் கொடுத்துப் பாடுகின்றார்.

**தெய்வமுண்டெனல்**

அழகிய கட்டிடங்களைப் பார்க்குங்கால் அதை ஆக்கியவன் ஒருவன் உண்டெனவும், அணிகள் ஆடைகள் கண்டால் அவற்றைச் செய்தோர் உண்டென்றும், ஓவியத்தைக் காணுங்கால் அதைத் தீட்டியவன் உண்டென்றும், பாவைக் கூத்து என்னும் பழங்காலக் களிக் காட்சி காணுங்கால் அதை ஆட்டுபவன் திரைமறைவில் உண்டென்றும், இனிய இசை காதில் விழும்போது அதைப் பாடுகின்ற ஒருவன் உண்டென்றும் நாம் முடிவு செய்வதுபோலவே இப்பெரிய உலகைக் காணும் போதும் இதை உண்டாக்கிய ஒருவன் உண்டு என முடிவு செய்தல் வேண்டும்.' இத்தகைய கருத்துக்கள் வைத்துப் பாட்டுக்கள் பாடுகிறார். மரம் அசைகின்றது. காற்று அதை அலைக்கழிக்கின்றது. காற்றைக் கண்ணால் காண இயலாது. ஆனால் அதை உடம்பின் மீதுள்ள உணர்ச்சியால் மட்டும் உணர இயலும். கண்ணால் காணவிடினும், காற்று உண்டு என்பதை மறுக்க இயலாது. நெடுந்தொலைவில் புகை காணுகின்றோம். உடனே அங்கு நெருப்பு உண்டென உறுதிப் படுத்துகின்றோம். நறுமணம் கமழ்கிறது; பக்கத்திலே பூக்கள் பூத்துள்ளன எனப் பகர்கிறோம். இவை போலவே இப்பரந்த பெரியவுலகு, ஆகாயத்திலுள்ள விண்மீன்கள், கதிரவன், நிலவு, கடல்கள் அனைத்தும் தத்தம் வேலைகளை ஒழுங்குபடச் செய்து இயங்குவதைக் கண்டால், இறைவன் உண்டு என உணர முடிகின்றது.

இனி இறைவனைக் காணுதற்கும் வழி காட்டுகின்றார். நம் உடலுறுப்புக்களில் மணம் அறிய மூக்கு ஒன்றுக்குத்தான் இயலும். அல்லாமல் வாய், கண்கள், காதுகள், உடல் இவைகளால் அறிய முடியாது. அதுபோலவே உள்ளத்தில் எண்ணுகின்ற எண்ணங்களைச் சொல்லாக வெளியிடுவதற்கு வாய்

ஒன்றுமட்டும் உதவும். இதர உறுப்புக்களால் பேச இயலாது. இவைபோலவே மெய்த்தொண்டர்கள், தங்கள் ஐம்புலன்களின் இச்சைகளை அடக்கி, மனதை ஒருமுகமாக்கி தம் ஞானக்கண் மூலமாக இறைவனைக் காணுகின்றனர். அதற்கு மாறாக ஊனக் கண்ணினால் அத்தகைய இறைவனைக் காண விரும்பினால் அது இயலாதது. எந்த உறுப்பினால் எதைச் செய்ய இயலுமோ அதற்குப்புறம்பாக வேறு எவற்றாலும் அக்கருமம் செய்ய இயலாது.

இறைவன் என்ற சொல்லுக்குத் தலைவன் என்று பெயர். சாதாரணமாக ஒரு நாட்டுத் தலைவனை அல்லது அரசனைக் காணவேண்டுமானால் அது எளிதல்ல; பல நாட்கள் காத்திருந்து வாய்ப்புக் கிடைக்கும்போது காண வேண்டிய முறைப்படி காணமுடிகிறது. உலகத்திற்கே தலைவனான இறைவனைக்காண வேண்டுமானால் எவ்வித இடையூற்றையும் பொருட்படுத்தாமல் செய்ய வேண்டிய செயல்களையெல்லாம் முறைப்படி செய்து வந்தால், வாய்ப்புக்கிடைக்கும் போது காண இயலும். ஆக அஃது எல்லாரும் செய்யக்கூடியதன்று. பற்றுள்ளம் படைத்த பக்தர்களே இறைவனைக்காண இயலும். இக்கருத்துப்பட எத்துணை நயம்பட இப்பாடல் அமைந்துள்ள தெனக் காணலாம்.

“ வாசமூகக் கறியுமன்றி வாய்விழி செவிமெய் தேரா,
பேச வாயறியுமன்றிப் பின்னை ஓர்புலன் தேராது,
நேசமார் தொண்டர் ஞான நேத்திரங் கொண்டுகாணும்
ஈசனை, முகத்தின் கண்ணால் இகத்தில் யார் காணவல்லார் ”
(நீதி நூல்)

இனி, தெய்வ அருள் பெற்று வாழ்தலில் உண்டாகும் சிறப்பும் ஈண்டு எடுத்துக்காட்டியுள்ளார். உலக முழுதுமே

தம்மை எதிர்த்து வந்த போதிலும் இறைவன் அருள் பெற்றோர் எதற்கும் அஞ்சவேண்டியதில்லை; துன்பமும் வாராது எனவும், அவ்வாறு இறைவன் அருள் பெருதோர் எண்ணில்லாத கரி, பரி, தேர், காலாள் முதலான படைகள் பெற்றிருப்பினும் பிழைத்தல் அரிது என்கிருர்.

"பாரெலாம் பகை செய்தாலும் பராபரன் கருணையுண்டேல்
சாருமோர் துயருமுண்டோ தாயினு மினிய ஐயன்
சீரருள் இன்றேல், எண்ணில் தேர், கரி, பரி, பதாதி
பேரணி யுடையா மேனும் பிழைக்குமாறெவன் கொல்
நெஞ்சே"

(நீதிநூல்)

ஞானசிரியன் பெருமை, பொய்க்குருவின் தன்மை என இரண்டு அதிகாரங்கள் வகுத்துள்ளார். ஞானத்தை பிறருக்குக் கற்பிப்பவர் உயர்ந்த பண்பாடுகள் உள்ளவர். இருளினைப் போக்குபவர். உள்ளத்தில் உயரிய விளக்கேற்றுபவர். இறைவனைக் காண வழி கற்பிப்பவர். பாவம் புண்ணியம் இவையென விளக்குபவர். இவ்வாருக ஞானசிரியன் பெருமையைக் கூறும்போது எவ்விதமான துன்பம் வரினும் தன் பண்பினின்றும் ஒரு சிறிதும் தவறமாட்டார் என்றும் பல சான்றுடன் காட்டியுள்ளார்.

எரிகின்ற சுடரினைத் தாங்கிய விளக்கு ஒன்றைத் தலைகீழாகப் பிடித்தாலும், அச்சுடர் விண்ணை நோக்கியே எரியும். ஆகாயத்தில் இயங்குகின்ற மதி தன் கலைகளில் தேய்வுற்ற போதினும் குளிர் நிலவினையே கொடுக்கும். ஒளி வீசுகின்ற மாணிக்கம் என்னும் இரத்தினம் பொடியாக்கப்பட்டாலும் தன் ஒளியினின்றும் சற்றும் குறையாது. அது போலவே

ஞான நிலையினிற்கும் அறிஞர்கள் எத்தகைய துன்பநிலையுறி னும் தம் ஞானத்தினின்று சிறிதும் தவற மாட்டார்கள்.

" தலை கீழுறச் செய்யினும் தீபம் விண்தன்னை நோக்கும்,
கலை தேயினும் தண் கதிர் வீசும் அக்கங்குல் திங்கள்,
விலை மாமணியைப் பொடிசெய்யினும் மின்னரூது,
நிலை நீங்குவரோ துயர் மேவினு நீர்மையோரே "

உயர்ந்த பண்பாடுகள் உள்ளோரின் சிறந்த நிலையினைச் செப்பிய வேதநாயகர், நல்லோர்போல் நடிக்கின்ற ஆசிரியர் களையும் கண்டார். அவர்களையும் தம் எழுதுகோலால் உலக மக்களுக்குக் காட்டாதிருந்தால் தவறு என்று உன்னினர். எனவே பொய்க் குருவின் தன்மை என்ற தலைப்பில் ஓர் அதி காரமே வகுத்தார். ஏற்ற பொருட்களை இனிய உவமை மூலம் எடுத்து விளக்கி மனதில் பதித்துள்ளார். அதற்கொரு சான்று காண்போம்.

தேன் எவரும் விரும்புவது. அதன் இனிமை அவ்வாறு விரும்பச் செய்யும் இனிமை மிக்கது. அத்தேனைத் தேனீக்கள் சேகரிக்கின்றன. தேனீக்களின் வாயினுல் உறிஞ்சிய தேனையே தம் கூட்டில் கொண்டு சேர்க்கின்றன. ஆக, தேனீக்களின் வாய், எப்போதும் தேன் பாகினுல் நிறைந் திருப்பதால் அது இனிமையானது. ஆனுல் பின்புறம் அமைந்துள்ள வாலிலோ கொடிய கொடுக்கைப் பெற்றுள்ளது. அது பிறரைத் துன்புறுத்தும் நஞ்சு நிறையப் பெற்றுள்ளது.

இத்தேனீ போலவே குருக்கள் சிலர் திரிகின்றனர். இன்னோர் வாய் நிறைய இனிய வார்த்தைகள் பேசுவார்கள். ஆனுல் செயல்களோ உள்ளத்தில் உறைந்திருக்கும் நஞ்சு கலந் ததாயிருக்கும். சொல்லும் செயலும் மாறுபடும். இவர்

களின் செயலைக்காணும் சிறுவர்கூட எள்ளி நகையாடுவர். அவனுடைய எண்ணங்கள் நகைக்கும். மனமே அவனைச் சுடும்.

"வாயிற் றேனும் தன் வாலிற் கொடுக்குஞ்சேர்
ஈயின் வாயினில் இங்கிதச் சொல்லொடுந்
தீய செய்கை யுளானைத் தினஞ் சிறு
சேயும் எள்ளுந்தன் சிந்தையும் எள்ளுமே"

(நீதிசால்)

தாய் தந்தையரை வணங்கல் என்னும் அதிகாரம் ஒன்றினை வகுத்து உலகத்தாரின் உண்மைக் கடமையினைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

'உப்பிட்டவரை உள்ளளவும் நினை' என்பது தமிழ் நாட்டுப் பழமொழி. உப்பு மிகச் சிறு பொருள். மிகச் சிறிய பொருளைத் தந்தவரையும் அகத்தில் நினைத்தல் வேண்டும் எனப் பொருள். இதையே வேதநாயகரும் கையாளுகின்றார். சின்ன ஒரு பொருளைத் தந்தவரைச் சீவன் உள்ளளவும், உள்ளத்திலே உன்னவேண்டும். இவ்வாறு பெரியோர் உரைத்தனர். சிறிய பொருள் ஒன்றை ஈந்தவருக்கு இவ்வளவு நன்றி செய்ய வேண்டுமெனின் நமது உடல், ஆருயிர், இவ்வுலகவாழ்வு இத்தனையும் நமக்குக்கொடுத்த அன்னை தந்தை ஆகிய இருவருக்கும் செய்யும் கைம்மாறு உள்ளதோ? எனக் கேட்கின்றார். கைம்மாறு இல்லையென்றே பதிலளித்தல் முடியும். தாய் தந்தைக்கு ஈடு செய்யக்கூடிய வழியேயில்லை யென்றார். நாம் எதைச் செய்தாலும் அவர்கள் கொடுத்த இவ்வுயிருக்கு ஈடாகாது.

இவ்வாறு கூறுகின்ற கவிஞர் வேதநாயகர் தாய் தந்தையரைப் பாதுகாக்காது வாழுகின்றோரைப் பார்த்துச்

சீற்றங் கொள்கின்றார். தொன்றுதொட்டு நம் நாட்டில் மரம் நட்டு வளர்ப்பது வழக்கம். அவ்வாறு தமக்கென வாழாப் பிறர்க்கென வாழும் பெருந்தகையாரின் பரந்த நோக்கினால் இன்று நாம் அருங்கனிகள் பல அருந்தி மகிழ்கின்றோம்.

கனி தரும் என்க்கருதி மரம் ஒன்றை ஒருவன் நடு கின்றான். அம்மரமோ வளர்கிறது. மரத்தில் மலர்களில்லை. எவரும் தங்கி இளைப்பாறட்டும் எனின் அதில் நிழலுமில்லை. கனிகளும் இல்லை. வீணாக நிற்கின்ற இம்மரத்தை வேரோடு வெட்டி வீழ்த்தி விறகுக்காக்குகிறான். அதுபோலவே கையால் ஏந்திய நாள்தொட்டு முழு ஆளாக வளரும் வரை சொல்ல முடியா இன்னல்பட்டு வளர்த்து ஆளாக்கப்பட்ட ஒருவன் தம் தாய் தந்தையருக்கு ஒருவகையிலும் நன்மை பய வாதவனாக இருப்பின் அவன் உண்டாவதற்குக் காரணமாக இருந்த இறைவனே, அவனை அழிப்பது திண்ணம். இக் கருத்தை எழில் படக் கூறியுள்ளார் கவிஞர்.

"வைத்தவருள முவப்ப மலர், நிழல், கனி யீயாத
அத்தருத் தன்னை வெட்டி அழலிடுமோ போல் ஈன்று
கைத்தலத் தேந்திக்காத்த காதல் தாய் பிதாவை ஓம்பாப்
பித்தரை அத்தன் கொன்று பெரு நரகழல் சேர்ப்பானே"

(நீதி நூல்)

ஆண் மக்களுக்குக் கல்வியளித்து, பெண் மக்களுக்குக் கல்வி மறுத்தலானது நம் உடலில் பாதியை அழகு செய்து மற்றொரு பாதியினை ஒரு அணியுமின்றி விட்டுவிடுதலையொக் கும். இக்கருத்துக்கொண்ட பாடலை ஈண்டு காணலாம்.

"நீதிநூல் மைந்தர்க்கு நிகழ்த்தி மென்மலர்
ஓதியர்க் கோதிடா தொழித்தல் மெய்யினில்
பாதியையே அலங்கரித்துப் பாதிமெய்
மீதினில் அணியின்றி விடுத்த லொக்குமே."

'கணவன் மனைவியர் இயல்பு' என வோர் அதிகாரம் வகுத்து முப்பத்தெட்டுப் பாடல்கள் பாடியுள்ளார். இவ்வதிகாரத்தில் இவ்வளவு அதிகமான பாட்டுக்கள் பாடியதிலிருந்தே நம் நாட்டில் கணவன் மனைவியர் கருத்தொருமித்து வாழ வேண்டும் என்னும் எண்ணம் அவருள்ளத்தில் எத்துணை அளவு ஆழ்ந்து கிடக்கின்றது என அறியலாகும். இனி அவர் காட்டியுள்ள பாடற் கருத்துக்கள் பார்ப்போம்.

மலரிலே தேன் நிறைந்திருப்பது ; மணியும் ஒலியும் பிரிக்கமுடியா இயல்புடன் ஒன்றாக இணைந்திருப்பது; வண்டியிலே சேர்த்துப் பணிபுரிய குதிரைகள் பூட்டப்படுவது; இச்சான்றுகள் காட்டி, கணவனும் மனைவியும் ஒன்றாக இணைக்கப்பட்ட ஒரே உடல் உயிர் என்கின்றார். கணவனைக் காப்பது மனைவியின் மாண்பு எனவும், மனைவியை அன்னையென மதித்து ஆதரித்தல் கணவனின் கடமையெனவும் காட்டினார். மணவாழ்வுக்கு முன்பே மணமக்களின் குணநலன்களை ஆராய்ந்தறிதல் வேண்டுமேயன்றி, மணமானபின் ஒருவரையொருவர் ஆராயப்புகுதல் நடுக்கடலில் செல்லுகின்ற கப்பலின் திண்மையை ஆராய்ந்து கப்பல் பழுதுபட்டது எனச் சொல்லுகின்ற மடமையினையும், உடலுறுப்பு ஒன்றில் உண்டான நோய்க்காக அவ்வுறுப்பினையே களைதலையொக்கும் எனவும் காட்டுகின்றார். இதினின்றும் மக்கள் தம் மணவாழ்வுக்குப் பின் ஒருவரையொருவர் குறைகாணாது நிறைவுமட்டும் பேணி, ஒத்துவாழவேண்டிய இன்றியமையாமை இனிது விளக்கப்படுகிறது. தெருக்கூத்து ஒன்று நடைபெறுகிறது. கணவன் மனைவியாக இருவர் வேடந்தாங்குகின்றனர். இந் நூற்றாண்டில் இருப்பது போலல்லாது சென்ற நூற்றாண்டில் ஆண்களே பெண் வேடம் பூணுவது வழக்கம். இன்றைக்கும் சிற்றூர்களில் இவ்வழக்கம் காணலாம். ஏனெனில் கணவன்

மனேவியைத் தொடவேண்டிய நிலே நாடக நிகழ்ச்சிகளில் வரும். கற்பு நிலேக்குப் பெயர்போன தமிழ் நாட்டில் ஓர் பெண்ணே மற்ருேர் ஆடவன் நாடகத்தில் தீண்டுவதையும்கூட விரும்பவில்லே. எனவே ஆண்களே எவ்வேடத்தையும் அணிதல் வழக்கம். அவ்வாறு நடைபெறுகின்ற கூத்திலே கணவருக் கேற்றபடி மனேவி வேடம் பூண்டோர் நடிக்கின்றனர் என்ருல், உலகறிய, உற்ருர் சுற்றம் அறிய, உண்மையிலே கணவன் மனேவியாக மணம் செய்தோரது வாழ்வு எவ்வளவு மணம் கமழவேண்டும் என்பது உணரற்பாலது. வாழத்தெரியாதோ ரைப் பார்த்து, பற்றுடன் வாழுகின்ற பறவைகள், விருப்பு மாருமல் வாழ்கின்ற விலங்கினங்கள் இவற்றில் ஆண் பெண் அன்பு எவ்வளவு எனப் பார்க்கலாகும்.

தலேவன் தலேவியை விட்டுப் பிரிகின்ருன். வணிக நிமித் தம், கல்வியினிமித்தம் பிரிவு ஏற்படுவது நம் நாட்டு வழக்கம். தலேவியோ மனமில்லாவிடினும் பிரியவேண்டியுளது. அவ் வாறு தலேவன் பிரிந்து சென்றபின்பும் தன்னுடைய தோழி வழக்கம்போலத் தன்னே அலங்கரிக்க வருகின்ருள். அவளேப் பார்த்த தலேவி, நல்லுணவு உண்ணுதல், பூ அணிதல், மண மகிழ்தல், அழகு செய்துகொள்ளுதல் ஆகிய அனேத்தும் கணவனுகிய அவர் பார்ப்பதற்காகவன்ருே? அவர் பிரிந்துள் ளது தெரிந்திருந்தும் என்னே அலங்கரிக்க வந்துள்ளனேயே இது ஓர் மடமையான செயல் என எடுத்துச் சொல்லி அனுப்பி விடுகிருள்.

"உண்ணல் பூச்சூடல் நெஞ்சுவத்தல் ஒப்பனே
பண்ணல் எல்லாம் அவர் பார்க்கவேயன்ருே,
அண்ணல் தன் பிரிவினே அறிந்துந் தோழி நீ
மண்ண வந்தனே யிது மடமையாகுமே"

[ மண்ண — அலங்கரிக்க ]

இத்தகைய செய்யுள் இக்காலத்திற்குப் பொருந்துமோ, அல்லது பெண்கள் இச்செய்யுளை ஒப்புவார்களோ, இயம்ப முடியாது.

இனிக் **கற்பு நெறியை** மிக அழுத்தமாகச் சொல்ல விரும்பிய கவிஞர் மிகக் கடுமையான விதி ஒன்று பிறப்பிக்கின்றார். சுவர் ஒன்றிலே அழகிய சித்திரம் ஒன்றை ஒருவன் காணுகின்றான். சித்திரத்தைத் தன் பத்தினியும் பார்த்து அதன் அழகை அவளும் கொஞ்சம் ரசிக்கட்டும் என எண்ணி மனைவியை அழைக்கிறான். மனைவியோ கற்பிற் சிறந்தவள். உடனே பதில் கொடுக்கிறாள். "சுவற்றில் காணப்படுவது ஒரு ஆணின் உருவமாகுமானால் நான் பார்க்கமாட்டேன். பெண்ணின் உருவமாகுமானால் கணவனாகிய நீர் பார்த்து அதன் அழகில் ஈடுபடுவதையும் பொறுக்கமாட்டேன்" எனப் பகர்ந்தாள். இவளுடைய கற்பு நெறி ஈடுகாட்ட இயலாதது. இக்கருத்தை வைத்துப் பாடியுள்ளார்.

"ஓவியர் நீள் சுவரெழுதும் ஓவியத்தைக் கண்ணுறுவான்
தேவியை யாமழைத்திட ஆண்சித்திரமே நான் பாரேன்,
பாவையர் தம் உருவெனில் நீர்பார்க்க மனம் பொறே
னென்றாள்
காவிவிழி மங்கையிவள் கற்பு வெற்பின் வற்புளதால்"
(நீதி நூல்.)

[ காவி — கருங்குவளை ; வெற்பு — மலை ]

பெண்ணுக்குக் கற்பு நெறி காட்டவந்த பேரறிஞர், ஆண்களுக்கும் கற்பு உண்டு எனவும், அது எம்முறையில் இருத்தல் வேண்டுமெனவும் விவரித்துள்ளார். இவ்வாறான நீதிகளைக் கைக்கொண்டால் இல்லற வாழ்வு எத்துணை இனிமைதரும் என்பதை இயம்பவேண்டியதில்லை.

**உயர்ந்தோர், தாழ்ந்தோர்** உலகில் இல்லை என்னும் உண்மையை நன்கு வலியுறுத்தியுள்ளார். நம் நாட்டில் திருவிழாக் காலங்களிலும் சாதாரண நாட்களிலும் ஏலிராட்டினம் எனத் தெருக்களில் சுழல்வதுண்டு. சிறுவர்களும் நடுத்தர வயதினருங்கூட அதில் ஏறி விளையாடி இன்புறுவர். அந்த இராட்டினத்தில் ஏறுகின்ற ஒருவன் ஒரு விநாடியில் மிக உயரத்திற்குத் தூக்கிச் செல்லப்பட்டு அடுத்த விநாடியிலோ தரை மட்டத்திற்கு இறக்கப்படுகின்றான். அதுபோல செல்வம் படைத்தோர் சிலகாலம் உயர்ந்தும் அடுத்தாற்போல் தாழ்ந்தும் விளங்குவர். இனி, பிறக்கும்போது ஒளி வீசுகின்ற தலைமுடியுடன் பிறந்தவரும் இல்லை. ஒளி வீசாத ஓடு ஒன்று கையில் ஏந்திக்கொண்டே பிறந்தவருமில்லை. ஆக பிறவியிலே அனைவரும் ஒன்று எனவும் பூமியில் பிறக்கின்றபோது மனிதனில் ஏற்ற தாழ்வு இல்லையென்பதையும் முடியோடு பிறந்தவர், ஓட்டுடன் பிறந்தவர் என்று காட்டியுள்ளார். ஆகலால் செல்வ நிலையில் குறைந்தவர், உயர்ந்தவர் என்று செருக்குக் கொள்ளுதல் வெளிமயக்கு என விவரிக்கின்றார்.

"ஒளிமுடியொடும் பிறந்தே உலகம் ஆண்டவருமில்லை
ஒளியரா ஓடொன்றேந்தி இங்குதித்தவருமில்லை
குளிர்கடல் உடுத்தபாரில் குறைந்தவர் மேலோரென்னல்
வெளிமயக்கன்றிச் சற்றும் மெய்யல உணர்வாய் நெஞ்சே"
(நீதி நூல்.)

நெஞ்சுக்கு நேர்மையான அறிவுரை. உன்னைச் சுற்றிலும் இருக்கின்ற உயர்ந்த செல்வம் உன்னோடுகூட வந்ததில்லை. எனவே மேலோன் என எண்ணாதே, என்று மனதிற்கு அறிவுறுத்தும் மாண்பு மிகவும் சிறந்தது.

நீதிபதியாக வீற்றிருந்து பலர் நிலை கண்ட வேதநாயகர் '**பரிதானம்**' என்றவோர் அதிகாரம் வகுத்துள்ளார். பரிதா

னம் என்பதை ‘லஞ்சம்’, ‘கைக்கூலி’ என்பர். பயிர் விளைந்துள்ள காட்டைச் சுற்றிலும் வேலி யடைத்துக் காப்பாற்றுகின்றோம். எனவே வேலியினுடைய வேலை தன்னகத்துள்ளே விளைந்துள்ள பயிரினை எவரும் கவரா வண்ணம் காக்க வேண்டியதாகும். அத்தகைய பணியை விடுத்து அவ் வேலியே பயிரை மேயுமானால் வேலி அங்கு அமைத்தது வீண் ஆகும். அதுபோல நீதி வழங்க வேண்டுமென்று நியமிக்கப்பட்டவர்களே ஒரு சாண் வயிற்றை வளர்க்கப் பிறரிடம் கைக்கூலி பெறுவாரானால் நீதி யெங்கே இருக்கும். அன்றியும் வாங்குகின்ற பணம் வெயிலில் வைக்கப்பட்ட வெண்ணெய் கரைந்தோடுவது போல வீண் செலவை விளைத்துச் சிதறடிக்கப்படும்.

கைக்கூலி வாங்குகின்றவர்களை மன்னன் தண்டிப்பான். வெளியாகும்போதும் அவமானம். கண்டவர்கட்கெல்லாம் அச்சம். பிறருடன் பெரும்பகை, நீங்காத துன்பம் இவைகளை விட்டொழித்துப் பலரையும் அடுத்து மானமழியாத நிலையிலே இயன்ற அளவு தொண்டு செய்து மாழ்வதே இனிமை பயக்கும் என்கின்றார். மேலும் வாதி, எதிரி ஆகிய இருவரிடத்தும் வழக்கின் தொகையைப்போல் இரண்டு மூன்று மடங்குகள் கைக்கூலியாகப் பெறுகின்றனர். கொடாதவர்கள் பக்கம் நீதியிருப்பினும் வழக்கைப் பாதகமாக முடிவு செய்கின்றனர். இருவர் கொடுத்தாலும் வழக்கு ஒருவர் பக்கமாகவே முடிகின்றது. தோல்வியுற்றவன் கொடுத்த பணத்தைக் கேட்டாலோ அவன் மீது வேறோர் பொய் வழக்குப் பிறக்கும். இப்படியாக நீதி வழங்குமிடம் சிலரது நீதியற்ற செயலால் கொள்ளையடிக்கும் இடமாக மாறுகின்றது. வேதநாயகர் நல்ல நீதிநாயகரானபடியால் கைக்கூலி வாங்குமவர்களைக் கண்டு இவ்வாறு எழுதியுள்ளார். இதையறிந்

தாவது இனிமேல் கைக்கூலி வாங்கும் வழக்கம் மறையட்டும் என்பதே இவரின் அவா.

ஏதுக்கோ வாங்குகிறீர் லஞ்சம்—உமக்
கிதைவிட வேருண்டோ பஞ்சம்
வாதுக்கு வீணே வழக்குகள் பேசி
வாங்குகிறீர் என்ன பிழைப்பது சீச்சி (ஏது)

**'பெரியோரைத் தூறல்'** என்னுமோர் தலைப்பில் பிழைபடுவோர்க்கு அறவழி காட்டியுள்ளார். காற்று வேகமாக வீசுகின்றபோது ஒருவன் அக்காற்று வரும் திக்கை நோக்கி எச்சில் உமிழ்கின்றான். துப்பிய அவ்வெச்சில் காற்றால் எறியப்பட்டு மீண்டும் அவன் முகத்திலேயே வந்து விழுவது திண்ணம். அதுபோல எவரொருவர் பெரியோர்மீது பழிச் சொற்கள் கூறுகின்றனரோ அப்பழிச் சொற்கள் சில நாளில் அவனுக்கே திரும்ப வந்து சேரும். மேலும் இவ்வாறு பெரியோரைப்பற்றி இழிவாக எண்ணுகிற நிலைக்குக் காரணங்கள் இன்னின்னவை எனக் காட்டப்பட்டுள்ளன. கசப்பான வாயை உடையவனுக்கு உயர்ந்த தேனும் கசக்கும். காமாலைக் கண்ணனுக்கு வெயிலின் நிறம் மஞ்சள் நிறமாகக் காட்டும். காமநோய் கொண்டார்க்கு மாலை வெயிலும் உச்சிநேர வெயில் போலச் சுடும். குறையுடையவர்கட்குக் குறையில்லாத பொருட்களும் குறையுடையவைகளாகவே காணப்படும். அவ்வாறே தீயவர்கள் கண்ணுக்கு நல்லவர்களும் தீயோராகக் காணப்படுவர்.

"வாய்கைக்கு நோயினர்க்கே மாமதுவுங் கைப்பாகும்
காய்வெயிலு மஞ்சள்நிறங் காமாலைக் கண்ணருக்கே
சாய்நிழலும் சுடுவெயிலாம் தாபச்சுரத்தினர்க்கே
தீயவர்க்குத் தூயவரும் தீயவர்போற் றோன்றுவரே"

**சினம்** என்னும் அதிகாரத்தில் ஓர் சித்திரம் காட்டுகின்றார். சினங்கொண்ட ஒருவனுக்குக் கண் சிவப்பேறுகிறது. உடம்பு முழுவதும் நடுங்குகின்றது. கால்களால் மண்ணைக் கூடப் பேர்த்துவிடுமளவுக்குத் தரையில் உதைக்கிறான். நாக்கினையும் உதட்டையும் பற்களால் கடிக்கிறான். மனம் மிகக் கோபம் அடைகிறது. இத்தகைய செயல்களால் சினங் கொள்பவனின் உள்ளம் புண்ணாகி, உடம்பு நடுங்கிப் படாத பாடு அனுபவிக்கின்றானேயன்றி யார்மீது சினங்கொள்கிறானோ அவருடைய உடல், உள்ளம் இவற்றிற்கு ஒரு கேடும் இல்லை. சினம் அடைகின்ற ஒருவன் படும்பாட்டை இவ்வாறு சித்தரித்துக்காட்டுவதால் இதையறிபவர் சினங்கொள்ளாத அமைதி வாழ்வை அடைய வேண்டுமென்பதை அவர் விரும்புகின்றாரென அறியலாம்.

நல்ல செல்வத்தில் பிறந்து நல்லோர் நட்பினை அடைந்து, பண்பாடுகள் நிறைந்து, பல நூற்களை அறிந்து, நாள்தோறும் வளர்கின்றான் ஒருவன். அவனில்லத்திலே வேலை செய்யும் ஒருவன் எளிய நிலையிலே பிறந்து, கல்வி வாசனை கடுகளவும் இல்லாது வளர்ந்து, பிழைக்க வேறு வழியற்று அலைந்து, வேலை செய்தாவது வயிறு வளர்க்க வந்துள்ள ஒருவன் மீது சினங் கொள்தல் எவ்வாறு பொருந்தும் எனக்காட்டியுள்ளார். வேதநாயகர் நீதிபதியானதால், சினப்போரை எதிரிகளாகக் கொண்டு, யார்மீது சினங் கொள்ளுகின்றாரோ அன்னாரை வாதிகளாகவும் கொண்டு வழக்கை நிறுத்தி அதற்கோர் தீர்ப்பு, ஏழையின் பக்கம் கூறியிருப்பது மிகமிக அறிவுடைமையாகும்.

**செல்வச் செருக்கு** என்ற பிரிவில் இவர் கருத்துக்கள் மிக்க சிறந்தவையாகும். ஒன்பது வகை இரத்தினங்கள் அத்தனையும் ஒருவகைக் கற்களாகும். பொன் முதலானவை

களோ ஒளிவிடும் மண்ணுங்கட்டி. நாம் அணியும் ஆடைகளான துணி வகைகள் பட்டுவகைகள் பருத்தி நூல், பூச்சிக் குடல், நாயின் தோல், விலங்கு முதலியனவற்றின் மயிர்கள். வாசனை வீச நாம் பூசுகின்ற புனுகு, கத்தூரி முதலியனவோ பூனையின் அழுக்கு. பால் பசுவின் இரத்தக்கட்டி. நாம் உண்ணுகின்ற தேன், ஈயின் வாயில் பிறக்கின்ற எச்சில். இத்தகைய பொருட்கள் நிலையான செல்வமென எண்ணி செருக்குக் கொள்ளல் சிறுமையேயன்றிப் பெருமையல்ல.

வேடிக்கையாக ஒன்றை விவரித்துள்ளது விழுமிய கருத்தாகும். சிவப்புக் கற்கள், வெள்ளைக் கற்கள், நீலநிறக் கற்கள் ஆகியவற்றை நவமணிகளெனச் செல்வர் இன்று சேர்க்கின்றனர். ஏழைகளாகிய நாமும், செங்கல், வெண்கல், கருங்கல் இவற்றைச் சேர்ப்போம். இருவர் கல்லையும் எடைபோட்டால் நம் கற்களே எடையதிகமாக இருக்கும். அன்றியும் நம் கற்கள் எவ்விடத்திலும் காணலாகும். எதிர்ப்பவர்களை நம் கற்கள் நாசஞ் செய்ய உதவும். உண்மை இவ்வாறிருக்க செல்வர்கள் ஏழைகளைவிட உயர்ந்தோர் என்றிருத்தல் ஏனோ? என்றோர் வினா விடுக்கின்றார். ஆக செல்வர்கள் சிவப்பு நீலம், வெண்மை, பச்சை முதலிய நிறங்களில் சிறு கற்கள் சேர்த்துத் தங்கத்துடன் பதித்துவைத்துக் கொள்வதால் அடையும் செருக்கை உடைத்தெறிகிறார்.

**பிழை பொறுத்தல்** என ஓர் அதிகாரத்தில் பெருமைக்குரிய பல பண்புகள் விளக்கப்பட்டுள்ளன. மழை பெய்கிறது. இதை அனைவரும் விரும்புவர். ஆனால் அம்மழையுடன் இடியும் இடிக்கிறது. எவரும் விரும்பாதது. மதி ஆகாயத்தே ஒளிவீசுகிறது. அதனிடத்தும் ஓர் களங்கம் உண்டு. ரோசா மலர் மலர்ந்துள்ளது. அதன் அருகில் முள்ளுண்டு. இனிமை

மிகுந்த சாறு நிறைந்துள்ள கரும்பு உள்ளது. அதனோடே சக்கைப் பொருளும் உள்ளது. நல்ல கனி ஒன்றுள்ளது அக் கனியில் கழிக்கவேண்டிய கொட்டை, தோல் உள்ளன. இவ்வாறாக எல்லாப் பொருள்களிலும் விரும்பும் பொருளும் விரும்பாத பொருளுங் கலந்தேயுள்ளன. அதுபோலவே இச்சையால் இழுக்கப்பட்டு மனிதனும் பிழை செய்வது இயல்பு. பிழை இல்லாத மனிதனே இல்லை. கடவுள் ஒருவரே தவறு இல்லாதவர். ஆதலின் மக்களை எவரும் வெறுத்தலாகாது. அக்குற்றத்தைப் பொறுத்தலே தலையாயது.

**பொறுமைபற்றி மற்றோர் கருத்து**

நாக்கு, பற்களினூடே பட்டுத் தவிக்கின்றது. பற்கள் ஓரோர் சமயம் நாக்கினைக் கடித்துவிடுகின்றன எனச் சொல்லிப் பற்கள் முழுவதையும் எடுத்துவிடுபவர் இலர். நடந்து கொண்டிருக்கும்போதே நமது பாதங்கள் திடீரென வழுக்கி விடுகிறது எனக் கருதி அதை வெட்டி எறிபவர்களும் இல்லை. ஆதலின் பொறுமையுடன் சகித்தல் தெய்வத்தன்மைபோன்றதாகும். இந்த உலகமானது நல்லவர்கள், தீயவர்கள் ஆகிய இருவரையுமே தாங்கி இயங்குகின்றது. தீயவரைத் தாங்க முடியாதெனச் செப்புவதில்லை. மழை நல்லோருக்கு மட்டும் பெய்வேனெனப் பெய்வதில்லை. ஆகாய வழி ஒளிவீசி உலகினை உயிர்ப்பிக்கும் கதிரவனும் எல்லோருக்கும் காய்கின்றான். காற்றும் அவ்வாறே இருவருக்கும் வீசும். ஏன் இறைவனுமே ஏழைகளுக்காக இரங்கி மனித அவதாரங் கொண்டானெனில் தீயோர் மீது சினங்கொள்ளுவதனினும் பொறுத்தலே சிறப்புடையது. எத்துணை அழகிய கருத்துக்கள் நயம்பட விளக்கப்பட்டுள்ளன.

இன்னும் எத்தனையோ அதிகாரங்கள் இருப்பினும் அவற்றை விடுத்து இறுதியாக '**யாக்கை நிலையாமை**' என்ற

ஒரு பிரிவினை மட்டும் ஈண்டு காணுவது போதுமானது. மனித உடல் மிகவும் கேவலமானது. ஒன்றுக்கும் உதவாதது. மாடு ஆடு இவை இறந்தால், அவற்றின் தசை, மயிர் தோல், கொம்பு இவைகள் பயன்படும். மண்ணால் செய்யப்பட்ட கலம் உடைந்தாலுங்கூட ஓடாக உதவும். மரம், கல் இவை வீழ்ந்தாலும் பலவகையில் பயன்படும். ஒரு வீடு இடிந்து அழிந்தாலும், அதன் பொருட்கள் பயனுகும். காடு அழிந்தால் விறகாகும். மாயக்கூடாகிய இம்மனித வுடம்பு அழிந்தால் எதற்கும் உதவாது.

இத்தகைய உடல் உயிரினைத் தாங்கி நிற்கிறது. உயிர் உடலை நீங்குங் காலம் எவராலும் இயம்ப முடியாது. ஆனால் உலகிலுள்ள பல பொருட்களுக்குக் காலவரையறை உண்டு. நெற் போன்ற பயிர்களை அறுவடைசெய்ய ஒரு காலம் உண்டு. மலர் பறிக்க ஓர் நேரம் உண்டு. கல்லுடைக்கவும் ஓர் காலமுண்டு. மரம் நன்றாக முற்றியபின் இன்ன காலத்தில் அறுக்கலாம் எனக் கணக்குண்டு. ஆனால் கொடிய கூற்றுவன் வாழ்நாட்களாகிய புல்லறுக்க வருங்காலம் எவராலும் இயம்ப முடியாது. இக்கருத்துக்கள் அழகுபடப் பொருத்தப்பட்டுள்ளன.

“ நெல்லறுக்க வோர்காலம் மலர்கொய்ய வோர்காலம் நெடிய பாரக்
கல்லறுக்க வோர்காலம் மரமறுக்க வோர்காலம் கணிதமுண்டு
வல்லரக்கனனைய நமன்நினைத்த போதெல்லாம் வாழ்நாளென்னும்
புல்லறுக்க வருவானெனில் நெஞ்சமே மற்றினியாம் புகல்வ
தென்னே ”

எளிய நடையிலே இவ்வாறு நானூறு பாடல்கள் வரை பாடி அதனை வித்துவானவர்களுக்கும் காட்டி அரங்கேற்றி வெளியிட்டார். அச்சாகியும் வெளி வந்தது. [தமிழ் வளர்த்து,

தமிழ்ப் பணியே செய்துவரும் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார், நீதிநூலை விளக்கவுரையுடன் அண்மையிலே 1950-ல் (புதிய பதிப்பு) ஒன்று வெளியிட்டுள்ளனர்.] நாட்டு மக்களின் நல்வாழ்வு ஒன்றிலே கருத்தூன்றிய வேதநாயகர், நல்லாரிணக்கமாகிய மகா வித்துவானவர்கள் நட்புக்கொண்டு தமிழ் நாட்டுக்குத் தலைசிறந்த நூலொன்று தானும் செய்துள்ளதை தமிழர் என்றென்றும் மறக்க வியலாது. எளிய சான்றுகள், அரிய கருத்துக்கள், வினாவிடைகள், சொல்லொழுக்கு, சொன்னயம் அனைத்தும் ஒருங்கே இந்நூலில் பாக்கக் காணலாம். பேச்சாளர்கள் எழுத்தாளர்கள் பெரிதும் எடுத்தாள்வதற்கேற்றவாறு இனிமையுள்ள நீதிகள் பொதிந்து விளங்கும். இந்நூல் பொன்னூலாகப் பொதிந்து விளங்கும் நன்னாள் வந்துகொண்டேயுள்ளது. அறிஞர்கள் இதன் அருமையை யறிந்து போற்றி வருகின்றனர்.

**சீர்காழிக் கோவை**

வேதநாயகரால் தாம் வாழும் சீர்காழிக்கு அழைத்து வரப்பட்ட மகாவித்துவான் மீனாட்சிசுந்தரர் நினைத்த நேரத்தில் கணக்கற்ற கவி பாடும் வல்லமை பெற்றவர். சென்ற ஊர்களுக்கெல்லாம் தலபுராணம் பாடுபவர். அவரின் சிவபக்தியையும், தமிழ்ப்பற்றையும் செவ்வையாயறிந்த வேதநாயகர், சீர்காழியில் எழுந்தருளியுள்ள சிவபெருமான்மீது ஓர் கோவை பாடுமாறு தம் நண்பர் மகாவித்துவானவர்களை வேண்டிக் கொண்டார். அவ்வாறே அவரும் சீர்காழிச் செல்வன்மீது ஓர் கோவையைச் சில நாட்களில் பாடி முடித்தார். சிவபெருமான் திரு ஆலயத்திலேயே இதை அரங்கேற்றம் செய்வித்தல் வேண்டுமென வேதநாயகரும் அவரின் நண்பர்கள் பலரும் விரும்பினர். தமிழறிஞர் பலருக்கு இத்தகவல் கொடுத்து வரவழைத்தனர். குறித்த ஓர் நன்னாளிலே கோவிலுக்குள்

இருந்த மண்டபம் ஒன்றிலே அரங்கேற்றம் தொடங்கியது. வந்திருந்த அனைவரும் இவ்வரங்கேற்றச் சபைக்கு வேத நாயகரே தலைமை தாங்கவேண்டுமென்று விரும்ப, அருமை நண்பர், உயிரனையார் செய்த நூலை உலகறியச் செய்வதிலே உவப்புக் கொண்ட நீதிபதி வேதநாயகர் மகிழ்வுடன் அப் பொறுப்பை ஏற்றார். ஒவ்வொரு பாடலாக ஆராய்ச்சி செய் தனர். உயர்ந்த புதுக்கருத்துக்கள் மகாவித்துவானவர் களால் தகுந்த முறையில் விளக்கிச் சொல்லப்பட்டது. சிவ நேசச் செல்வர் பலர் கூடினர். அறிஞர் பலர் ஆங்கு குழுமி யிருந்தனர். எல்லோருமே இதன் இனிமையைப் பருகி மெய்மறந்து கேட்டனர்.

‘ செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம், அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை ’

என்ற வள்ளுவனார் வாக்குக் கிணங்க இச் செல்வத்தை யடைந் தவர் நிலை எவர் இயம்ப இயலும்? அரங்கேற்றம் பல நாட்கள் நடைபெற்றன.

ஆனால் இந்நல்ல காரியத்திற்கும் எதிர்ப்பு இல்லாமல் இல்லை. பொறாமை யென்பதை அழுக்காறு என்பர். மனம் தூய நிலையினின்று மாறுபட்டு அழுக்கடையும் நிலை என்றே அதன் பொருள். வேதநாயகருங்கூட அழுக்காற்றைப் பற்றிப் பாடியபோது ‘ஒருவன் துன்பமடைவது கண்டு தனக்குத் தலையில் முடிசூட்டியது போலவும், அவன் நன்னிலை கண்டு தன் தாய், மனைவி, சேய் இறந்து பட்டால் எத்துணை வருத்தமடைவரோ அது போலவும் அழுக்காறடைந்தோர் இழுக்குப் படுவது இயல்பு’ என்றார். அதே போல மீனாட்சி சுந்தரனார் சீர்காழிக் கோவை பாடிச் சிறப்படைய, அடைய ஆங்கிருந்த ஒருசிலர் வீண்மறுப்புக் கிளப்பி விவாதம் பண்ணி

னர். பொறுமையின் புகலிடம் மகாவித்துவானவர்களோ அவர்கள் கிளப்பிய மறுப்புக்குத் தக்க விடைகளும் விளக்கமும் சொன்னார். வாதத்திற்கு மருந்துண்டு, பிடிவாதத்திற்கு மருந்து இல்லை. சில முரடர்கள் வீண் விதண்டாவாதம் செய்தனர். கட்டுக் கடங்காத அறிவற்ற கேள்விகளைக் கேட்டனர். வேண்டுமென்றே தடையும் இடையூறும் செய்தனர். வேதநாயகர் கூறிய புத்திமதியை ஏற்றாரில்லர். நீதிபதி மிகவும் மனம் வருந்தினார். சிவன் கோவிலிலே சிவபுராணத் தொண்டு செய்யும்போது சிவனடியாரால் தடையும் இடையூறுமா, என மனம் நொந்தார். புனிதமான புராணத்தை இகழ்ந்து ஏசிய வீணர்களை அமைதியாய் வெளியே கொண்டு போய் விட்டு வருமாறு தன் வேலையாட்களை ஏவினார். இவ்வாறு களையை நீக்கியபின் பசும் பயிராகிய சீர்காழிப் புராணம் இனிமையாக அரங்கேறியது. மக்களிடை வழக்குகளைத் தீர்த்து வைக்கும் நீதிபதி சிக்கலான இச்செயலையும் தீர்க்க வேண்டியிருந்தது. சீர்காழிக் கோவை அரங்கேற்றம் சில காலம் தொடர்ந்து நடைபெற்றது. இறுதிவரை இன்னலொன்றும் நிகழாமல் தாமே வந்திருந்து தலைமை தாங்கிக் கோவையை அரங்கேற்றினர் நம் நீதிபதி.

அரங்கேற்றம் நடைபெறுகின்ற நாளில் அன்றன்று மீனாட்சிசுந்தரனார் மீது வேதநாயகர் ஓர் கவிபாடி அக்கவியையும் தாம் பாடிக் காட்டி வந்தார். ஓர் நாள் சிவபெருமானையே பார்த்து "விண்ணவரும் மண்ணவரும் விருப்புடனே துதிகள் பல சொல்லக் கேட்டிருப்பீர். கணக்கற்ற துதிமாலை உம் கழுத்தில் உண்டு. அறிவிலே சிறந்த அண்ணல் மீனாட்சிசுந்தரனார் கோவையைப்போல் அன்பு கனிந்த மாலையுண்டா? நாம் சீர்காழி நீதிபதி. நம்முன் உண்மையை உரைக்க வேண்டும்" என்று சிவபெருமானைக் கேட்பதுபோல் பாட்டெழுதி மகா

வித்துவானவர்களின் கவி மாண்பினை விளக்கினர். அக் கவியைக் கேட்ட மகாவித்துவானவர்களே பின் வரும் பாட்டைத் தானும் பாடினர்.

“ நாட்டுக்கு நல்லகுளத் தூர் வேதநாயக நாம மாலே !
வீட்டுக்கு வாயிலெனும் காழிக்கோவை எனைவிளம்பச்செய்தே
எட்டுக்கும் அடங்காத துதிகவிகள் சொற்றனை நின் இயற் பாட்டுள் ஓர்
பாட்டுக்கு நான் செய்த தொன்றேபல் செய்தாலும் பற்று அன்றே ”

‘ குளத்தூர்க் கோவைக்குரிய அறிஞரே ! காழிகோவை என்னைப்பாடுமாறு செய்தவர் நீரேயாவீர். சொல்லமுடியாத பாடல்கள் எழுதிக்குவித்து என்னைப் புகழ்ந்தீர். தங்களின் ஒரு பாட்டுக்கு ஈடாக நான் பல எழுதினாலும் நிறைவாகாது ’ எனப் பொருள்கொள்ளப் பாடினர். இவ்வாறு எழுதியதி னின்று ஒருவரை யொருவர் எவ்வளவு மதித்தனர் என்று அறிய முடியும். உண்மை நட்பும், உயர் அறிவும், உலவுகின்ற இடத்திலே, குலம் மதம் அனைத்தும் ஓடி ஒளிதல் இயல் பன்றே.

“ முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு ”

என்ற வள்ளுவர் வாக்கு வாய்மை யுள்ளது. இவ்வாறாக மகா வித்துவான் மீனாட்சிசுந்தரனாரின் சீர்காழிக் கோவை சிறப் புடன் அரங்கேறியது.

மயிலாடுதுறையிலிருந்த செல்வர் சிலர் மகாவித்துவா னவர்களின் தலபுராணங்கள் பாடும் புலமையினை நன்கறிந்து, அச்சிறப்பைத் தாங்களும் அடையவேண்டுமென எண்ணி சீர்காழிப்பதி வந்து, மகாவித்துவானவர்களைத் தம்மூரான

மாயூரம் வருமாறு வேண்டினர். திருவாவடுதுறைக்கு அடிக்கடி செல்ல இது வசதி என எண்ணிய நம் சிவநேசர் அவ்வாறே அவர்கள் வேண்டுகோளுக்கிசைந்தார். வேதநாயகர்பால் பிரியா விடைபெற்றுப் பிரிந்து சென்றார். அப்பிரிவு இருவரையும் துயரத்துள் ஆழ்த்தியது. கண்களில் நீர் பெருக, உள்ளம் உடைந்தோட ஒருவரையொருவர் விட்டுப்பிரிந்தனர். மாயூரத்திற்கு வந்த மகாவித்துவானவர்கள் பத்தாண்டுக் காலம் அங்கேயே தங்கியிருந்தார்.

சீர்காழியிலே வேதநாயகர் இரண்டாண்டுகளுக்கு அதிகமாகவே வேலை பார்த்தார். ஓய்வுற்ற நேரங்களில் தமிழ்த் தொண்டு புரிதலன்றி மற்ற நேரங்களில் தம் அலுவலிலே கண்ணுங் கருத்துமாயிருந்தார். நீதியினை நிறுவ வந்த அலுவலாளர்களில் அநேகர் நிலை கண்டு வருந்தினர். தாம் அன்னாரைத் திருத்துதற்குத் வழியின்றித் தவித்தார். தாமே நன்னெறியில் நடந்து காட்டுவதே செய்ய வேண்டிய பணி எனக் கொண்டு தம் நீதி வழங்கும் செயலிலே நேர்மையாக நின்றார்.

**ஒரு சான்று**

தனது நீதிமன்றத்திலே வழக்கொன்று நீண்ட நாட்கள் நடைபெற்று வந்தது. வாதி பொய்வழக்குத் தொடுத்துள்ளான் என்பதையும், எதிரி பக்கம் மெய் இருந்ததையும் நன்கு கண்டுகொண்டார் நம் வேதநாயகர். வழக்குரைஞர்கள் இரு கட்சியின் சார்பில் எடுத்துக் கூறினவற்றை யெல்லாம் கேட்டார். நீதியின் முடிவு கூறும் நாள் நெருங்கியது. தன்னிடம் மெய்யில்லை யென்பதை யுணர்ந்த வாதியானவன், வேதநாயகர் வீட்டுக்கு ஓர் நாள் விரைந்து சென்றான். வெளியே காத்திருந்து, நீதிபதி தனியாக இருக்கும் நிலையை அறிந்து உள்ளே சென்றான். வந்தவர் எவரானாலும் வரவேற்று உபசரிக்கும்

பழக்கமுள்ள நீதிபதி, வாதியென அறிந்தும் வரவேற்று இன்சொற்கள் கூறி இருக்குமாறு சொன்னார். அன்புரைகள் கண்ட அவனும் சொல்லொணு மகிழ்வு கொண்டு தான் வந்த நோக்கினை அவரிடம் விண்டு, எப்படியும் தன்பக்கம் தீர்ப்புக் கூறவேண்டுமென வேண்டி நூறு ரூபாயை நீட்டினன். அவனுடைய லஞ்சத்தையும் வஞ்சத்தையும் நன்குணர்ந்த வேத நாயகர் இதற்கொரு பாடங் கற்பிக்க வேண்டுமென எண்ணி, ரூபாயை வாங்கிக்கொண்டு நல்லது செய்வதாகச் சொல்லி அவனை அனுப்பி விட்டார். பணத்தைப் பெற்றுக்கொண்டதால் தீர்ப்பு தனக்கேயென, அவன் கட்டிய மனக்கோட்டைக்கு அளவேயில்லை. மறுநாட் காலை வழக்கம்போல் நீதிமன்றம் கூடியது. நீதிமன்றம் தொடங்கும் குறித்த நேரத்திற்குப் பணமூட்டையைக் கையிலேந்திக் காட்சியளித்தார் நீதிபதி. பணத்தைக்கண்ட வாதியின் உள்ளம் பிணத்தைக்கண்ட பித்தன் போல் ஆயிற்று. வழக்குரைஞர்கள், எழுத்தாளர்கள், வாதி, எதிரி, சாட்சிகள் ஆகிய அனைவரும் அவரவர்கள் இருக்குமிடத்தில் அமர்ந்தனர். நீதிபதியே வழக்கைப் பேசத் தொடங்கி முதல் நாள் தம்மில்லத்தில் நடந்தவையனைத்தையும் முறையே சொல்லி ‘ நூறு ரூபாய்களே வந்து வாதியிடம் பொய்யுண்டு எனவும், எதிரியிடம் மெய்யுண்டு எனவும் நம்மிடம் சாட்சி கூறின’ என அப்பணத்தை எடுத்துக் காட்டி எதிரிக்குச் சார்பாகத் தீர்ப்புக் கூறினர். இதையறிந்த வாதி தனக்கென்ன தண்டனை நேருமோ என அஞ்சி யிருந்தான். அவன்மேல் இரக்கங் கொண்டு விடுதலை செய்து போகச் சொன்னர். நூறு ரூபாயையும் எதிரிக்கு இனமாகக் கொடுத்தனுப்பினர். சீர்காழி நீதிமன்றச் சிறப்பு ஊர் தோறும் பேசப்பட்டு வேத நாயகரின் சிறப்பை அதிகரித்தது.

# மாயூரத் தொண்டு

1860-ஆம் ஆண்டு மாயூரத்திற்கு நீதிபதியாக மாற்றப் பட்டார். மயிலாடுதுறை என்றும், மாயவரம் என்றும், மயூரம் என்றும் பெயர் வழங்கும் இவ்வூரில் 1860-ஆம் ஆண்டு முதல் 1872-ஆம் ஆண்டு முடிய கிட்டத்தட்டப் பதின்மூன்றுண்டுகள் தொடர்ச்சியாக வேலை பார்த்தார். அவருடைய ஊழியத்தில் நீண்டகாலம் இவ்வூரில் தொண்டு புரிந்தமையாலும், ஓய்வுக்குப் பின் இவ்வூரிலேயே தங்கித் தம் இறுதி நாட்கள் வரை வாழ்ந்த மையாலும் இவரை '**மாயூரம் வேதநாயகர்**' என்றே மக்கள் சொல்லுவர். இவர் பிறந்த ஊரான குளத்தூர், மகாவித்து வான் மீனுட்சிசுந்தரனர் பாடிய கோவையினல் மற்றேருக்குத் தெரிந்தது. ஆக நீதிபதி வேதநாயகரின் பெயரால் இரண்டு ஊர்கள் விளக்கம் பெற்றன.

இவ்வூருக்கு நீதிபதியாக வந்த 1860-ஆம் ஆண்டில் தான் நீதிநூல் இரண்டாம் பதிப்பாக அறுநூறு பாட்டுக் களுடன் வெளிவந்தது. முதல் பதிப்பில் பாடிய நானூறு பாட்டுக்களுடன் மகாவித்துவானவர்கள் வேண்டுகோளின்படி மீண்டும் இருநூறு பாடல்கள் பாடி அவற்றையும் சேர்த்து இங்கு வெளியிட்டார்.

தம்முடைய நீதிமன்றத்திலே இவர் நீதி வழங்குங்கால் தாம் பாடிய நீதிநூலில் கண்ட நீதிகளுக்கேற்பத் தீர்ப்புக்கள் கூறினர் என்பர். இன்றுவரை மாயவரத்தில் இவர் நீதிமன்றச் செயல்கள்பல பேசப்படுகின்றன வெனின் தீர்ப்புத் திறன் எத்துணை நேர்மையானவை என எண்ணற் பாலது.

மகாவித்துவான் மீனுட்சிசுந்தரனுரைப் பிரிந்து வாழ்தல் நேர்ந்ததே என, வருந்திய உள்ளத்துடனிருந்த பெருந்தகை வேதநாயகருக்கு இவ்வூர் வந்ததும் தம் பழைய நட்பு மீண்டும் வாய்த்ததை எண்ணி மகிழ்ந்தார். இதுவும் இறைவனருள் என எண்ணி நன்றி செலுத்தினர். மீண்டும் சீர்காழிபோல, மாயூரத்திலும் அடிக்கடி சந்தித்தனர்.

**பாளையங்கோட்டை வித்துவான் சந்திப்பு**

பத்தொன்பதாம் நூற்றுண்டுப் புலவர் பலரில் பாளையங் கோட்டை வித்துவான் ஹென்றி ஆல்பிரடு கிருஷ்ண பிள்ளை என்பாரை முன்னமே காட்டியுள்ளோம். பத்தொன்பதாம் நூற்றுண்டிலும் கிருத்துவப் பாதிரிகள் பலர் இயேசு பெருமானை இந்நாட்டாருக்குக் காட்டுமாறு வந்து தொண்டாற்றினர். மதுரை மாவட்டத்தில் நடந்த பணியைக் காட்டிலும் திருநெல் வேலி மாவட்டத்தில் சிறந்த வேலைகள் பல நடந்தன. தமிழ் மொழியை இதர மொழிகளோடு ஒப்பிட்டு, தொன்மை மொழி, உயர் மொழி, தனித்தியங்கும் மொழி, என அதன் பெருமையை யுலகறியச் செய்த கிருத்துவப் பெருந்தொண்டர் **கால்டுவெல் ஐயர்** பணியாற்றிய இடம் இம் மாவட்டமே யாகும். இவர் போன்ற பாதிரிகள், பள்ளிகள், கல்லூரிகள் பல வைத்து அதன் மூலம் கல்வியறிவு தந்து மக்களைத் தட்டி யெழுப்பினர். மருத்துவ விடுதிகள் பல தோற்றுவித்து உடல் நலம் பேணுமாறு ஊக்குவித்தனர். இன்னோரன்ன அரும் பணிகள் பல அன்று முதல் இன்றுவரை இயேசுநாதர் பெயரால் நடைபெறுவதையும், அவை மூலம் விளையும் நன்மைகளையும் நடுநிலை அறிஞர் நன்கறிவர்.

பாளையங்கோட்டைக் கல்லூரியிலே தமிழ்ப் பணியாற்றிய வித்துவான் கெ. ஆ. கிருஷ்ணபிள்ளை வைணவ வேளாளக் குடும்

பத்தில் பிறந்து, கம்பராமாயணம், நாலாயிரத் திவ்விய பிரபந்தம் போன்ற பெரு நூற்களாராய்ச்சியில் பெரிதும் ஈடுபட்டுப் பெரும் புலமை பெற்றவர். கிருத்துவ நல்லோர் சிலர் கூட்டுறவால் இயேசு பெருமான் வாழ்க்கையை யறிந்தார்; வியந்தார். உயர்வழி உணர்ந்தார். அந்நெறியில் தாமே இறங்கினர். சொல்ல முடியா எதிர்ப்பு, சுற்றத்தார் செய்த இன்னல்கள் அனைத்தும் இயேசு பெருமான் பொருட்டு இனிது ஏற்றூர். தாம் கிருத்துவ நெறியினைத் தழுவியபின் '**இரட்சணிய யாத்திரிகம்**' '**இரட்சணிய மனோகரம்**' போன்ற நூல்களியற்றினார். ஜான் பன்யன் என்ற பெரியார் ஒருவர் ஆங்கிலத்தில் அழகிய நூலொன்று ஆக்கியிருந்தார். மோட்ச பிரயாணம் (Pilgrims Progress) ஆகிய அந்நூல் ஆங்கிலம், கிரேக்கு, லத்தீன், பாரசீகம் போன்ற உலகப் பெரு மொழிகள் அனைத்திலும் மொழி பெயர்க்கப் பட்டுள்ளன. ஆங்கிலம் கற்றறிந்த அறிஞர் பலரும் அந்நூலைப் படிந்திருப்பர். இந்த உலகப் பெருங் காவியத்தை இன்பத் தமிழில் யாத்து, எழில்மிக்க ஆபரணமாகத் தமிழ் அன்னைக்குச் சூட்ட ஆசைப் பட்டார். அவ்வாறே சுமார் 4000 கவிகள் வரை இயற்றி 'இரட்சணிய யாத்திரிகம்' எனப் பெயரிட்டு, அச்சிட்டு வெளியிட்டார் கவிஞர் கெ. ஆ. கிருஷ்ண பிள்ளை. கடவுளை அடைய விரும்பிய ஒரு பக்தன் பல இன்னல்களை அடைந்தும் விடாமுயற்சியோடு, உறுதிப்பாட்டுடனும் ஆண்மையுடனும் வழி விலகாது, பொறுமையோடு துன்பத்தை யேற்றுப் பாதை வழியே செல்வதைக் கூறுகின்றது இக்காப்பியம்.

கிருஷ்ண பிள்ளையவர்களின் பெரும் தமிழ்ப் புலமையினையும், ஒழுக்கம் சான்ற வாழ்க்கையினையும், தொண்டினையும் அறிந்த நம் நீதிபதி வேதநாயகர் அவரைக் காணவேண்டுமென்னும் அவாக் கொண்டார். அவர் எழுதிய பாக்கள் பல முன்

னமே பார்த்திருந்தார். அண்மையில் பாளையங்கோட்டைக் கவி ஞர் தம் நூல்களை அச்சு வாகனமேற்ற சென்னையம்பதிக்குச் செல்வதை யறிந்தார். மாயவரத்தில் தாம் இருந்து பணி யாற்றுவதையும், சென்னை செல்லும் வழியிலே அவர் தம் முடன் சில நாட்கள் தங்கவேண்டுமென்னும் செய்தியினையும் அவருக்குத் தெரிவித்து வேண்டிக் கொண்டார். வேதநாயக ரையும் முன்னரே கேள்வியுற்றிருந்த வித்துவான் கெ. ஆ. கிருஷ்ண பிள்ளை இவ்வேண்டுகோளுக்கு இசைந்தார். அவ் வாறே சென்னை செல்லும் வழியில் மாயூரத்தில் இறங்கினார்.

"செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத்தவர்க்கு"

என்ற குறட்பாவை நன்கறிந்த வேதநாயகர் அவ்விருந்தினரை உபசரித்த விதம் ஈண்டு சொல்லவும் வேண்டுமோ?

மாயவரத்தில் உள்ள தமிழறிஞர் அனைவரையும் கூட்டி னார். மகாவித்துவான் மீனாட்சிசுந்தரனாரும் வந்திருந்தார். வந்திருந்த அனைவருக்கும் வித்துவான் கிருஷ்ண பிள்ளையவர் களை அறிமுகப்படுத்தி இரட்சணிய யாத்திரிகம் என்னும் காப் பியத்தினின்றும் சில பாடல்களைப் படித்துக் காட்டச் செய்து அவற்றைக்கேட்டு இன்புற்றார். இரட்சணிய மனோகரம் என்னும் நூலில் எழுதியுள்ள தேவாரப் பாடல்கள் பல பாடக் கேட்டு ஆனந்தக் கடலில் ஆழ்ந்தார். வித்துவான் கிருஷ்ண பிள்ளையை வெகுவாகப் பாராட்டித் தம் வாழ்த்தும் கூறினார். வந்திருந்தோர் சிந்தையனைத்தும் பக்தி யெனும் பெரு வெள் ளத்தால் ஈர்க்கப்பட்டன. எம்மதமாயினும் இறைவன் பால் காணுகின்ற இன்பத்திற்கு நிகருண்டோ? வித்துவான் கிருஷ்ண பிள்ளையவர்களும் வேதநாயகர் செய்த நீதிநூல் பார்த்து மகிழ்ந்தார். பாளையங்கோட்டை வித்துவானும்,

மாயவரம் நீதிபதிக் கவிஞரும் ஒரே வயதை யுடையவர் என்பதும் ஈண்டு நினைவிற் கொள்ளத் தக்கது. வேதநாயகரிடம் விடைபெற்று வித்துவான் கிருஷ்ண பிள்ளை சென்னை சென்ருர்.

## இல்லற வாழ்வு

சிறந்த கருத்துக்களும், சீரிய குணங்களும், பரந்த நோக்கும் கொண்டு வாழ்ந்த நீதிபர் வேதநாயகருக்கு இல்லற வாழ்வு இனிமையாக அமையவில்லை. எவ்வாறெனில் அவர் ஐந்து மனைவிகள் மணஞ் செய்யவேண்டிய நிலை யெய்தினுர். காரைக்கால் **பாப்பம்மாள்** என்பவர் அவரின் முதல் மனைவி யாவர். இல்லற வாழ்வை இனிமையாகத் தொடக்கிய சில காலத்திற்குள்ளே இவ்வுலக வாழ்வினின்றும் விடைபெற்ருர். இரண்டாவதாக **இலாசர் அம்மையார்** என்பவரை மணந்து அவரும் முதல் மனைவியார் சென்றவிடமே சென்ருர். மூன்ரும் மனைவியார் **மாணிக்கத்தம்மையார்.** புதுச்சேரியில் பிறந்து வாழ்ந்தவர். தன் தமைக்கையான ஞானப்பூ அம்மையாரின் மகள். மலரும் மணமும்போல கருத்தொருமித்த வாழ்வு நடாத்தி வந்தனர். முன்னிருவர் சென்றவழி இவரும் செல்லவே கல்வி நூல் கற்றறிந்த வேதநாயகர் துன்பந்தாங்க இயலாமல் மனமுருகிப் பாக்கள் பாடி தன் துன்பத்தை ஒருவாறு வெளியிட்டார்.

“என்னொடு வாழ் சாகாதே என்று பலமுறை நான்
உன்னொடுதான் சொன்னவுரை கடந்து — மின்னொடுசேர்
பொன்னே இறந்தாய் புருடன் மொழியைக் கடந்த
தென்னே மின்னேநீ இயம்பு ”

‘கணவன் மொழியைக் கடத்தல் கற்புடைய மங்கையர்கள் செயல் அல்ல. நீயோ கற்புக்கரசி. என்னைவிட்டு நீங்க வேண்டாம் என்று நான் சொன்ன மொழியை நீ கடந்து

தென்ன' என்று கேட்பது போல் கேட்டு அம்மாணிக்கத் தம்மையாரின் கற்பு மாண்பினை விளக்கினர். நான்காவதாக **அண்ணுக்கண்ணம்மாள்** என்பாரை மணக்க, முன்னவர் மூவர் வழியைப் பின்பற்றி அவரும் விண்ணுலகு ஏகினர். இறுதியாக **அம்மாளம்மாள்** என்னும் மனைவியாருடன் வாழ்ந்தார். கணவன் குறிப்பறிந்து நடந்து அவருக்கு வேண்டிய உதவிகள் செய்து வாழ்க்கைத் துணையாக ஒருவராவது நீண்ட நாட்கள் வாழக்கொடுத்து வைக்காமல் போயினர். துன்பமே ஞானத்தின் துவக்கம் என்பதை நன்கறிந்த நம் வேத நாயகர் இல்வாழ்வில் இத்துணை துன்பங்கள் வந்தும் அஞ்சாமல் ஆண்டவன் அருள் தேடி அனைத்தையும் பொறுமையோடு தாங்கினர். தமிழ் நூல்களில் தம் கருத்து முழுமையும் செலுத்தியதால் எத்தகைய இன்னலும் அவரின் சித்தத்தைச் சிதைக்க வில்லை. பக்திப் பாடல்கள் எழுதுவதும், அரசாங்க அலுவல்களில் ஈடுபடுவதுமாக இருந்து தம் கவலையை மாற்றினர்.

பெருவாழ்வு வாழ வேண்டுமென்னும் பேராசைகொண்டு வந்தவழியெல்லாம் பணத்தை வாரிச் சுருட்டி உயர்ந்த செல்வ நிலையடைய வேண்டுமென்னும் எண்ணம் இவருள்ளத்தில் என்றைக்கும் உதித்ததில்லை. உள்ளதே போதும் என்ற உத்தம எண்ணங்கொண்ட இவர் ஆடம்பரமற்ற எளிய வாழ்விலே வாழ்ந்தார். மாயூரத்திலே தன் சொந்த வருவாயினின்று மீத்துவைத்த பணத்தால் ஓர் மாடி வீடு விலைக்கு வாங்கி அதில் வசித்துவந்தார். இன்றளவும் அவ்வீடு உள்ளது என்றாலும் இவருடைய வாரிசுகள் அதில் குடியிருக்கவில்லை. அலுவல் காரணமாக அங்கங்கு பல ஊர்கட்குச் சென்றுவிட்டபடியால் அவர் வசித்த வீடு உணவு விடுதியாக ஒன்றும், கலையறிவு விளக்கும் இடமாக ஒன்றும் மாறி பலருடைய பசிபோக்கு

கின்றதும், அறிவுதருவதுமாக அவர் இல்லங்கள் இன்றும் உள்ளன. நல்லோர் வாழ்ந்த இடங்கூட நன்மைக்கே பயன் படுமென்பதற்குச் சான்று போலும்.

அறிஞர் வேதநாயகர்தம் இல்லத்திற்கு வரும் விருந்தினருக்கு அளவேயில்லை. பத்தொன்பதாம் நூற்றுண்டின் மத்திய காலத்திலே அரசாங்க அலுவல், அதிலும் மாவட்ட நீதிமன்ற நீதிபதி என்ருல் அவர் மதிப்புக்கு அளவுமுண்டோ? எனவே ஏராளமான விருந்தினர் தாராளமாக வந்துபோயிருந்தனர். ஐவர் மனைவியர் ஏற்பட்ட நிலையால் அனேக உறவினர் வந்துபோதல் இயல்பாயிற்று. எனினும் எப்போதும் இல்லறம் நல்லறமாகவே விளங்கியது.

இவ்வாருக இல்லற வாழ்வை நடத்திக்கொண்டு, அலுவலிலே அணுவளவும் நீதி வழுவாமல் வேலை செய்தும் வந்தார். மாயூரம் நீதிமன்றம் மக்களால் பெரிதும் புகழப்பட்டு வந்தது. நீதிக்கும், நேர்மைக்கும் உறைவிடம் வேதநாயகர் என்ற செய்தி தமிழ் மாவட்டங்கள் அனைத்தும் பாவலாயிற்று. எனவே வழக்குகள் பல மாயூரம் மன்றத்திற்கு மாற்றிவிட வேண்டுமென்று வாதி, எதிரி இருவருமே சேர்ந்து எழுதியனுப்பியவற்றிற்குக் கணக்கேயில்லை. இந்நிலையை அன்றிருந்த ஆங்கிலேய மேலதிகாரிகள் கூர்ந்து கவனித்தே வந்தனர். நீதிபதிகளில் பலவேறு தரம் இருந்தது. நம் வேதநாயகரை முதல்தர நீதிபதியாக (First Grade District Munsif) உயர்த்தி உத்தரவு பிறப்பித்தனர்.

### மெய்க் கிருத்துவர்

பிறக்கும்போதே கத்தோலிக்கக் குடும்பத்தில் பிள்ளையாகப் பிறந்து, சிறுவயது முதலே கோவிலுக்குப் போதல், நற்போதனைகள் கேட்டல், இறை வணக்கம் செய்தல் போன்ற



மாயூரத்தில் வேதநாயகர் வாழ்ந்த வீடு



வேதநாயகர் வீட்டின் ஓர் பகுதி

கிருத்துவ நெறிகளில் வளர்ந்து வந்துள்ளார். ஆதலின் கத்தோலிக்கத் தூய நெறிகளைக் கடைப்பிடித்தொழுகி வந்தார். சைவ நெறியில் ஆழ்ந்த பற்றுக்கொண்ட நண்பர்களிடம் இவர் பழகி வந்தமையால் இவர் கிருத்துவ வழக்கங்களைக் கையாளவில்லை என்றோ, கிருத்துவ நெறியில் ஆழ்ந்து பற்றவில்லை என்றோ எவரும் கருதுவாராயின் வேதநாயகரைச் சரிவர அறியாதவர் என்றே கருதவேண்டும். ஏனெனில் நட்புக்கும் தாம் கைக்கொள்ளும் மதக் கோட்பாடு கட்கும் வேறுபாடுகள் உண்டு. தாம் செய்ய வேண்டிய மதக் கருமங்களில் ஒரு சிறிதும் எக்காலத்தும் தவறாத உண்மைக் குணவான் வேதநாயகர். தாம் பாடிய நீதிநூற் பாடல்களிலே இயேசு பெருமானைப் பலவிடங்களில் பொது முறையில் புகுத்தி உலகினருக்குக் காட்டியுள்ளார். இரண்டொரு சான்றுகள் ஈண்டு தருதல் நலம்.

இயேசு பெருமானைச் சொந்த மக்கள் பிடித்துச் சொல்லொணா வாதைகளுக்குள்ளாக்கிச் சிலுவையில் வாட்டிய போதும், கயவர்கள் சுற்றிலும் நின்று கண்டபடி பேசித் திட்டியபோதும் அவர் கூறிய அறமொழி யாதெனில் ‘ பிதாவே இவர்களை மன்னியும். செய்வது இன்னதென அறியாது செய்கின்றனர் ’ என்பதே. சிலுவை சுமந்து செல்லுங்கால், தன்னைப் பின் தொடர்ந்து அழுது வந்தவர்களைக் கண்டு தாமும் கலங்கினார். அவர்கட்கும் அறமொழி விண்டார். இக்கருத்துக்கள் இப்பாடலில் காணலாகும்.

“ வைவார்தமை வாழ்த்தியும், நெஞ்சில் வருத்த முற்று
நைவாருடன் நைந்தழுதும், தமை நண்ணித் துன்பஞ்
செய்வாருறுபிழை நினைந்துதம் சிந்தை நொந்தும்
மெய்மாமறையின் பயன் ஓதுவர் மேன்மையோரே ”
(நீதிநூல்)

என்பதே அப்பாடல்.

'மனதிலே குடிகொண்டுள்ள இருளை நீக்கிவிட்டு அருள் விளக்கை ஏற்றியும், எல்லா நலங்களையும் உண்டாக்கும் வல்லமையுள்ள மலைச் சொற்பொழிவு தந்தும், முழுமுதல் தெய்வத்தின் வடிவமான தன் இறைத் தன்மையைக் காட்டியும், பாவம் இன்னது, புண்ணியம் இன்னது என்றும் காட்டி, பேரின்ப நிலையும் காட்டித் தன்னையே தியாகம் செய்த வள்ளலை மறவாதே நெஞ்சே' என்பது மற்றோர் பாடல்.

"அகஇருள் அகலஞான விளக்கினை அருளினேற்றிச்
சகலமும் நல்குங் கேள்வித்தனத்தினை நல்கி, ஆதி
பகவன்தன் சொரூபங்காட்டிப் பவம் அறம் இரண்டுங்காட்டி,
சுகநிலை காட்டுந்தியாகத் தோன்றலை மறவாய் நெஞ்சே"

(நீதி நூல்)

நல்லவர் தீயவர் எவரையும் இப்பூமி தாங்கி நிற்கிறது. மழை பொழிகிறது. கதிரவன் காய்கிறது. காற்று வீசுகிறது. வானம் இடந்தருகின்றது. தீயவருக்கும் இவ்வியற்கை நலன் கிடைக்கின்றது. உண்மையாக ஆராய்ந்தால் ஒப்புச் சொல்ல முடியாத இறைவன் தீயவர்க்காக இரங்கி மனித அவதாரம் எடுத்தான் என்று இயேசு பெருமான் பிழைபட்ட மக்களை நல்வழிப்படுத்தவே பூவுலகில் பிறந்தார் என்ற கருத்தை அழகுபட எழுதி, ஆதலால் அவர்களை வெறுத்தல் கூடாது என வேறோர் பாட்டில் வேண்டுகிறார். இங்ஙனம் தாம் எழுதிய தலைசிறந்த நூலில் தங்குல தெய்வ வணக்கமும் சிறப்பும் காட்டியுள்ளார். சர்வசமய சமரசக் கீர்த்தனை என்று அவர் செய்த நூலில் கணக்கற்ற இடங்களில் கிருத்து பெருமான் புகழ் பாடியுள்ளார். மேலும் திருவருள்மாலை, திருவருள் அந்தாதி, தேவமாதா அந்தாதி, தேவதோத்திரமாலை போன்ற பலநூல்கள் எழுதித் தாம் வணங்கும் தெய்வத்திற்குத் தக்க தொண்டுகள் செய்துள்ளார். காலமெல்லாம் **நல்ல கிருத்துவ**

ராக வாழ்ந்து தம் மதக் கடமைகளை இனிதே செய்து வந்துள்ளார்.

**பஞ்சத்தில் உதவி**

இற்றைக்குச் சுமார் எண்பது ஆண்டுகளுக்கு முன்னே தாது - ஈஸ்வர ஆண்டுப் பஞ்சம் ஒன்று ஏற்பட்டது. பஞ்சம் என்றால் உணவுப் பொருட்களுக்குப் பஞ்சம் எனப்படும். உணவுப் பொருட்கள் இல்லாமைக்கு மழையின்மையே காரணம். வான் சிறப்பை எழுதிய வள்ளுவனார்,

" ஏரின் உழாஅர் உழவர், புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால் "

என்றார். ' நீர் இன்றி அமையாது உலகு ' என்றும் வள்ளுவப் பெருந்தகையார் வரைந்தார். நீர் இல்லையேல் எதுவும் இல்லாமல் உலகில் பஞ்சம் உண்டாவது இயல்பு.

ஏன் மழை இல்லாது வானம் வறண்டு போகின்றது என்ற கேள்வி எழுமானால், இறைவனின் உண்மையை அறிய இயலும். என்றைக்கும் காய்கின்ற கதிரவன் வான் வழி செல்ல, இருக்கின்ற பெருங் கடல்களில் தண்ணீர் எப்போதும் இருக்க, வெப்பமானது தண்ணீர்மேல் விடாது பட்டும் மழைத் துளிகள், பெரும் புயல்கள் மட்டும் வானிலே காணவில்லை யென்றால் இது விளங்கிக்கொள்ள முடியாத வியப்பாகும். இந்நிலை ஒருநாளல்ல இருநாளல்ல, சிலமாதங்களல்ல, பல ஆண்டுகள் நீடிக்குமானால், இவ்வியற்கை செயலற்றுப் போவதற்குத் தக்கதோர் காரணம் இருந்தேயாகவேண்டும். இயற்கை தானே இயங்கும் எனச் சொல்லுவதும் பொய்த்துப் போகுமானால் இயற்கையையும் இயங்க வைக்கும் ஒரு பொருள் உண்டு என்பதை ஒப்புக்கொண்டாக வேண்டும். அப்

பொருளே மெய்ப்பொருள். எல்லாவற்றிற்கும் தலையாய இறைப் பொருள். இறைவனுகிய பொருளை மக்கள் முழுவதுமாக மறந்து நினைத்தவாறெல்லாம் செயலாற்ற முயலும் போது எதிர்பாரா பெரும் நிகழ்ச்சிகள் நிகழ்கின்றன. எரிமலைகள் கக்குவதும், பூகம்பம் உண்டாதலும், பெரும் புயல்கள் ஏற்படுதலும், விடாமழை பெய்து வெள்ளப் பெருக்கேற்படுதலும் ஆகியன தோன்றுகின்றன. இயற்கையைச் சின்னு பின்னப்படுத்தி உலகினையே நடுங்க வைத்து விடுகின்றன. மனிதன் மனதில் இறைவனைப் பற்றிய எண்ணம் எழுகின்றது பக்தியில் திளைத்த அன்பர் இறைவன்பால் தம் விண்ணப்பம் ஏறெடுத்துப் பிழை பொறுக்க வேண்டுகின்றனர். அன்பின் உருவமான ஆண்டவனும் மனமிரங்கி இனியநிலை உண்டாகச் செய்கிறுன்.

இது போல, தமிழ் நாடெங்கும் உணவில்லா நிலைவந்து மக்களை உலுக்கிற்று. தானியங்கள் கிடைக்காமல் மக்கள் தவித்தனர். தூர இடங்களிலிருந்து தானியங்கள் வந்தாலும் சொல்ல முடியா விலையாயிற்று. ஏழைகள் வாங்க இயலவில்லை. பட்டினி பரவியது. "ஓர் தட்டிலே பொன்னும் ஓர் தட்டிலே நெல்லும் ஒக்க விற்கும் கார் தட்டிய பஞ்ச காலம்" என்று படிக்காசுப் புலவர் பாடிய பாட்டு மெய்யாயிற்று. மரத்தின் இலைகள், தழைகளையுங்கூட மக்கள் தின்றனர். கண்டதைத் தின்றதால் உடலுக்கு ஒத்துக் கொள்ளாமல் வயிற்றுப் போக்குக் கண்டு எங்கு பார்த்தாலும் மக்கள் மடிந்தனர். வீடுகளிலே பிணம், தெருக்களிலே பிணம், சாலைகளிலே பிணம். எடுத்து அடக்கம் செய்யவும் ஆளில்லாதநிலை. பயங்கரநிலை தாண்டவமாடியது.

மாயூரம் நீதிபதி வேதநாயகர் இந்நிலை கண்டார். மனம் நொந்தார். அவருள்ளம் உருகியது. செய்வதென்னவெனச்

சிந்தித்தார். மக்களுக்கு உதவி செய்ய வேண்டிய நேரம் வந்ததை யறிந்தார். தானே உதவி செய்ய முடிவு செய்து கஞ்சித்தொட்டி வைத்து மக்கட்குக் கஞ்சி வார்த்தார். ஆயிரக் கணக்கான மக்கள் பல இடங்களிலிருந்து இவ்வறச் செயலைக் கேள்வியுற்று மாயூரம் வந்து குவிந்தனர். அனைவருக்கும் இலவசமாகக் கஞ்சி வழங்கினர். ஆயிரமாயிரம் மக்கள் கஞ்சி வாங்கி வயிறாரப் பருகினர். ஆயிரக்கணக்கான மக்களுக்குக் கஞ்சி வார்த்தல் என்பது எளிதல்ல. கணக்கற்ற பொருட் செலவு. கடவுள்மேல் திடமான உறுதிகொண்ட வேதநாயகர் இச்செலவைக் கண்டு அச்சம் கொள்ளவில்லை. அகமகிழ்ந்து இப்பணியை அன்பாகச் செய்து வந்தார். இறைவனிடம் மன்றாட்டும் ஏறெடுத்தார். பஞ்ச நிலையைப் பாடி அதனைப் போக்க இறைவனைத் தஞ்சமென ஏற்றித் துதித்தார்.

*பஞ்சம் தீர் ஐயா — உனையன்றித்*
*தஞ்சம் ஆர் ஐயா*

*வஞ்சக மேகம் உலோபர்கள் போலே*
*மண்ணில் மழை பொழியாமையினாலே*
*சஞ்சலமாகித் தளர்ந்தோ மென்மேலே*
*சாமிகதி உந்தன் தாமரைக்காலே (பஞ்சம்)*

கஞ்சித்தொட்டி வைத்து ஏழைகளுக்கு கஞ்சி வார்த்த செயல் நாடனைத்தும் தெரிந்தது. அறிஞர் அனைவரும் பாராட்டி வாழ்த்தினர். திருவாரூருக்குப் பக்கத்திலுள்ள **நரிமணம்** என்னும் சிற்றூரில் வாழ்ந்து, நந்தனர் சரித்திரக் கீர்த்தனம் பாடிப் பெருமைபெற்ற **கோபால கிருஷ்ண பாரதி யார்,** வேதநாயகருக்குப் புதுக்கீர்த்தனைகள் பாடும் வழிகாட்டி யவர். அவர் பஞ்ச காலத்தில் வேதநாயகர் செய்த செயலைக் கண்டும், இறைவனைப் பாடிய இனிய கீர்த்தனைகள் கண்டும்,

அளவிலா மகிழ்ச்சி கொண்டு வேதநாயகர் மீதே '**நீயே புருஷ மேரு**' என்ற முதலடி கொண்டு ஓர் பாடல் பாடினார். இறைவனைத் தவிர வேறு மனிதர் எவரையும் பாடாத பாரதியார், இவர் மீது பாடிய பாடல் கண்டு அனைவரும் ஆனந்தக் கடலுள் மூழ்கினர்.

வேதநாயகர் வெண்பாக்கள் விரைந்துபாடும் ஆற்றலுள்ளவர். கீர்த்தனைகளால் இறைவனைப் பாடிக் கெஞ்சியது போலவே வெண்பாக்களும் பாடி வேண்டுதல் விடுத்தார்.

> " காரே யுன்னீரையெல்லாம் கள்வன் கவர்ந்தானோ
> நீரே யுதவாய் நெறியாமோ — நேரேதான்
> வாரியுண்டு வாரிமொண்டு வாரியுண்டு வானிருண்டு
> பேரிகொண்டு நீதிரண்டு பெய் "

இவர் அன்பர்கள் பலரையும் ஒன்றாய்த் திரட்டி இறைவனிடத்தில் மழையில்லாக் குறை போக்க வேண்டுமாறு அவரவர் முறைப்படி வேண்டுதல்கள் செய்யுமாறு தூண்டினார். தாமும் இறைவனை இடைவிடாது பாடினார். இக்காலத்திலே தான் 'சர்வசமய சமரசக் கீர்த்தனை' யில் உள்ள பாடல்களில் பெரும் பகுதி பாடப் பெற்றது. எல்லாமதத்தினரும் இறைவனை ஏற்றெடுக்கத் தக்க விதத்தில் கீர்த்தனைகள் உருவாயின. பல்வேறு மதத்தைச் சார்ந்த அன்பர்களும் இவருடைய பக்திப்பாடல்களைப் பாடிப் பரவசமடைந்து இறைவனைத் துதித்தனர்.

**சர்வ சமய சமரசக் கீர்த்தனை**

நான்கு மொழிகளாலாகிய வோர் தொடர். எல்லா மதத்தாருக்கும் பொதுவான பாடல்கள் எனப் பொருள் படும். கீர்த்தனை பாடுகின்ற கணக்கற்ற கவிஞர்கள் தமிழ் நாட்டில்

வாழ்ந்துள்ளனர். தத்தம் தெய்வத்தின் மீது பாடல்கள் பாடுவதே அவர்களது வழக்கம். எம் மதத்தாரும் சம்மதப்பட்டுப் பாடுமாறு, இறைவனைப் பொதுவானவராகக் காட்டிக் கீர்த்தனை வடிவிலே பாடியதில்லை. இதில் இவர் தனியிடம் பெற்றார். இவரே இத்தகைய நூலை முதன் முதல் தமிழ் நாட்டில் இயற்றியவர்.

அன்றியும் சர்வ சமய சமரசக் கீர்த்தனைகளில் பக்திப் பெருக்கு எங்கும் பரக்கக் காணலாம். மக்கள் செய்யும் பாவச் செயல்களனைத்தும் வெளியரங்கமாகக் காட்டிப் பாடி அவற்றை மன்னிக்குமாறு வேண்டுதல் செய்யும் வகை தனியழகு பெற்றது. இறைவனிடம் உரிமை கொண்டவர் மக்கள், என்ற உணர்ச்சியினைப் பல விடங்களில் காணலாம்.

இனி எதுகை மோனை, கையாண்டிருப்பதுவோ எல்லோரையும் கவரும் வகையிலுள்ளது.

நீமலைக்காதே—நெஞ்சே—நீ மலைக்காதே
ஆட்டையும் மந்தையும் மாட்டையும் கட்டிய
வீட்டையுமுன் கெட்ட கேட்டையுமே எண்ணி (நீ.)

மனதிற்கு அறிவுரை கூறுகின்ற இப் பாட்டிலே எதுகையைக் கையாளும் அழகு மிக மிக இனிமையுள்ளது,

அற்பமான போக பாக்கியம்
அழிந்து போமிது வேத வாக்கியம்
தற்பரா நினைக் காணும் பாக்கியம்
தந்திடில் அது சர்வ சிலாக்கியம். (கருணைகர)

எதுகை மட்டுமல்ல, மோனையும் எத்துணை பொருத்தம். இவ்வாறாக அவர் பாடல்கள் எதை யெடுத்தாலும் எதுகை மோனையை எளிய வகையில் எவருங் கண்டு இன்புறுமாறு எழுதியுள்ளார்.

இனி கருநாடக சங்கீத வழிகளில் எத்துணை பண்கள் உண்டோ அத்துணைக்கும் பாடல்கள் காணலாம். இசைவாணர்கள் வேதநாயகர் கீர்த்தனையென்றால் தனிப் பற்றுக்கொண்டு பாடுவதை இசையுலகில் அறியலாம். இன்றளவும் சிற்றூர்களிலிருந்து பேரூர் வரை வேதநாயகர் பாடல்கள் பாடப் படுகின்றன வென்றால் அவற்றின் பெருமையைக் கூற வேண்டுமோ? நீதிபதி பீடத்திலமர்ந்த வேதநாயகர் தமிழிசை வள்ளலாயும் வாழ்ந்தாரெனில் அவருள்ளம் தமிழிசையின் பாலும் எத்துணை பற்றுள்ளது என அறிய முடியும்.

## திருவா வடுதுறை ஆதீனத் தொடர்பு

சங்ககால நூல்களிலே புறநானூறு, வீரச் செயல்கள் பல காட்டும் ஓர் விளக்க நூல். புலவர்களுக்கும், புரவலர்களுக்கும் இருந்த நெருங்கிய தொடர்புகளை ஏராளமாகக் காணலாம். சோழ அரசர்களுக்குள் **கோப்பெருஞ் சோழன்** ஓர் அறிஞர். உறையூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டவன். தமிழில் நல்ல புலமை உடையவன். சான்றோர் எங்கிருப்பினும் அவர்களைத் தன்னுள்ளத்தில் ஏற்றுக்கொள்பவன், சோழ நாட்டை இம் மன்னன் ஆண்ட காலத்தில் பாண்டியநாட்டில் **பிசிராந்தையார்** என்ற பெரும் புலவர் ஒருவர், பிசிர் என்னும் ஊரில் வாழ்ந்தார். இப் புலவர் உறையூர்ச் சோழனின் வள்ளற்றன்மையையும் தமிழ்ப் புலமையையும் கேள்வியுற்றார். ஒருவரையொருவர் பாராமலே இவர்களுள் நட்பு வளர்ந்தது. அந்த நட்பு, சோழன் உயிர் நீங்கினனென அறிந்து தானும் உயிர் விடும் அளவில் பெருகியது. ஒருவரை யொருவர் கண்டு கொள்ளாமல் இருந்தும் இருவருக்கும் ஊடே கல்வியறிவு அப் பெருந்தகையாளர் இருவரையும் இணைத்தது.

இவ் விருவர் போலவே நம் நீதிபதி வேத நாயகர் வாழ்விலும் ஒன்று நிகழ்ந்தது. தமிழ் நாட்டில் பல விடங்களில்

சைவ நிறுவனங்கள் உள்ளன. அவற்றை மடங்கள் என்பர். இவைகளில் சைவப் பணியும் தமிழ்ப் பணியும் சில காலங் களில் ஒருங்கே நிகழ்ந்துள்ளன. இந்த நிறுவனங்களில் மிக வும் பெரியது திருவாவடுதுறை. ஆழ்ந்த சைவப்பற்றும், தூய துறவு வாழ்வும் மேற் கொண்ட அன்பர்கள் இந்த நிறு வனங்களுக்குத் தலைவர்களாயிருந்தனர். அவர்களில் பலருக் குத் தமிழ்ப் பற்றும், தமிழறிவும் மிகுதியாயிருந்தன. இக் காரணத்தாலேயே இச் சைவ நிலையங்கள், சைவத்தை வளர்த்த துடன் தமிழ் மொழியையும் வளர்த்தன. இன்று வரை இத் திருப்பணி பல விடங்களில் நடைபெறுகின்றன.

மாயவரத்தில் நம் வேதநாயகர் நீதிபாராய் இருந்து பணி புரியுங்கால், அதன் அண்மையில் உள்ள திருவாவடு துறையில் சுப்பிரமணிய தேசிகர் என்பார் அந் நிறுவனத்திற்குத் தலைவரா யிருந்தார். தம் ஊருக்கு அண்மையில் உள்ள மாயவரத்தில் நேர்மையான நீதியாளராக அமர்ந்து பணியாற்றுபவரும், தமிழில் இசை வள்ளலாகவும், அற நிலை காட்டி மக்களை அன்பாக வாழச் செய்பவராகவும், ஏழைகள் இன்னலுற்ற காலத்தில் கைகொடுத்துக் காப்பாற்றி வருபவரும் ஆன வேதநாயகரைப் பற்றி வெகுவாகக் கேள்வியுற்றிருந்தார். அவரைப் பார்க்க அவாக் கொண்டார். இது போலவே நம் நீதிபரும் திருவாவடுதுறைத் தேசிகருக்கு இருந்த தமிழ்ப் பற்றையும், அவர் செய்து வரும் தமிழ்த் தொண்டையும் கேள்வியுற்றிருந்தார். தாமும் தேசிகரைப் பார்க்க ஆவல் கொண்டிருந்தார். மாயவரத்தில் தங்கியிருந்த மகா வித்துவான் மீனாட்சி சுந்தரனார் அடிக்கடி திருவாவடுதுறை சென்று வந்து கொண்டிருந்த படியால் தேசிகர் தமது ஆவலை வேத நாயகரி டம் தெரிவித்து அவரை அழைத்து வருமாறு வேண்டிக் கொண்டார். இவ் விருப்பத்தை நீதிபதி வேதநாயகரிடம்

சொன்னபோது கோப்பெருஞ் சோழனைக் காணப் பிசிராந்தை யார் உள்ளம் உவகை கொண்டதுபோல வேதநாயகர் உள்ளத்தும் மகிழ்வு நிறைந்தது. அந் நேரத்தில் அரசாங்க அலுவல்கள் அளவுக்கு மிஞ்சித் தம்மிடம் குவிந்து கிடந்தமையால், தாம் வர இயலாத நிலையை மகா வித்துவானவர்களிடம் தெரிவித்தார். ஆனால் எப்போதும் நகைச் சுவையில் ஈடுபட்டு அதைப் பாட்டாக எழுதி இன்பமடையும் வேதநாயகர் ஓர் பாடல் எழுதி, தேசிகருக்கு அனுப்பி வைத்தார்.

'சுப்பிரமணிய தேசிகராகிய தாங்களோ அறிவின் சிகரம். பண்பாடுகள் நிறைந்த புலவர் பெருமான் மீனாட்சி சுந்தரர் மூலம், நான் வராமைக்கு உரிய பல காரணங்களை அறிந்து கொள்ளலாம். ஆனால் நீண்ட நாட்களாகத் தாங்கள் என் உள்ளத்தில் குடியிருந்து வருகிறீர். அவ்வாறு தாங்கள் என் உள்ளத்தில் வாசஞ் செய்யும்போது, இன்று எம்மை அழைக்க வந்த மகா வித்துவானோ தாங்கள் திருவாவடுதுறையிலிருப்பதாக என்னிடம் ஓர் பொய் சொல்லியுள்ளார். இப் பொய் சொல்ல எவ்வாறு படித்தாரோ' என்ற கருத்தமைத்து எழுதினார்.

"விதியிருந்த பதியெனுஞ் சுப்பிரமணிய தேசிக
மெய்ஞ்ஞானக் குன்றே,
துதியிருந்த நின்புலவன் சொல்வழியே பல் வழியுந்
தோன்று நீ யென்
மதியிருந்தாய் பிரிந்திடவு மனம் பொருந்தாயென
விருந்தேன், வான்கோ முத்திப்
பதியிருந்தாயென வந்தமா புலவன் பொய் சொலவும்
படித்தான் மாதோ"

(கோமுத்திப்பதி—திருவாவடுதுறை—ஊர்)

திருவாவடுதுறைத் தேசிகர் கவியாக வந்த கடிதத்தைப் படித்துப் பார்த்தார். உளம் பூரித்தார். மகா வித்துவானைப் பொய் சொல்பவர்போலக் காட்டித் தாம் வேதநாயகருள்ளத்தில் இடைவிடாது உறைந்துவரும் நிலையுங் காட்டியிருத்தலையறிந்தார். இப்பாடலில் சுப்பிரமணிய தேசிகர் தம் நினைவில் எப்போதும் இருப்பதைக் காட்டியதோடு மகா வித்துவான் மீனாட்சி சுந்தரனாரின் விழுமிய அறிவையும் பாராட்டி அவரைப்பற்றிய தம் புகழ்ச்சியையும் மறைவாகக் காட்டியிருந்தார்.

இனித் தாமே நேரிற் சென்று வேதநாயகரைக் காண்பது எனத் தேசிகர் முடிவு செய்தார். ஆதீனங்கள் அனைத்திலும் மிகப் பெரியதான திருவாவடுதுறைக்குப் புலவர் பெருமக்கள் வந்து தேசிகரைக் கண்டுபோவது வழக்கம். ஏனெனில் அத்தலைவருக்கு அவ்வளவு சிறப்பு உண்டு. அவ்வாறிருந்தும் நீதிபரைத் தாமே போய்ப் பார்ப்பதிலே குறைவொன்றுமில்லை; நிறைவே ஏற்படுமென நினைத்த தேசிகர் பண்புகள் படைத்த உள்ளத்தவரல்லவா? தாமே மாயவரம் வருவதாகவும், துறவியாகிய தாம் இல்லற வாழ்விலே இருக்கும் வேதநாயகர் மனைக்கு வரக்கூடாதென்றும், ஆங்கு மாயவரத்திலுள்ள மடத்தில், தாம் தங்குமிடத்திற்கு அன்புகொண்டு வந்து தம் ஆவலை நிறைவேற்ற வேண்டுமென்றும் வேண்டுகோள் விடுத்தார். இச்செய்தியறிந்த வேதநாயகர் அளவற்ற மகிழ்ச்சி அடைந்தாரென்றாலும், தம்மைப் பார்க்கத் தேசிகர் வரும்படியாயிற்றேயெனவும் வருந்தினார். தேசிகரைப்பற்றிய தம் உள்ள உணர்ச்சியை அவருக்கு அறிவுறுத்த மீண்டுமொரு கவியெழுதியனுப்பினார். “தாங்கள் மாயவரம் வருவதைக் கண்டு மகிழ்ச்சியடைகிறேன். ஆனால் என் இல்லத்திற்குத் துறவியாகிய தாங்கள் வர இயலாதென எழுதியுள்ளீர்கள். என் இல்லத்தில் திரும்பிய இடமெல்லாம் தாங்களே வீற்றிருக்கும் நிலையை

நான் காண்கிறேன். அவ்வாறிருக்கத் தாங்கள் என் இல்லம் வரமாட்டேனெனக் கூறுவதும் ஓர் பொய்யல்லவா" என்ற கருத்துப்பட வரைந்தனுப்பினார். எண்ணத்தில் எந்நேரமும் தேசிகருடைய நினைவு. ஆதலின் பார்த்த இடமெல்லாம் தேசிகரின் உருவம் தெரிகின்றது. நீதிபரின் ஞானக் கண் காணுகின்ற காட்சி அது. இக்கருத்தைத் தக்க விதத்தில் எடுத்துக் காட்டுகின்றதில், இனிமையும் அழகும் இலங்குகின்றது.

துலா மாதத்தில் சூரிய கிரகணம் ஏற்படும் நாளில் காவிரி நதியில் நீராடுவதைப் புண்ணிய செயலாகக் கொள்வர் இந்து சமய அன்பர்கள். எனவே திருவாவடுதுறைத் தலைவர் சுப்பிரமணிய தேசிகர் அதையொட்டி மாயூரத்திற்குவந்து சேர்ந்தார். காவிரியில் நீராடித் தம் கருமமெல்லாம் முறைப் படி முடித்தார். பின்னர் வேதநாயகரை மடத்திற்கு அழைத்து வருமாறு மகா வித்துவான் மீனாட்சிசுந்தரனாரை அனுப்பி வைத்தார். அந்த நன்னாளை எதிர்பார்த்திருந்த நீதிபதி வேதநாயகர் உளமகிழ்ந்து புளகாங்கிதம் எய்தி, சைவ மடத்திற்கு விரைந்து சென்றார். இருவரையும் எதிர்பார்த்திருந்த தேசிகர், அவர்களைக் கண்டு இரு கை கூப்பி இன்முகங் காட்டி வரவேற்றார். ஆன்றவிந்த சான்றோர்களான மூன்று தமிழ் மணிகள், ஒன்று குழுமியபோது அங்கு நடந்த நிகழ்ச்சிகளை எவருஞ் சொல்ல வியலாது. மூவரும் அன்பெனும் சங்கிலியால் இணைக்கப்பட்டு, மெய்மறந்து, ஒருவரையொருவர் கண்களிமைக்காமல் கண்டு மகிழ்ந்தனர். பின்னர் தேசிகரும், நீதிபரும் செய்யுட்களிலேயே உரையாடத் தொடக்கினர். அவர்கள் சொல்லிய செய்யுட்கள் ஒன்றிற்கொன்று உயர்வு தாழ்வு காட்டமுடியாத நிலையில் பாலுந் தேனும் போல, தேனும் பாலும் போல இன்சுவையளித்தது. இவ் இன்சுவை

யைப் பருகிக்கொண்டிருந்த மகா வித்துவானே ஓர் பாடல் பாடி இருவரையும் ஒப்பிட்டார்.

திருவாவடுதுறைத் தேசிகர் புகழ் முன்னால் ஏனையோர் புகழ் நிற்க இயலாது. பெருமைமிக்க குளத்தூர் வேதநாயகர் மேகம் அனையான். அம்மேகம் பெருமழை சொரியும். அப் பெருமழை போன்ற பாக்களிடையே பிறர் பாட்டுக்கள் நிற்க முடியாது என இருவரையும் ஒன்றுபோலப் புகழ்ந்தார். நினைத்த நேரத்தில் கணக்கற்ற கவிகள் பாடிக் குவிக்கும் ஆற்றல் வாய்ந்த மகா வித்துவான் தேசிகரையும், நீதிபதியை யும் ஒருசேரப் புகழ்ந்தாரெனில் தம்முள்ளத்தில் இவ்விருவ ருக்கும் தனியிடம் கொடுத்திருந்தாரென்பதில் ஐயமுண்டோ?

**மீண்டும் சந்திப்பு**

தமது இருப்பிடமான திருவாவடுதுறைக்குத் திரும்பிச் சென்ற தேசிகர் மீண்டும் வேதநாயகரைக் காண விரும்பினார். முதல் சந்திப்பில் தமிழறிஞர் மூவரிடை நிகழ்ந்த உரையாடல் தனித் தமிழ்ச் சுவை உடையது. தமிழ்ச் சுவையைப் பாடி யுள்ள புலவர்கள் முற்றிய கரும்பின் சாறு, செழு மலரின் வழிந்தோடும் தேன், நல்லாவின் காய்ச்சிய பால், முக்கனி களான வாழை, பலா, மா இவற்றினிலும் சுவை மிக்கது எனப் பாடிச் சிறப்பித்துள்ளார். இச்சுவையை யுணர்ந்த தேசிகர் மீண்டும் அதை யெண்ணியதில் வியப்பில்லை யன்றோ? வேத நாயகருக்கு இச் செய்தி யெட்டியது. தம்முடைய ஓய்வு நாட்களில் வருவதாகப் பதில் அனுப்பினார். அவ்வாறே திரு வாவடுதுறை ஆதின மடத்திற்குச் சென்றார். மடம் வந்தி ருந்த நீதிபருக்கு மரியாதைகள் பல செய்யப் பட்டன. மீண் டும் இருவருமாகப் பல நூல்கள் பற்றிப் பேசி ஒருவருக் கொருவர் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர். சைவத்தை வளர்க்க வென்று அமர்ந்த சுப்பிரமணிய தேசிகர் தமிழுக்

கும் பல தொண்டுகள் புரிதல் கண்டும், தேசிகர் பால் தாம் கண்ட திறமை யறிந்தும், வேதநாயகர் அவர் பால் தம்முள் ளத்தைப் பறி கொடுத்தார். உண்மையான அன்புக்கு முண்டோ அடைக்குந் தாழ்?

தேசிகர் பால் விடை பெற்றுத் திரும்ப வேண்டிய நாள் வந்தது. திருவாவடுதுறைக்கும் மயிலாடு துறைக்கும் பதி னைந்து கல் தொலைவு. ஆதீன வண்டிகள் அழகு வாய்ந்தவை. அக்காலையில் இன்றுள்ள பல ஊர்திகள் கிடையா. ஆதலின் வண்டியில் அமர்ந்து வேதநாயகர் தம்மூரான மாயவரம் திரும் பினார். போகின்ற வழியெல்லாம் தாம் தேசிகருடன் உற வாடிய வகையும், உரையாடிய பொருளும் பற்றி எண்ணிக் கொண்டே சென்றார். உள்ளத்தைப் பறி கொடுத்த நீதிபதி மாயூரம் வந்து சேர்ந்தும் தம் எண்ணத்தினின்றும் விடுதலை பெற்றாரில்லை. எப்போதும் பிறருக்குக் கவி யெழுதி நகைச் சுவையும் கவித் திறனும் காட்டி வரும் நீதிபர், ஓர் பாடல் வரைந்து வண்டிக்காரன் வசமே தேசிகருக்கு அனுப்பி வைத் தார்.

'தெய்வ மகளிரும் வந்து வணங்கத் தக்க சிறப்புடைய மேலான தெய்வம் போன்ற தேசிகரே, நேரில் தங்களைக் கண்டு நான் நேற்றிரவு சுகமே வந்து சேர்ந்தேன். என்னூ ருக்கு நான் வந்து சேர்ந்தும் என்னுள்ளம் மட்டும் இன்னும் இங்கு வந்தபாடில்லை. ஆதலின் அதை உடனே தயை கூர்ந்து அனுப்புவீராக' என்ற கருத்துப் பட்ட ஓர் பாடலே அது வாகும்.

"சூர்வந்து வணங்கும் பேன்மைச் சுப்பிரமணிய தேவே!
நேர் வந்து நின்னைக் கண்டு நேற்றிராத்திரியே மீண்டேன்,
ஊர் வந்து சேர்ந்தேன், என்றன் உளம் வந்து சேரக் காணேன்,
ஆர் வந்து சொலினும் கேளேன் அதனை இங்கனுப்புவாயே"

(சூர்—தெய்வ மகளிர்)

பாட்டைப் படித்த சுப்பிரமணிய தேசிகர் பட்ட ஆனந்த நிலைக்கு அளவுண்டோ? உள்ளத்தையே தன்னிடம் விடுத்துள்ளதாகவும், அதை உடனே அனுப்புமாறும் எழுதியுள்ள நீதிபரின் ஆழ்ந்த நட்பை எண்ணி எண்ணி இறுமாப்படைந்தார். 'நெஞ்சத்து அக நக நட்பது நட்பு' என்ற வள்ளுவர் வாக்குக்குச் சான்று நீதிபரே என முடிவு செய்தார்.

**மகா வித்துவானுக்கு நன்றி**

தலபுராணங்கள், பதிகங்கள், பிள்ளைத் தமிழ், கலம்பகம், கோவை, அந்தாதி, தனிப் பாடல்கள் இவை போன்ற சுமார் எண்பது நூல்கள் வரை செய்து, தமிழன்னைக்கும் இறைவனுக்கும் தொண்டு செய்த மகா வித்துவான் மீனாட்சி சுந்தரனார் நோயுற்றார். பிணி, மூப்பு, சாக்காடு எய்தாத பேரும் உண்டோ? தோன்றுகின்ற பொருளனைத்தும் அழிவது உண்மை. நாம் வாழும் இவ்வுலகுங்கூட ஓர் நாள் அழிந்தொழியும் என்றால், தசை, நரம்பு, எலும்புகளாலாகி, இரத்தமென்னும் நீரோடி, காற்றடித்து இயங்குகின்ற இம்மனித உடல் மடிவது முற்றிலும் உண்மையன்றோ? எனவே இறைவன் பால் எந்நேரமும் தம் கருத்தைச் செலுத்தி எண்ணில்லாப் பாடல் மாலை சாத்தி வழி பட்ட பக்தன் மகா வித்துவானையும் பிணி வாட்டியது. கால்கள் வீங்கின, மனைவியார், புதல்வர்கள், நண்பினர், அனைவரும் அருகிலிருந்து மருத்துவம் பல செய்தும் பயனில்லை, 1—2—1876 ஆம் ஆண்டில் தம் 61 ஆம் வயதில் இறைவனடி இனிதே அடைந்தார். தம் உள்ளத்தே உறைகின்ற வள்ளலாம் மகா வித்துவான் மறைந்ததால் நீதிபதி அடைந்த வேதனைக்கு அளவில்லை. அவரது குடும்பத்தாருக்குத் தம்மாலியன்ற உதவி செய்தார். தம் உயிரனைய மற்ற நண்பர் தேசிகருக்கு எழுதி, உதவி செய்யுமாறும் செய்தார். மகா வித்துவான் மீனாட்சி சுந்தரனாரின் புதல்வன்

சுந்தரம் பிள்ளையைத் தம்மிடம் வருமாறு செய்து அவருக்கு ஓர் அலுவல் கொடுத்து ஆதரித்தார். வெவ்வேறு மதங்களைச் சேர்ந்தும் வழிபாடுகள் வேறு பட்டிருந்தும், தமிழன்னைக்குத் தொண்டு செய்யும் திருப் பணியில் ஈடுபட்ட இவர்களின் நீக்கமற்ற தொடர்பு, இக்கால இளைஞர்களுக்கு ஓர் எடுத்துக் காட்டு. 'நன்றி மறப்பது நன்றன்று' என்பதைப் படிப்பது மட்டுமல்ல, செயலிலும் காட்டினர் இச் சீர்மையாளர். ஒரு நாளல்ல, பல நாளல்ல, உயிருள்ள மட்டும் தம் நட்பை மறவாது உதவிய நீதிபதி வேத நாயகத்தின் நேர்மைக் குணம் சீருடையதன்றோ! தனக்கென்று வாழாது பிறர்க்கென வாழும் பெருந் தகையோராலேயே எந்த நாடும் நன்னுடாகத் திகழும். மகா வித்துவான் மறைந்த பின்னும் அக்குடும்பத்தினரை ஆதரித்த செயல் வேதநாயகரின் உள்ளான நட்பை விளக்குகின்றது. வேத நாயகர் அறிவின் சிகரமானபடியால் அவரிடம் இத்தகு நற்செயல் காணப்பட்டது. மற்ருேர் கற்றுக்கொள்ளத்தக்கதான இம்மாண்புமிக்க செயல் அவரை **அறத்தின் தந்தை** யாக அனைவரும் எண்ணச் செய்தது.

## வழக்குரைஞர்களுக்குத் தொண்டு

சென்ற நூற்றுண்டிலே ஆங்கிலம் இன்று வளர்ச்சியடைந்துள்ள அளவுக்கு வளரவில்லை. ஆங்கிலம் படித்தவர்கள் மிகவும் அருகியிருந்தனர். நீதி வழங்கும் கழகங்களிலே சிறிதளவு ஆங்கிலம் தெரிந்தவர்களுங்கூட வழக்குரைஞர்களாக வாதாடலாம். ஆதலின் உயர்நீதி மன்றத்தின் முடிவுகள் அவ்வப்போது வெளியாகின்ற சட்டங்கள் ஆகியவற்றைப் படித்துக்கொள்ள அவர்கள் விரும்பினர். ஆனல் அனைத்தும் ஆங்கிலத்தில் இருந்தமையால் ஆங்கிலத்தில் நல்ல அறிஞர்களாகத் திகழ்ந்தோரின் உதவியைத் தேடவேண்டியிருந்தது. நமது நீதிபர் வேதநாயகரோ மொழிபெயர்ப்புச் செய்வதில்

வல்லுநர். நீண்ட நாட்களாக வாய்ப்புக்கிட்டியபோதெல்லாம் உயர் நீதிமன்றத்தின் (சதர் கோர்ட்) சட்டங்கள், தீர்ப்புக்கள் அனைத்தையும் சிறிது சிறிதாக மொழிபெயர்த்து வைத்திருந் தார். 1805 ஆம் ஆண்டு முதல் 1861 ஆம் ஆண்டுமுடிய உள்ள சட்டங்களையெல்லாம் மொழி பெயர்த்து ஒன்றாகச் சேர்த்துத் தமிழில் அச்சாக்கி வெளியிட்டார். பத்தொன்ப தாம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் வாழ்ந்த வழக்குரைஞர் அனைவரும், அவற்றை வாங்கிப் படித்துப் பயனடைந்தனர். நீதிபரை வாயாரப் புகழ்ந்து அவர் செயலைத் தம் உள்ளத்தில் உவகையுடன் போற்றி, நீடுவாழுமாறு வாழ்த்தினர்.

## பெண் கல்வி

சங்க காலத்தில் ஆண்களைப் போலவே பெண்களும் கற்றுத் தேர்ந்து புலமைபெற்று விளங்கினார்கள் என்பதைச் சங்க நூல்கள் சாற்றுகின்றன. அவ்வை, உப்பை, உறுவை, நச்செள்ளையார், நப்பசலையார், காக்கைபாடினியார், பூதப் பாண்டியன் தேவியார் முதலிய நல்லிசை மெல்லியலார் கவிகள் பாடித் தமிழகத்தைப் பெருமைப்படுத்தினர். ஒழுக்க நிலைக்கு உயர்த்தினர். பல நூற்றாண்டுகட்கு முன்னர் பெண் கல்வி இவ்வாறு உயர்ந்து விளங்கியது. ஆனால் ஆங்கிலேயர் நம் நாட்டை ஆளத் தொடங்கிய அந்நாட்களில் தமிழ் நாட்டில் பெண் கல்வியைப் பற்றித் தாழ்வான, தப்பிதமான எண்ணங் கள் பொதுமக்களிடம் இருந்தன. ஆண்களுக்கே பள்ளிகள் அதிகம் இல்லாத பத்தொன்பதாம் நூற்றாண்டில், பெண் களுக்கு எனத் தனிப்பள்ளிகள் இல்லை என்றே கூறலாம். தமிழ் நாட்டில் பெண்கள் இவ்வாறு வீழ்ச்சியுற்றும், தாழ்ச்சி யுற்றும் கிடந்ததைக் கண்ட வேதநாயகர் மிகவும் மனம் நொந்து, எவ்வாற்றானும் பெண் கல்வியைப் பரப்பவேண்டு மென்னும் பேரவாக்கொண்டார்.

பெண்கள் படித்தல் தீது; படித்த பெண்கள் கணவர்கட்கு அடங்கி நடக்கமாட்டார்; கல்வியே கற்பு நிலையை இழக்கக் காரணம்; காதற் கடிதம் எழுதுவர்; கல்வி பெற்ற பெண்கள் கணவருடன் வாதாடுவர்; அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு; இத்தகைய எண்ண அலைகள் கற்றறிந்தோரிடமும் இருக்க வேதநாயகர் கண்டார். அதைத் தகர்க்க முடிவு செய்தார்.

பெண்ணுலகை நீதிகள் புகட்டுவதன் மூலம் விழிப்படையச் செய்ய விரும்பிய வேதநாயகர் தமக்கு உரிய கவிகள் மூலமாக மட்டுமன்றி உரை நடைவாயிலாகவும் எழுத முனைந்தார். ஆண்கள் தங்கள் வாழ்க்கைத் துணையாக ஏற்கும் பெண்கள் எத்தகையோராக இருத்தல் வேண்டுமென அவர்களுக்கு அறிவுறுத்தல் போல பெண் பார்த்து வருமாறு தூதனுப்பும் பாடல்கள் பாடுகிறார். **'நல்ல பெண்ணைப் பார் நீ தூர்தா'** என்ற தலைப்பிட்டு ஓர் கீர்த்தனையும் தூதன் சென்று பெண்பார்த்துத் திரும்பி வந்து தலைவனிடம் தான் பார்த்த பெண்ணுக்குள்ள இலக்கணங்களைச் சொல்லுவது போல **'பஞ்சவர்ணக் கிளிபோலொரு பெண்ணை** நான் பார்த்து வந்தேன் சாமி' என்ற தலைப்பில் ஓர் கீர்த்தனையும் எழுதியுள்ளார். பெண்களுக்கு இருக்க வேண்டிய பத்துவிதப் பண்புகள் அழகுபடச் சித்தரிக்கப்பட்டுள்ளது. தமிழ் நாடு உள்ளவரை படிப்போரைப் பரவசப்படுத்தும் பான்மையில் அப்பாக்கள் அமைந்துள்ளன.

'அழகுங்குணமுமுள்ளவள் நல்ல ஜோடு
அழகில்லையாயினும் குணத்தையே தேடு
பழகுநற் குணமில்லா அழகியின் வீடு
பாம்பு, புலி, கரடி வாழ்ந்திடுங் காடு
(நல்ல பெண்ணைப்பார் நீ தூதா')

கல்விக்கு தெய்வமாகிய கலைமகளே பெண்ணினம். கலைமகள் ஆடவர்களைச் சேர்ந்தவளல்ல. அவளுக்கு எங்கள் பேரிலேதான் விருப்பமதிகம். அவ்வாறிருந்தும் கலை மகளும் ஆண்களும் ஒரு கோத்திரத்தைச் சேர்ந்தவர் போல நினைத்துக் கல்வி கற்கின்ற ஆண்கள், பெண்களாகிய எங்களுக்கும் **வித்தையைப் படிப்பியுங்கள்** என வேண்டுவது போல, எழுதியுள்ளார்.

கணவன் அன்பு மிக மேலானது; ஈடு சொல்ல முடியாதது. எப்போதும் விரும்பவேண்டியது. இக் கருத்துக்களைத் தலைவி தோழியிடம் சொல்வதுபோல '**நாயகர் பட்சமடி** எனக்கது ஆயிரம் லட்சமடி' என்று பாடியுள்ளார். கணவனை எக்காலமும் பகைத்தல் கூடாது. எதிர் பேசலாகாது. அவ்வாறு செய்தல் நல்வழியல்ல எனக் காட்டி 'மார்க்கம் அல்லடி மானே, கணவருடன் மூர்க்கஞ் செய்வது தானே' என்று பாடினார். தலைவன் காட்டுகின்ற அன்பைத் தன் தோழிக்குக் கூறுவதுபோல 'எத்தனை ஆனாலும் பத்தாவைப் போல் எனக் கிசைந்தவர் யாரடி' எனக் கணவனின் மேன்மைக் குணங்கள் பலவற்றையும் தான் அடைகின்ற இன்பத்தையும் அக் கீர்த்தனைக்குள் காட்டியுள்ளார். படித்தவர்களிடையேயும் படிக்காதவர்களிடையேயும், மாமி மருமகள் சண்டை இன்று சிற்றூர்களோ, பேரூர்களோ எங்கும் காணலாம். மாமியார் மெச்சிய மருமகளோ, மருமகள் மெச்சிய மாமியாரோ இன்று நூற்றுக்குத் தொண்ணூற்றொன்பது குடும்பங்களில் இல்லை. அன்றைக்கும் இந்நிலை இருந்தது. எனவே வேதநாயகர் ஆனந்தக் களிப்புப்பாடிப் பெண்களுக்கு அறிவுரை புகட்டுகின்றார்.

1. "மாமிமேல் வன்மங் காட்டாதே —உன்றன்
சாமிக்கு மாமிக்குஞ் சண்டை மூட்டாதே

2. தலைவன் நெஞ்சைக் கரைக்காதே — மாமி
தலைமேலே நீ மிளகாயரைக்காதே

3. நாத்திமேல் கச்சை கட்டாதே — வெகு
சாத்திரமாயவள் தலையை வெட்டாதே "

இவ்வாறு 170 கண்ணிகள் எளிய நடையில் நகைச்சுவை ததும்பப் பாடி பெண்களுக்கு அறவழி காட்டுகின்றார்.

பெண்கள் நகைகள் அணிவதை ஆராய்ந்து, அளவுக்கு மிஞ்சிய விதத்தில் அணிவதைக் கண்டிக்கிறார். அவர் எழுதியுள்ளதை அப்படியே கீழே காட்டப்பட்டுள்ளது.

" படியாத பெண்களுடைய அறியாமையால் தங்களைப் பல சித்திர ஆக்கினைகளுக்கு உட்படுத்திக் கொள்ளுகிறார்கள். நீதிபதிகள் குற்றவாளிகளுக்குக் கால் விலங்கு மட்டும் போடுகிறார்கள். பெண்களோ வென்றால் உலக்கைக்குப் பூண் கட்டினதுபோல பாடகம், பாதசரம், தண்டை, சிலம்பு, கொலுசு முதலிய பல கால் விலங்குகளையும், காப்பு, தோடா, வளையல், கங்கணம் என்று பெயர் கொண்ட கை விலங்குகளையும், முத்துமாலை, சந்திர ஆரம் கண்டாரம் முதலிய பல கழுத்து விலங்குகளையும், தலைச் சிங்காரமென்று பெயர் பெற்ற தலை விலங்குகளையும், ஒட்டியாணம் என்னும் இடுப்பு விலங்கையும், மோதிரங்களாகிய விரல் விலங்குகளையும் தரித்துக் கொள்கிறார்கள். காதுகளிலும், மூக்குகளிலும், சல்லடைக் கண்கள்போல பல துவாரங்களைச் செய்து பல நகைகளை மாட்டுகிறார்கள். பெண்களுடைய தேகங்களையும், ஞான உபதேசம் நுழையாத அவர்களுடைய காதுகளையும் பல விலங்குகளிடுத் தண்டிப்பது நியாயந்தான் "

தாய் தகப்பன்மார்களால் நல்ல முறையில் வளர்க்கப்பட்டு, நற்குணமான பெண்ணின் பண்புகளை விவரித்துள்ளார்.

இக்கால எழுத்தாளர்கள் தாம் ஒன்றை எதுகை, மோனை அழகு படுத்தி விவரிக்கின்றதாக எண்ணுகின்றனர். சென்ற நூற்ருண்டிலேயே எவ்வாறு அழகு படுத்தி எழுதும் திறமையுண்டென நீதிபதி வேதநாயகர் எழுத்துக்களிலிருந்து உணரலாம். உரை நடையை எளிய முறையில் முதல் முதல் அழகுபட எழுதிய பெருமை நம் வேதநாயகரையே சாரும். அவர் எழுதியுள்ளவாறு கீழே காட்டப் பெற்றுள்ளது.

" அவள் புண்ணிய பொக்கிஷம். பொறுமைக்கு இருப்பிடம், ஞானக் களஞ்சியம், நற்குண பாத்திரம், கற்பலங்காரி, கன உபகாரி, அற்புத சுந்தரி, அறிவிலே மந்திரி, விற்பன விதாணி, விநய சம்பூரணி, அவள் வாடாத புஷ்பம், மங்காத தீபம், ஆடாத மாமயில், அலையாத மாங்குயில், ஓடாத புள்ளி மான், பறவாத பைங்கிளி, மாற்றில்லாத தங்கம், மாசில்லா மாணிக்கம், கோதில்லாக் கரும்பு, குறையில்லாச் சந்திரன், அவளைப் பார்த்தாலும் பசிதீரும், கண்டாலும் கலி நீங்கும், அவள் உயிர் போனாலும் ஒரு பொய் சொல்லத் துணியாள். பாவம் என்றால் பாம்பைக் கண்டதுபோல் நடுங்குவாள். எந்த வேலை செய்தாலும் கடவுளுடைய தியானத்தை மறவாள்; எந்த உயிரையும் சொந்த உயிர்போல் எண்ணி உபகாரஞ் செய்வாள். கணவனுக்குக் கொஞ்சமும் வருத்தமில்லாமல் குடும்பப் பாரங்களை யெல்லாம் தானே தாங்கிக் கொள்வாள்."

நற்பண்புகளை அழகுபட விவரித்த நீதிபர் தீக்குணம் படைத்த பொல்லாத பெண்ணொருத்தியைத் தம் புத்தகத்தில் பிரிதோரிடத்தில் விவரித்தெழுதியுள்ளார். அதுவும் கீழே காட்டப்பெற்றுள்ளது.

"பாவங்களுக்கெல்லாம் அவள் பண்டகசாலை, நன்மையெல்லாம் அவளுக்கு நஞ்சு, தீமை யெல்லாம் அவளுக்குத் தேவா

முதம் ; வம்பு வார்த்தைகள் எல்லாம் அவளுக்கு வாய்ப்பாடம் ; பொய்யிலே அவள் பூரணம் ; உண்மை பேசுவதில் அவள் ஊமை; புண்ணிய மென்றால் போராட்டம்; குற்றங்க ளென்றால் கொண்டாட்டம், சுயகுற்றங்களைப் பார்ப்பதில் அவள் சுத்தக் குருடி ; அந்நியர் குற்றங்களைப் பார்ப்பதில் அவளுக்கு ஆயி ரங்கண் ; ஏழைகளுக்கும் அவளுக்கும் ஏழாம் பொருத்தம் ; பிச்சை கேட்டவரை சிட்சை செய்வாள் ; எச்சிற் கையாலும் காகம் ஓட்டாள் ; அறுத்த கைக்குச் சுண்ணாம்பு கொடாள், பிள்ளைகள் ஆத்திச்சூடி படிக்கும்போது 'தா' என்று படித் தாலும் அவள் சண்டைக்கு வருவாள் ; அவளுக்கு முன்னே ஈயைப் பார்த்து 'ஈ' யென்று சொன்னாலும் கோபிப்பாள், அவளுக்குக் கோவில் இல்லை, குருவில்லை, பூசையில்லை; புனஸ்காரமில்லை, பணமே தெய்வம், பணமே குரு, பணமே ஜீவனம்.''

நற்குணமுள்ள பெண்ணின் பண்பு, தீக்குணமுள்ள பெண்ணின் இயல்பு இவற்றை விவரித் தெழுதியதோடு நூற்றுக்கணக்கான பக்கங்களில் பெண்ணுலகுக்கு அறவழி இது வெனவும் மறவழி எது வெனவும் காட்டியுள்ளார், கற்பு நிலையை வற்புறுத்திக் கணக்கற்ற சான்றுகள் காட்டி எழுதியுள்ளார். இக்காலப் பெண்கள் படித்து இன்புறத் தக்கவை அவை.

**வேலையினின்றும் ஓய்வு**

மாவட்ட நீதிபதி (District Munsif) யாக, பதினாறு ஆண்டுகள் பார்த்து வந்த நீதிபர் வேதநாயகர் ஒரு வழக்கி லேனும் இழுக்குடைய தீர்ப்பு இயம்பினாரில்லை. அறவழி நின்று, அன்பான சொற்களையே பேசி தம் அலுவல் கால மெல்லாம் சிறந்த வழிகாட்டியே வந்தார். ஏழைகளின் குறை களையே எப்போதும் கேட்டு அன்னாருக்குத் தம்மாலியன்ற

நல்லுதவிகளைச் செய்து வந்தார். பொய்யான வழக்குகளைக் கொண்டுவரும் புல்லர்களையும் தம் அன்புரையால், நேர்மை நெறியால், நல்லவர்களாக்கினர். கைக்கூலி வாங்கி வந்த கயவர்களை அழைத்து அறவுரை புகன்று மெய்க் கூலியின் மேன்மையை விளக்கித் தீய வழக்கத்தை விட்டொழிக்க வழி காட்டினர். வேதநாயகரின் குணமாண்பினையும், தொண்டின் சிறப்பினையும், ஒழுக்கப் பற்றினையும் அறிந்த பொது மக்கள், வேதநாயகரைக் **கவிஞர், நீதிபர், அறிஞர், தொண்டர்** என்று எங்கும் வாயார வாழ்த்திப் போற்றினர்.

மனித வாழ்க்கையில் இன்பமென்பது எப்போதும் இருப்பதில்லை. துன்பம் ஊடே வந்து எவரையும் துன் புறுத்தும். இத்துன்பம் நம் நீதிபரையும் விட்டுவிடவில்லை. பதினறு ஆண்டுகள் செய்துவந்த வேலையிலே சிறிதேனும் பழுதில்லாதிருந்த நிலையை உயர் மன்றத்தார் உணர்ந்திருந்தனர். அம்மன்றத்திற்கு **நெல்சன்** என்ற அதிபர் ஒருவர் புது அதிகாரியாக வந்து சேர்ந்தார். கைக்கூலி வாங்கும் கயவர்களில் சிலருக்கு வேதநாயகர் மீது வெறுப்பு. புதிதாக வந்த நெல்சனிடம் ஏதேதோ தீதுகள் பல சொல்லி வைத்தனர். நெல்சன் துரை நேர்மையற்றவன். நெஞ்சில் நல்லெண்ணம் இல்லாதவன். நீண்ட பல ஆண்டுகள் பணியாற்றிய நீதிபரின் ஊழியத்தைச் செவ்வனே ஆராயுந் திறமையற்றவன். ஆதலால் நீதிபர்மீது பிறர் சொல்லிய கோள் அனைத்தும் கொண்டு அவரைச் சோதனைப் போட்டுத் தொலைப்பதென கங்கணங் கட்டினன்.

திடீரென, முன்னறிவிப்பு எதுவுமின்றி மாயூரம் மாவட்ட நீதிஅலுவலகத்திற்கு உயர் நீதிமன்ற நெல்சன் துரை சோதிக்க வந்து சேர்ந்தான். அவன் வந்த அந்நேரத்தில் வேதநாயகர் உடல் நோய் மேலிட்டு, அலுவலகத்திற்கு வாராமல்

நோயினால் ஏற்பட்ட நிலையை எழுதியனுப்பிவிட்டு வீட்டில் படுத்திருந்தார். நெல்சனோ அலுவலக எழுத்தாளர்கள், வழக்குக் கட்டுகள், இதர பத்திரங்கள் அனைத்தையும் சோதனையிட்டு ஒவ்வொன்றிலும் காணத்தகு குறைகளெல்லாம் குறித்துக் கொண்டு சென்று விட்டான். சென்னை சென்றதும் குறைகளுக்குத் தக்க காரணங் காட்டுமாறு ஆணையொன்றனுப்பினான். ஆணை கண்ட நீதிபரோ இத்தகைய முரடன் செயலுக்கு மிக்க வருந்தி, தக்க காரணங்கள் காட்டி, விடை எழுதி அனுப்பினார். வேதநாயகர் விடையளித்ததில் விளக்கங்கள் பல இருந்தும் நெல்சனின் நேர்மையற்ற நெஞ்சினிலே அவை ஒன்றும் நிற்கவில்லை பதினாறு ஆண்டுகள் உண்மை ஊழியம் புரிந்தும் பலவகைத் தொண்டுகள் மக்கட்குச் செய்தும், நாட்டு மக்களின் நலன் ஒன்றிலே கண்ணுங்கருத்துமாயிருந்தும், இவ்வரிய செயல்கள் ஒன்றையும் சற்றும் ஆராயாத குறுநோக்குக் கொண்ட நெல்சன், கண்டபடி பல குற்றச்சாட்டுக்களை எழுதி, வேதநாயகரை வேலையினின்று நீக்குமாறு மேல் மன்றத்தாருக்கு அனுப்பினான். வேதநாயகரின் வேலைகளை நன்குணர்ந்த மேல் மன்றத்தார் இக் கடிதங் கண்டு திகைப்புற்றனர். என்றாலும் ஆங்கிலேயன் ஒருவன் எழுதியனுப்பும் எழுத்துக்கு மதிப்புக் கொடுக்க வேண்டுமென்றும் எண்ணினர். எனவே வேதநாயகருக்கு நேராக எழுதி வேலையினின்றும் ஓய்வு பெற்றுக்கொள்ளுமாறும், உதவிச் சம்பளம் (Pension) இறுதிக் காலம்வரை பெற்றுக் கொள்ளலாம் எனவும் எழுதிய வேண்டுதல் ஒன்றனுப்பினர்.

தம்முடைய நீண்டகால உழைப்பு, உடல் நோய், குடும்பப் பொறுப்புகள், இன்னும் செய்ய விரும்பிய தமிழ்த் தொண்டு, மாயூரமாகிய தாம் வாழும் ஊருக்குச் செய்ய விரும்பிய சேவை, முன்பு ஒரு கால் முன் பின் ஆராயாது

முடிவு செய்த மேஸ்தர் கிரீன்வே, இப்போதும் தப்பு வழியில் முடிவு செய்த நெல்சன் இத்தகைய ஆங்கிலேயரின் அநீதிப் போக்கு, மேல் மன்றத்தார் தமக்கு விடுத்துள்ள வேண்டுதல் அனைத்தையும் ஆழ்ந்து ஆராய்ந்த வேதநாயகர் வேலையினின் றும் விலகிக்கொள்ள முடிவு செய்தார். மேல் மன்றத்தாரின் வேண்டுதலுக்கு இசைவு தந்து எழுதியனுப்பி அவ்வாறே தம் வேலையினின்றும் ஓய்வு பெற்றார். கொடிய குணம் படைத்த நெல்சனோ தன்னெழுத்துக்குத் தக்க தீர்ப்புக் கிடைத்து வேத நாயகர் விலகியதைக் கண்டு மகிழ்ந்தான். என்றாலும் இறு திக் காலம் வரை உதவிச் சம்பளம் பெறும் உத்தரவு பிறப்பு வித்ததைக் கண்டு, மீண்டும் மேல் மன்றத்தாருக்கு அதை ரத்துச் செய்யுமாறு எழுதினான். இரண்டாம் தடவை எழு திய முரண்டான கடிதத்தை மேல் மன்றத்தார் மதிக்கவில்லை. இறுதிவரை வேதநாயகர் உதவிப் பணம் தீது ஒன்று மில்லா மல் பெற்று வந்தார். எல்லாம், இறைவன் திருவருள் என்று எண்ணுகின்ற இனிமைக் குணம் படைத்த அறிஞர் வேதநாயகர் ஒருவர் மேலும் குறை சொல்லாமல் இறைவனின் திருவருளை எண்ணி எண்ணிப் பாடுகிறார்.

"ஒருவர் மேலுங் குறை நீ கூறாதே—திரு
உளச் செயற்காப் பிறரைச் சீறாதே ( )

துன்ப மென்ப தெவர்க்கும் சுதந்தரமே—அதைத்
தொலைப்பதற் குண்டோ ஒரு தந்திரமே
இன்பம் உற்றவரெவர் நிரந்தரமே—பிறர்
இடிக்க வந்தாலுங் கட்டி—அடிக்க வந்தாலும் பழி
முடிக்க வந்தாலும் உயிர்—மடிக்க வந்தாலும் நீ"

**நகர் மன்றத் தலைவர்**

வேலையினின்றும் விடுதலையான பின்பு, அறிஞர் வேத நாயகர் தம் இல்லத்தில் ஓய்வு பெற்று நாட்களைக் கழித்து

வந்தார். மாயூர நகர மன்றத் தலைவர் தேர்தல் வந்தது. வேதநாயகரின் மாண்பினை மாயூர நகர மக்களனைவரும் நன்கு உணர்ந்தவர். ஆற்றங்கரைத் தம்பி முதலியாரென்று பெயர் பெற்றிருந்த நமச்சிவாய முதலியார், திருவாரூர் சபாபதி முதலியார், உடையூர்த் தில்லை நாயகம், இவரனைய நெருங்கிய நண்பர்கள் பலர் ஒன்று கூடினர். நகர் மன்றத் தலைவராக நம் வேதநாயகரைத் தெரிந்தெடுப்பதென முடிவு செய்தனர். இத் தலைவர்களின் பல்வேறு முயற்சியால் வேதநாயகர் அத் தலைமையை ஏற்றார். உண்மை உள்ளத்தோடு, பொறுப் புணர்ச்சி மாறாமல் செயலாற்றி உழைக்க விரும்பும் எவருக்கும் எங்கும் தலைமைப்பதவி தானே வந்து சேரும். நகர் மன்றத் தலைவராக அமர்ந்த நம் வேதநாயகர் குடி தண்ணீர் வசதி, குடியிருப்பு வீடுகள் அமைப்பு, சாலைகள், கழிவு இடங்கள் அமைத்தல், கல்விக் கூடங்கள் நிறுவல், ஊரினை அழகு செய்தல், முதலியவைகளில் கருத்தைச் செலுத்திச் செய்த சீர் திருத்தங்கள் ஒன்றல்ல, இரண்டல்ல எண்ணமுடியாதவை. இச் சீர் திருத்தங்களைக் கண்ட நகர மாந்தர், நம் அறிஞரை, நகர் மன்றத் தலைவராக அல்ல **'நகரின் தந்தை'** என்றே வாயார, மனமாரப் புகழ்ந்தனர். உள்ளத்தாற் பொய்யாமல் தொண்டாற்றிய அறிஞர் ஊராரின் உள்ளத்துள் எல்லாம் உறையலானார்.

## முதுமை வாழ்வு

### புனை கதை புகுத்திய முதல்வன்

ஆங்கிலேய மகா கவி செகப்பிரியர் (Shakespeare) என்பவர். அவர் எழுதியுள்ள பெருங் காவியத்திலே காணும் கதைகளில் கதாநாயகனுக்கே சிறப்புக் காணலாம். அது போன்றே பல மகா கவிகள் எழுதியுள்ளனர். இவ்வழக்கத்தை முற்றிலும் மாற்றியமைத்து பெண்பாலொருவர் கதா நாயகனை நம்வழிக்குக் கொண்டு வந்ததாகக் கற்பனை பண்ணி **பிரதாப முதலியார்** என்றொரு உரை நடை நூல் செய்தார். முதல் முதலெழுந்த புனை கதை (நவீனம்). கதை முழுவதும் தன் கூற்றாகவே அமைத்துள்ளார். இன்று வரை எத்தனையோ நூற்கள் புனை கதைகளாக எழுதப்பட்டிருப்பினும் வேத நாயகர் கருத்துக்கும், நடைக்கும் ஈடு சொல்லக் கூடிய நூல் வெளி வரவேயில்லை. அறிஞர் உலகம் அன்றும் இன்றும் என்றும் இக்கருத்தை ஏற்கும்.

ஓய்வு நேரத்தை யெல்லாம் ஆய்வு நேரமாக மாற்றிக் கொண்டு எழுதத் தொடக்கினர். தம்மால் முன்னர் எழுதப் பட்ட நீதி நூல், பெண் மதிமாலை, சமரசக் கீர்த்தனை ஆகிய வற்றில் காட்டியுள்ள சிறந்த நீதிகளை யெல்லாம் திரட்டி புனை கதையாக பிரதாப முதலியார் என்ற பெயரில் வெளியிட்டுள்ள தாக வேத நாயகரே இந்நூலின் முன்னுரையில் எழுதியுள் ளார். சுந்தரத் தண்ணி, ஞானம்பாள் என இரு பெண்பாலார் எடுத்துக் காட்டப் பெற்றுள்ளனர். கல்வியாற் சிறந்து, கட மைகளை ஒழுங்குறச் செய்து வாழ்ந்த பெண்களின் திலகங்

களாக இவ்விருவரும் காட்டப் பெற்றுள்ளனர். பிரதாப முதலியாரும், அவருடைய தந்தையாரும் உயர்ந்த செல்வக் குடியில் பிறந்தவராகக்காட்டி கல்வியறிவில் போதுமான அளவு பண்பாடில்லாதவர்களாகக் காட்டப் பெற்று, அப்பெண்பாலா ரால் நற்பண்பாடுகளுக்கு ஆளாக்கப்பட்டவர் போல் சித்தரிக் கப்பட்டுள்ளனர். கதை முழுவதையும் படித்துப் பார்ப்போ மானால், பெற்ற பிள்ளைகள் மீது காட்டும் அன்பு, உடன் பிறந் தார் மீதுள்ள அன்பு, கணவர் மனைவியர் வாழ்க்கை, கற்புச் சிறப்பு, உலக மக்கட்குச் செய்ய வேண்டிய நன்மைகள், நேர்மை வழி, நன்றியறிதல் முதலிய பண்புகள் நெடுகிலும் காண இயலும். மேலும் சாத்திரங்களில் காணக் கூடிய பொய் யானவை, பேய்க் கொள்கை மறுப்பு, நகைச் சுவைக் கட்டங் கள், வியத்தகு நிகழ்ச்சிகள் காணலாகும். கிட்டத்தட்ட நானூறு பக்கங்கள் கொண்ட இவ்வுரை நடை நூல் முழுமை யிலும் தமிழ் நாட்டு வழக்க பழக்கங்கள் பல காணக் கிடக்கின் றன. நம் நாட்டில் சாதாரண மக்கள் பால் வழங்குகின்ற பழமொழிகள் நூற்றுக் கணக்கானவை, பொருத்தமான இடங் களில் புகுத்தி எழுதப்பட்டுள்ளன. இவை எவரையும் கவர்ச் சிக்கும். சுருக்கமாகக் கூறினால் இப்புத்தகத்தைப் படிக்க வேண்டுமென எவர் தொடக்கினாலும், முடிக்கும் வரை நூலைக் கீழே வைக்க மனமில்லாதபடி கருத்துக்களும், தமிழ் நடை யும், ஒருங்கே பொருத்தப்பட்டிருப்பதை உணர்வர். கல்லூரி களில் இன்டர்மீடியேட்டு மாணவருக்குத் **தமிழ்த் துணை பாடப் புத்தகமாக** பல ஆண்டுகள் வைக்கப்பட்டுள்ளது. இதி லிருந்தே அறிஞர் உள்ளத்தில் இந்நூலுக்கு உள்ள இடம் அறியத்தக்கது.

இந்நூல் அச்சாகி வெளிவந்த பின் பிறநாட்டறிஞரும் இந்நூலைப் பெரிதும் போற்றித் தம் ஆங்கிலத்திலும் மொழி



வேதநாயகர் கல்லறை

பெயர்த்தனர். தமிழ் நாடு மட்டுமல்ல, இந்தியா முழுமையும் இந்நூல் பரவியது. இந்நூலையறியாத அறிஞர் அன்று தமிழ் நாட்டில் இல்லை. செய்தித் தாட்களெல்லாம் இதன் சிறப்பை எழுதி வெளியிட்டன. வேதநாயகரின் தமிழ்த் தொண்டும், மக்களை நல்வழியில் பண்படுத்த வேண்டுமென்று கொண்ட மேலான எண்ணமும் தமிழ் நாடு முழுமையும் பேசப்பட்டன.

1887-ம் ஆண்டில் மீண்டுமொரு தமிழ்ப் புனைகதை ' சுகுண சுந்தரி ' என்ற பெயரால் வெளியாயிற்று. 1889-ல் ' சத்திய வேதக் கீர்த்தனை ' என்ற கிருத்தவ நூல் வெளியிட்டார்.

**விண்ணுலகு நண்ணல்**

நீதிபதியாக நிலைத்து, அறங்கூறும் அன்பராக அமைந்து, எழுத்தாளராக இயங்கி வாழ்ந்த மேதை வேதநாயகரையும் நோய் விட்டபாடில்லை. சிறிது சிறிதாக உடல் வீக்கம் ஏற்பட்டது. அறுபத்துமூன்று ஆண்டுகள் வாழ்ந்த அவருடைய இறுதிக் காலம் வந்தெய்தியது. மருந்துகள் பல அருந்தியும் நோய் திருந்தவில்லை. தாம் இனி உலகில் வாழ இயலாதென உணர்ந்தார். எல்லா நண்பர்களையும் காணவேண்டுமென்ற பேராவல் உதித்தது. எப்போதும் நகைச்சுவையில் ஈடுபட்ட அறிஞர் இறுதி நாளிலும் அதையே கையாண்டார். தாம் உடல் நலம் காரணமாக வேற்றூர் செல்வதாக எழுதி அனைவரையும் தருவித்து, அவருடன் உரையாடி, நன்றியுரைகள் பல நவின்றும் எழுதியும் அன்றைப் பகற்பொழுதைப் போக்கினார். **21—7—1889**-ஆம் நாள் மாலை மத குருக்களைத் தம் இல்லம் வருமாறு செய்து, வேத முறைப்படி, தாம் செய்ய வேண்டிய கருமங்கள் பலவற்றையும் செய்துமுடித்தார். அமைதி நிலவியது. எவ்வித உடல் வருத்தமுமின்றி இரவு 11 மணிக்குத் தம் **பூத உடல் நீத்தார்.**

மறுநாட் காலை இத்துக்கச் செய்தி நகரெங்கும் பரவியது. நகர் முழுதும் ஒருங்கு திரண்டது. பூக்களால் அழகு செய்யப்பட்ட தேரொன்று அமைத்து, மத குருக்கள் சங்கீதம் பாடிவர, சுற்றத்தார் சூழ்ந்துவர, நண்பர்கள் நகர மக்கள் கண்ணீர்வடிக்க, தமிழறிஞர் வேதநாயகரின் உடல் கோவிலுக்குக் கொண்டுவரப்பட்டது. ஆங்குச் செய்யவேண்டிய மதச் சடங்குகள் நிறைவேறியபின் அழகியதோர் கல்லறையில் அவரது நல்லுடல் வைக்கப்பட்டது.

பூத உடலை நீத்த புண்ணியன் வேதநாயகர் புகழுடம்பை விடுத்துச் சென்றார். மறுநாட் காலை '**இந்து**'ப் பத்திரிக்கை போன்றவை தலையங்கம் எழுதி வேதநாயகரின் தொண்டுக்கு நன்றி செலுத்தின. எல்லாப் பத்திரிக்கைகளும் தத்தம் கருத்தை எழுதிக் குவித்தன. உள்ளத்தாற் பொய்யாது ஒழுகிய உத்தமரின் புகழ் உலக மக்கள் அனைவர் உள்ளத்திலும் நிறைந்தது.

நீதிதனை நிலைநாட்டிய நேர்மையாளர். நீதிநூல் செய்து அறம் நிலைபெறச் செய்தவர். அறிஞர்கள் பலர் தொடர்பு கொண்ட அன்பர். பஞ்சத்தில் கஞ்சிவார்த்து மக்கட் பசி போக்கிய மாயூரம் நீதிபதி. தமிழிசை உண்டாக்கிய தக்கோர். பெண்ணுலகை விழிப்படையச் செய்த அண்ணல். உரைநடை நவீனம் எழுதி உதவிய வழிகாட்டி. இறுதிவரை நகைச்சுவைபட எழுதிய இனிமையாளர். சொல்லும் செயலும் ஒன்றாகக் காட்டிய தூய்மையாளர். உண்மைக் கிருத்துவ நெறிபற்றிய உத்தமர். எல்லோருக்கும் நல்லவர். ஏழைகளின் நண்பர், என்றாற்போன்ற இவரது புகழ் தமிழ் நாட்டில் என்றும் நின்று நிலவுவதாக. வாழ்க வேதநாயகர் புகழ்.